# தொடக்கக் கல்வி ஆசிரியப் பட்டயக் கல்வி

## DIPLOMA IN ELEMENTARY EDUCATION D.El.Ed.

பருவம் - 1

## தாள் 102
## கல்வியின் அகநோக்கமும் சமூக வரலாற்று அடித்தளமும்

கேரள அரசு
பொதுக் கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2019**

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT

©
Department of Education
Government of Kerala

# முகவுரை

# உள்ளடக்கம்

## பருவம் – 1

### தாள்–102 கல்வியின் அகநோக்கமும் சமூக வரலாற்று அடித்தளமும்


அலகு 1 - கல்வியின் வளர்ச்சியும் மேம்பாடும்

அலகு 2 - கேரளக் கல்வி - வளர்ச்சியும் மேம்பாடும்

அலகு 3 - கல்வித் தத்துவங்கள்

அலகு 4 - ஆசிரியக் கல்வி

# கல்வியின் அகநோக்கும் சமூக வரலாற்று அடித்தளமும்

## முன்னுரை

தனிமனித மேம்பாட்டுச் செயலாக்கமே கல்வி. குழந்தையின் கல்வி பெற்றோர்களின் சமூகத்தின் பொறுப்பாகும், மனித சமூகத்தின் தோற்றத்துடன் இணைந்தே கல்வியும் நடைமுறையில் வந்தது. சமூகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஏற்பக் கல்வி முறைகளும், உள்ளடக்கங்களும் மாறவும், மேம்படவும் செய்தன. இன்று கல்வியை நடைமுறைப்படுத்துதல் நாடுகளின் கடமையாக மாறியுள்ளது.

தனி நபரின் வளர்ச்சியும் முன்னேற்றமும் சமூகத்திலேயே நடைபெறுகிறது. ஒவ்வொருவரும் சமூக வாழ்க்கை முறை வழியாக மொழித்திறன்கள், நடத்தை முறைகள், விட்டுக்கொடுத்து வாழும் திறன் என்பனவற்றை அடைகின்றனர். தனிநபர் வளர்ச்சி பெறுதல் சமூக மரபைச் சார்ந்துள்ளது. மொழி, சமயம், பண்பாடு, சடங்குகள், வாழ்க்கை முறைகள், என்பனவே சமூகத்தின் மரபைத் தீர்மானிக் கின்றன. மரபைத் தீர்மானிக்கின்ற இத்தகையை காரணிகளை ஒவ்வொருவரும் விமரிசனப் பார் வையில் மதிப்பிட்டுத் தன்வயப்படுத்துவதுடன் தனிநபர் வளர்ச்சியும் பெறுகின்ற செயலே கல்வி.

கல்வியின் உள்ளடக்கத்தையும், முறையையும் தீர்மானிப்பன ஒவ்வொரு காலகட்டத்தின் சமூகத் தேவைகள் ஆகும். சமூக வாழ்க்கையின் தொடக்க நிலைகளில் வாழ வழிவகுக்கும் வழிமுறை களை அறிவதற்கு உரிய பயிற்சிகளைக் கல்வி அளிக்கின்றது. தொழில்மயம் சார் காலகட்டத்தில், வேலை செய்வதற்கு ஏராளமானோர் அவசியம் எனும் சூழலில் உலகளாவிய கல்வி என்ற கருத் தாக்கம் நடைமுறையில் வந்தது. பொதுக்கல்வி வலுப்படுவதுடன் அறிவியல் உணர்வும் சமூகச் சிந் தனைகளும் மானிடக் கண்ணோட்டங்களும் அந்தக் காலத்தில் கல்வி வாயிலாக அளிக்கப்பட்டன. மூடநம்பிக்கைகளற்ற, சமூக உணர்வுமிக்க நபர்களை உருவாக்குவதன் வாயிலாக மட்டுமே தொழில் மயம் சார் காலகட்டத்திற்குத் தேவையான தொழிற்படையை உருவாக்க முடியும் என்பதால் அத்த கைய கல்வியை அக்காலத்தில் வடிவமைத்தனர்.

சமூக ஆர்வமே கல்வியை வடிவமைக்கிறது. எனினும் அந்தச் சமூகத்தைச் சீர்திருத்தி அமைக் கும் மிகு ஆற்றல் கல்விக்கு உண்டு. மனிதகுலத்தை முன்னேற்றத்தை நோக்கிச் செலுத்திய கண்டு பிடிப்புகளைக் குறித்தும், சமூகச் சீர்திருத்தத்திற்குக் காரணங்கள் ஆன செயல்பாடுகளைக் குறித் தும் கற்கின்ற மாணவர்களுக்குத் தாங்கள் வாழ்கின்ற சமூகத்தில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைக் குறித்து சிந்திப்பதற்கு உரிய விமர்சினம் சார் அறிவு தோன்றும். நடைமுறையில் உள்ள கட்டமைப்புகளையும் முறைகளையும் படைப்பு சார்ந்து விமரிசனம் செய்து சீர்திருத்தத்தை நோக் கிக் கொண்டு செல்ல அவர்களால் இயலும் . இத்தகைய சமூக இலக்குகளுடன் தனிநபர் வாழ்க்கை மேம்படவும் கல்வி துணைபுரிகிறது. கல்வி அறிவுபெற்ற ஒரு நபருக்கு வாழும் வழிமுறைகளை அடையும் திறனும், வாழ்க்கையைத் திட்டமிட்டு முன்னோக்கிச் செலுத்தும் உணர்வும் இருக்கும். இன்று உலகம் முழுவதும் வறுமையை அகற்றும் ஒரு நிகழ்வாகவே எழுத்தறிவின்மையை அகற்று தலும் பார்க்கப்படுகிறது.

ஒரு தனிநபரின் குணத்தையும், திறனையும், எதிர்காலத்தையும் வடிவமைக்கின்ற மிக மகத்தான தொழிலே கற்பித்தல், மக்கள் என்னை ஒரு நல்லாசிரியராக நினைவுகூர்வார்கள் எனில் அதுவே எனக்குக் கிடைக்கின்ற மிகச் சிறந்த விருதாகும். ( எ பி ஜெ அப்துல்கலாம்).

சமூகத்தை வடிவமைப்பதில் ஆசிரியரின் பங்கு மிகப்பெரியது. அதனால் ஆசிரியக் கல்வியும் சிறப்பிடம் பெறுகிறது. ஆசிரியக் கல்வியில் முக்கியப் பங்கு வகிக்கும் பாடப்பொருளே கல்வியின் அக நோக்கும் சமூகம் வரலாற்று அடித்தளமும். கல்வியின் அகநோக்கங்கள், சமூக அறிவியல்,

வரலாறு என்பன பற்றி ஒவ்வொரு ஆசிரியரும் நன்கு அறிந்திருத்தல் இன்றைய கல்விச் செயல் பாட்டை முன்னோக்கி வழி நடத்துவதுடன் புனரமைப்பிற்கும் துணைபுரியும்.

இந்தப் பாடப்பொருளின் உள்ளடக்கமும் செயல்பாடுகளும் மூன்று பருவங்களிலாக வகைப்படுத் தப்பட்டுள்ளன. முதல் பருவத்தில் நான்கு அலகுகள் உள்ளன.

கல்வியின் வளர்ச்சியும் மேம்பாடும், கேரளக் கல்வி – வளர்ச்சியும் மேம்பாடும் கல்வித் தத்துவங்கள், ஆசிரியக் கல்வி என்பனவே அவை. ஒவ்வொரு அலகின் கூறுகளாகக் கற்றல் அடைவுகள், உள் ளடக்கம், முக்கியக் கருத்துகள், அவற்றின் விளக்கங்கள், தொடர் செயல்பாடுகள், மதிப்பீட்டுச் செயல் பாடுகள் என்பன உட்படுத்தப்பட்டுள்ளன. இவை தொடர்ந்து வரும் அலகுகளில் விளக்கப்பட்டுள் ளமையைக் கவனிக்கவும்.

## அலகு 1

# கல்வியின் வளர்ச்சியும் மேம்பாடும்

பள்ளிக்கூடம் ஒரு சமூக நிறுவனம் ஆகும். சமூக மேம்பாட்டில் பள்ளிக்கூடங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

பள்ளிக்கூடத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு, இந்தியக் கல்வியின் வளர்ச்சியும் மேம்பாடும், இந்தியக் கல்வியின் வளர்ச்சிக்குத் துணைபுரியுமாறு தோற்றுவித்த சட்டங்களும், கல்விக் குழுக்களும், சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியக் கல்வியின் முன்னேற்றம், இன்றைய இந்தியக் கல்வி சந்திக்கின்ற பிரச்சினைகள் என்பன குறித்து முழுமையாக விவாதிக்கின்ற அலகே இது. இந்தியக் கல்வியின் வரலாறு சார் பகுப்பாய்வின் வழியாகக் கல்வி சந்திக்கின்ற பிரச்சினைகளைப் பகுத்தறிந்து தேவையான தீர்வு , அறிவுரைகளை வடிவமைக்க இயலவேண்டும். இதற்குத் தேவையான கருத்து சார் அடித்தளத்தை உருவாக்குவதே இந்த அலகின் நோக்கம்.

## கற்றல் அடைவு

கல்விக்கும், சமூகத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் பகுப்பாய்வு செய்து அறிந்து கொள்ளுதல்.

## முக்கியக் கருத்துகள்

- பள்ளிக்கூடம் ஒரு சமூக நிறுவனம்.
- பள்ளிக்கூட வளர்ச்சியில் சமூகத்திற்கும் சமூக வளர்ச்சியில் பள்ளிக்கூடத்திற்கும் பங்கு உண்டு.
- கல்வியின் உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பது சமூகக் கண்ணோட்டமும் கருத்துகளும் ஆகும்.
- பொதுப் பள்ளிக்கூடங்கள், சமயச் சார்பற்ற ஜனநாயக நிறுவனங்கள்.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உங்களின் நிலைப்பாடு என்ன? (அலகின் கற்றல் உள்ளடக்கத்தில் செல்வதன் முன்னர் ஆசிரியர் செய்ய வேண்டிய மதிப்பீடு செய்தலுக்கு உரிய மாதிரி வினாக்கள்)**

- கல்விக்குச் சமூக இலக்குகள் உள்ளனவா? உள்ளன எனில் எவை?
- பள்ளிக்கூடம் ஒரு சமூக நிறுவனம் எனக் கூறுதல் எதனால்?
- நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் கல்வி துணைபுரிகிறதா? எதனால்?
- கேரளத்தில் பள்ளிக்கூடங்கள் சமூக ஆர்வங்களுக்கு ஏற்பச் செயல்படுகின்றனவா? எதனால்?

இந்த மண்டலத்துடன் தொடர்புடைய கருத்துகளை வடிவமைப்பதற்கு, வாசித்தல் வழியாகக் கருத்துகளைச் சேகரிக்கலாம்.

இதற்காகப் பயன்படுத்த வேண்டிய புத்தகங்கள்

1. வித்யாப்யாசத்தின்றெ சாமூக்ய பூமிக - ஜெ. ஜோசப் (கேரள பாஷா இன்ஸ்டிட்யூட்)
2. Sociology - Principle of Sociology with an introducation to Social thouht - C.N. Shankar Rao. S. Chand & Company Ltd.
3. வித்யாப்யாசம் - டாக்டர் கெ. சிவதாசன் பிள்ளை (கலா நிகேதன், நந்தாவனம்)

## கல்வி என்ற நிறுவனம்

*சமூக அறிவியலின் கண்ணோட்டத்தில் கல்வி ஒரு நிறுவனம் ஆகும். நிறுவனம் என்றால் ஒரு கட்டிடம் அல்ல. சமூக வாழ்வின் முக்கிய இலக்குகளை நிறைவேற்றுவதற்காக வடிவமைத்த முறைசார் அமைப்புகளே அவை. குடும்பம், அரசு, பொருளாதாரம், கல்வி, சமயம் என்பன முக்கிய நிறுவனங்கள் ஆகும்.*

*ஆதி சமூகத்தில் கல்வி என்ற நிறுவனம் இல்லை. தந்தை மகனுக்கு வேட்டையாடக் கற்றுக் கொடுத்தார். அது கல்வி அல்ல, தந்தையின் குடும்பம் சார்ந்துள்ள கடமையாகும். மனிதப் பண்பாடு வளர்ந்து சிக்கலானதுடன் கல்வி அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் நிலை ஏற்பட்டது.*

*பேரரசுகள் வளர்ந்த போது வரிபிரித்தலும், ஆவணங்களைப் பாதுகாத்தலும் அவசியம் ஆயின. இதற்குக் கல்வி கற்றவர்கள் வேண்டும். ஐரோப்பாவில் சமயங்கள் வளர்ந்த போது சமயப் போதகர்கள் தேவைப்பட்டனர். அவ்வாறு எழுதுவதற்கும், சமயப் போதகர்கள் ஆவதற்கும் படித்தவர்களே வரலாற்றில் முதல் மாணவர்கள். பாரதத்தில் அது சமயச் சார்புடையதாக அமையவில்லை. இது வளர்ந்து மேம்பட்டு நிலையான ஆசிரியர்கள் உள்ள பள்ளிக்கூடம் ஆனது. அங்கிருந்து நிலையான கல்வி கற்கும் முறை நடைமுறையில் வந்தது. ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூக வாழ்வின் தேவைகளுக்கு ஏற்ப மனித சமூகத்தை வடிவமைத்தலே கல்வியின் தேவையாக மாறிற்று.*

## பள்ளிக்கூடம் ஒரு சமூக நிறுவனம்

முறைசார் கல்வி மிக வலுப்பெற்றிருக்கும் இக்காலத்தில் நம் நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்களின் வரலாற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு கதை உண்டு. அவற்றைக் கட்டி எழுப்பியது வட்டாரச் சமூகமாக இருக்கலாம். இதற்கான ஊக்க சக்தி வட்டார மாணவர்களின் கல்வி ஆகும். கேரளத்தின் இன்றைய முன்னேற்றத்தின் முக்கியக் காரணம் அனைத்துப் பிரிவினரும் கல்வி பெற்றனர் என்பதாகும், ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள பள்ளிக்கூடங்கள் மாணவர்களின் கல்வியறிவுக்கு மட்டுமல்ல, சமூகத் தேவைகளுக்கும் பயன்படுத்தும் முக்கிய மையங்கள் ஆகும்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள பள்ளிக்கூடங்கள் வட்டாரச் சமூகத்துடன் மிக இணைந்து செயல்படுகின்றன. தங்கள் குழந்தைகள் கல்வி தேடும் நிறுவனம் என்ற நிலையில் அனைவருக்கும் அதனுடன் ஆர்வம் உண்டு. பள்ளிகூடத்திற்காக எதைச் செய்யவும் அவர்கள் ஆயத்தமாக உள்ளனர். அதனால் இவை வட்டார ஒருங்கிணைப்புகளை வளர்த்துவதற்குத் துணைபுரியும் மையங்களும் ஆகும். பள்ளிக்கூடங்கள் தோற்றத்தில் பழமையின் மணம் வீசுவன ஆயினும். நாட்டின் முன்னேற்றதிற்கு அடித்தளம் அமைத்த நிறுவனம் என்ற நிலையில் சமூக உள்ளங்களில் பள்ளிக்கூடத்தின் மேல் அன்பு என்றுமே நிலைத்திருக்கும். சமூகம் பள்ளிக்கூடத்தையும், பள்ளிக்கூடம் சமூகத்தையும் வடிவமைக்கின்ற ஆரோக்கியம் மிக்க ஒரு மரபே நடைமுறையில் உள்ளது.

## பள்ளிக்கூடம் சமயச் சார்பற்ற ஒரு ஜனநாயக நிறுவனம்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அதன் அருகாமையில் உள்ள சமூகத்தின் மாணவர்களே படிக்கின்றனர். சாதி. சமய இன வேறுபாடின்றி, பள்ளிக்கூடம் அனைவருக்கும் உரியது. அனைத்துப் பிரிவினரும் பள்ளிக்கூடத்தில் தோளோடு தோள் சேர்ந்து கற்பதனால் சமயச் சார்பற்ற ஒரு சூழலை உருவாக்குவதில் பள்ளிக்கூடங்கள் முக்கியப் பங்குவகிக்கின்றன. அதனால் அவற்றைச் சமயச் சார்பற்ற ஜன

நாயக நிறுவனங்கள் என்று அழைக்கலாம். இந்திய அரசியலமைப்பு வடிவமைத்துள்ள சமயச் சார் பற்ற ஜனநாயகச் சமூகத்தின் படைப்பில் பொதுப்பள்ளிக்கூடங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## தொடர் செயல்பாடுகள்

1 நடைமுறையில் உள்ள பள்ளிக் கல்வி மாணவர்களின் ஆளுமை மேம்பாட்டிற்குத் துணைபுரி கிறதா? விமரிசனப் பார்வையில் மதிப்பீடு செய்க.

2. பொதுப் பள்ளிக்கூடங்களின் வீழ்ச்சி சமூக வாழ்க்கையில் எதிர்விளைவுகளை உருவாக்கும் என்ற கூற்றிற்கு உங்கள் கருத்தாடலைத் தெளிவுபடுத்துக.

3. உங்கள் வட்டாரத்தில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளிக்கூடத்தைப் பற்றித் தகவல் சேகரிப்பு நடத்தி அறிக்கை தயாரிக்கத் தெரிந்து கொள்ள வேண்டிய காரியங்கள்

- பள்ளிக்கூடத்திற்கும் வட்டார நிறுவனங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு
- பள்ளிக்கூடத்திற்கும் பெற்றோர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு.

## இந்தியக் கல்வி

**கற்றல் அடைவு:** பல்வேறு கால கட்டங்களில் உள்ள இந்தியக் கல்வியின் தனிச்சிறப்புகளைப் பகுப்பாய்வு செய்தல்.

### முக்கியக் கருத்துகள்

- இந்தியக் கல்வியின் வளர்ச்சியும் மேம்பாடும்.
- வேத காலக் கல்வியியின் சிறப்பியல்புகள், உள்ளடக்கம், கற்றல் முறை
- புத்த, சமண, இசுலாமியக் கல்வி - உள்ளடக்கம், கற்பித்தல் முறை
- ஆங்கிலேயக் கல்வியின் பரவுதலும் சிறப்பியல்புகளும்.
- சுதந்திரத்தின் பின்னர் கல்வி வளர்ச்சி, முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட துறைகள், நிலவர- விவரக் கணக்குகளைப் பகுப்பாய்வு செய்து விமரிசனக் கண்ணோட்டத்தை உருவாக்குதல்.

### சான்றாதாரம்


1 இந்தியன் வித்யாப்யாசம் நூற்றாண்டுகளிலூடே– தாயாட்டு சங்கரன் ( கெ எஸ் டி எ பிரஸ்தீக ரணம்)

2 வித்யாப்யாசம் பாரதத்தில் - டாக்டர் டி கெ முகமது - பாஷா இன்ஸ்டிடியூட்

3. Education in India (1781-1985) Policies planning and implimentation. (Centre for Research in Rural & Industrial Development – 1985)

4. www.advice.uncl.com, www.wikipedia.org, www.m.grin.com.


### கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

- இந்தியாவுக்கே உரிய கல்வி மரபு இருந்ததா? இருந்தது எனில் அதன் குணநலன்கள் எவை?
- சுதந்திரம் அடைந்த போது இந்தியாவின் கல்வித்தரம் எவ்வாறு இருந்தது?
- 14 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி நடைமுறைப் படுத்தப்படும் என்று அரசியலமைப்பு அடிப்படைக் கோட்பாடுகளில் சேர்த்ததன் காரணம் என்ன?

- சுதந்திரத்தின் பின்னர் இந்தியக் கல்வித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றிக் கூறும் போது குறிப்பாகச் சொல்ல வேண்டிய தாக்கங்கள் எவை? கல்வி என்பதில் மாநிலங்கள் வேறுபட்ட தரத்தைக் கையாள்வதன் காரணம் என்ன?

## 1. வேதகாலக் கல்வி

பண்டைய பாரதத்தின் கல்விமுறை பற்றி வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள் என்பனவற்றிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

### கல்வியின் இலக்குகள்

தனிநபரின் முழுமையான வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. இது உடல்- உள்ளம்- ஆன்மீகம் சார்ந்த வளர்ச்சி ஆகும். தனிநபரின் வாழ்க்கையைப் பிரம்மசர்யம், இல்லறம், வானபிரஸ்தம், சன்னியாசம் என நான்காக வகைப்படுத்தி அவற்றின் வழியாக முழு வளர்ச்சியை எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் ஆன்மா முத்தி பெறுவதற்கும் தேவையான கல்வியே திட்டமிடப்பட்டுள்ளது. பௌதீக இலாபங்களுக்கு அப்பால் என்றும் நிலைத்திருக்கின்ற சனாதன உண்மைகளைக் கண்டுபிடிப்பதுடன் அவற்றுடன் இணைந்து போவதுமே பண்டைய பாரத மக்களின் வாழ்க்கையின் இலக்கு. கல்வி இந்த இலக்கை அடையக் கூடிய ஒரு வழிமுறையாக இருந்தது. பௌதீகச் சுகங்களில் வாழ்பவர்களுக்கு முத்தி கிடைப்பதில்லை. மக்களின் மனங்களில் அறிவை நிறைத்து மூச்சுத்திணற வைக்காமல் அதைப் பதப்படுத்தி பொருளார்ந்த முறையில் செயல்படுத்த வேண்டும் என்று புராதன பாரத மக்களுக்குத் தெரிந்திருந்தது.

### உள்ளடக்கம்

வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கணம், உயிரியல், கணிதம், தருக்கம், அரசியல் தந்திரம், ஒலிஅறிவியல், யாப்பிலக்கணம், மாயவித்தை, நட்சத்திர அறிவு, போர் முறைகள், சங்கீதம், நடனம், சிற்பக்கலை, ஆயுர்வேதம் என்பன வேதகாலத்தின் உள்ளடக்கங்கள்.

### கல்விமுறை/ கற்பித்தல் முறை

வினாவிடைகள் அடங்கிய விவாத முறையில் கற்பித்தல் நடைபெற்றிருந்தது. தகவல்கள், கதைகள், நீதிக் கதைகள் என்பன பயன்படுத்தி குரு மாணவர்களுக்கு அறிவு வழங்கினார். குருவுடன் வசித்து கல்வி கற்கின்ற குருகுலக் கல்வி முறை பொதுவாக அன்று நடைமுறையில் இருந்தது.

### ஆசிரியர் மாணவர் தொடர்பு

பண்டைய பாரதக் கல்வியில் ஆசிரியர் – மாணவர் தொடர்பில் தார்மீகமான தூய உறவு கட்டமைக்கப்பட்டிருந்தது. அறிவைப் போதிக்கின்ற நபர் என்பதன் அப்பால் நன்னடத்தைகளிலும் நல்லொழுக்க மதிப்புகளிலும், ஆன்மீகக் கூறுகளிலும் வழிகாட்டியாகவும், அறிவுரையாளராகவும் ஆசிரியர் செயல்பட்டார். சீடர்களை ஆன்மீக நிறைவை நோக்கியும் தொடர்ந்து முழுமையை நோக்கி வழிநடத்துவதுதே குருவின் இலக்கு.

| |
|---|
| வேதகாலத்தில் அந்தணர் அல்லாதோரின் கல்வி, பெண்கல்வி, என்பன பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றைச் சேகரிக்கவும். வகுப்பு குறிப்பேட்டில் எழுதவும். |

## 2. புத்த- சமண சமயக்காலத்தில் கல்வி

இந்து சமயத்தின் சாதிக் கட்டமைப்பிற்கும், அந்தண மேலாதிக்கத்திற்கும் சவாலாக கி மு 600 இல் புத்த சமயம் தோன்றியது.

புத்த மடங்களே கல்வி நிறுவனங்களாக இருந்தன. சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் அங்கே நுழைய அனுமதி வழங்கப்பட்டது. அதன் பலனாக அனைத்துச் சாதியினரும் அங்கிருந்து கல்வி கற்றனர். அந்தணர் கட்டுப்பாட்டிலிருந்த கல்விக் குத்தகையை நீக்கி ஜனநாயகமாக ஆக்கியது புத்த சமயக் கல்வியின் புரட்சிச் செயலாகும்.

### கல்வியின் இலக்குகள்

கல்வி இலக்கு என்பது தனிநபரின் முழுமையான வளர்ச்சியே ஆகும். வாழ்க்கையின் மிக உன்னத இலக்கு நிர்வாண முத்தி பெறல் என்பதால் கல்வி இந்த இலக்கில் வேரூன்றி அமைந்திருந்தது. மதிப்புகள் சார்ந்து அமைந்திருந்தன கல்வி நிகழ்ச்சிகள். ஆன்மீகக் கூறுகளுடன் பௌதீகக் கூறுகளில் உள்ள அறிவிற்கும் புத்த சமயக் கல்வி மரபில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

### உள்ளடக்கம்

எழுதுதல், வாசித்தல், கணிதம், நூல் நூற்றல், நெசவுத்தொழில், தையல் தொழில், கணக்கெழுதுதல், ஓவியக்கலை, மருத்துவம், சமயம், தத்துவஞானம், போர்க்கலை என்பன புத்த – சமண சமயக் காலத்தின் உள்ளடக்கம்.

### கற்பித்தல் முறை

பேச்சு மொழியில் விளக்குதல், சொற்பொழிவு, கலந்துரையாடல் என்பன வாயிலாகக் கற்பித்தல் நடைமுறையில் இருந்தது. ஆசிரியர் சொல்லக்கூடிய கருத்துகளை நினைவில் வைக்கவும், மனப்பாடம் செய்யவும் செய்திருந்தனர். மாணவர்களின் சொற்பொழிவுத் திறன் மேம்படுவதற்கு இடையிடையே விவாதங்களையும், பட்டிமன்றங்களையும் ஒருங்கிணைத்திருந்தனர். புகழ்பெற்ற சொற்பொழிவாளர்களை அழைத்து வந்து சமயம், தத்துவஞானம் எனப் பொருள் சார்ந்த சொற்பொழிவுகள் நடத்தப்பட்டிருந்தன.

### ஆசிரியர் – மாணவர் தொடர்பு

புத்த விகாரங்களில் குருக்களும், சீடர்களும் ஒரே சமூகமாக வாழ்ந்தனர். அதன் மூலம் சமூக வாழ்க்கையின் குணநலன்கள், மாணவர்களுக்குக் கிடைத்தன. சீடர், குருவிற்கு அனைத்துச் சேவைகளும் செய்ய வேண்டும். குருவின் அன்றாட நெறிகள், பிச்சை எடுத்தல், உணவு, ஆடை அணிதல் என அன்றாடக் காரியங்களில் கவனம் செலுத்துவதுடன் அவருக்குத் தொண்டாற்றவும் வேண்டும்.

### பண்டைய பாரதத்தின் கல்வி மையங்கள்

பண்டைய பாரதத்தில் மிகப்புகழ்பெற்ற பல்கலைக் கழகங்கள் இருந்தன. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், சீனா, திபெத், ஜப்பான், பர்மா, இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகள் எனும் இடங்களிலிருந்தும் உள்ள மாணவர்கள் இங்குத் தங்கிப் படித்திருந்தனர்.

### தட்சசீலம்

கி. மு. ஏழாம் நூற்றாண்டில் ( பாகிஸ்தானில், இராவல்பிண்டிக்கு அருகில் இந்த இடம் உள்ளது) காந்தார நாட்டின் தலைநகரான தட்சசீலம் புகழ்பெற்ற ஒரு கல்வி மையமாகத் திகழ்ந்தது. மருத்துவம், அரசியல் தந்திரம், சிற்பக்கலை, இசை, வணிகவியல், இலக்கணம், நுண்கலைகள் என்பவற்றில் திறன் மிக்க ஆசிரியர்கள் அங்கிருந்தனர். ஒவ்வொரு மாணவர் மீதும் தனிக்கவனம் செலுத்தினர். மாணவர்களுக்கு எட்டு ஆண்டுகள் கல்வி கற்பதற்கு உரிய வசதி அங்கே இருந்தது. அங்குச் சேரப்போகும் மாணவர்களுக்குச் சாதி சார் முன்னுரிமைகள் அளிக்கப்படவில்லை.

### நளந்தா

பீகாரில் பாட்னாவுக்கு அருகில் இருக்கும் நளந்தா புகழ்பெற்ற அறிவு மையமாகத் திகழ்ந்தது. கி பி. 414 முதல் 454 வரை அரசராக இருந்த குமரகுப்தர் நளந்தாவை நிறுவினார். இது மிகப்பெரும் மடமாக இருந்தது. நளந்தா பல்கலைக் கழகம் மிக அதிகப் பரப்பளவைக் கொண்டது. பெரிய நூலகமும், எட்டு பெரிய மண்டலங்களும், முந்நூறுக்கு மேற்பட்ட அறைகளும் இங்கே இருந்தன. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உணவு இலவசமாக வழங்கப்பட்டது. இங்குள்ள ஆசிரியர்கள் மகாபண்டிதர்க ளாகவும் புகழ்பெற்ற எழுத்தாளர்களாகவும் விளங்கினர். இவர்கள் மாணவர்களின் நண்பர்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஆயினர். நளந்தாவில் ஏறக்குறைய பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்தனர். ஆறு வயதுக்கு முன்னர் எழுதவும், வாசிக்கவும் கற்றிருந்தனர். இதன் பின்னர் இரண்டாம் நிலையில் பாணினியத்தின் சூத்திரங்கள் கற்பிக்கப்பட்டன. 11 வயது முதல் 15 வயது வரை பல அறி வுப் பிரிவுகளும் கற்பிக்கப்பட்டன. எழுத்து மொழி மேம்படாத அக்காலத்தில் சொற்பொழிவு, விளக் கம், கலந்துரையாடல்கள், விவாதங்கள் எனும் முறைகளில் கல்வி கற்பிக்கப்பட்டது.

### விக்கிரமசீலம்

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கங்கை நதிக்கரையில் விக்கிரமசீலம் என்ற இடத்தில் நிறுவப்பட்ட அறிவுமையம் மிகப்புகழ்பெற்றது. புத்த சமயத்தைப் பின்பற்றிய தர்மபால அரசர் இதனை நிறுவிய வர். தத்துவஇயல், இலக்கணம், தர்க்கவியல், மகாயான புத்த சமயத் தத்துவங்கள் ஆகியன இங்குக் கற்பிக்கப்பட்டன. மகா பண்டிதர்களே இந்நிறுவனத்தின் தலைவர்கள்.

## 3. இசுலாமியக் கல்வி

கி பி 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில் முஸ்லீம் ஆட்சி நிறுவப்பட்டதன் உடனே இந்தியாவில் இசு லாமியக் கல்வி பரவ வாய்ப்பு ஏற்பட்டது.

### கல்வி இலக்குகள்

இசுலாமியர்களின் கல்விக் கண்ணோட்டம், பௌதீகம், ஆன்மீகம் என்பனவற்றின் இடையே உள்ள சிறந்த ஒருங்கிணைப்பாகும். அறிவுபெறும் முறை, குணநல உருவாக்கம், இசுலாமியத் தத்துவங்க ளுக்கு ஏற்ப நடைமுறை வாழ்க்கை என்பன இசுலாமியக் கல்வியின் இலக்குகளாகும். வாய்மை, அன்பு, பொறுமை, தைரியம், சமய உணர்வு, சக உயிரிகளிடம் அன்பு, அழகியலுணர்வு எனும் பண் புகளையும், மதிப்புகளையும் மேம்படச் செய்தலும் இங்குக் கவனிக்கப்பட்டது.

### உள்ளடக்கம்

இசுலாமியக் கல்வி கற்பிக்கப்பட்டது மக்கபகளிலும், மதரசகளிலும் ஆகும். தொடக்கக் கல்வி நிறு வனங்கள் ஆன மக்கபகளில் எழுத்து, வாசித்தல், குரான் வாசித்தல், தீர்க்கதரிசிகளின் வசனங்கள், இசுலாமிய வரலாறும் கதைகளும், அடிப்படைக் கணிதம் என்பனவற்றைக் கற்பித்தனர். கற்பித்தல் முறை விளக்க உரையாகவும், சொற்பொழிவாகவும் அமைந்தது. உயர்நிலைக் கல்வி கற்பிக்கப்பட்ட மதரசகளில் குரான் ஸ்துதிகளின் விளக்கங்கள், மொழி, இலக்கணம், இசுலாமிய நூல்கள், இலக்கி யம், கணிதம், வானவியல், புவியியல், மருத்துவம், வரலாறு, கையெழுத்து முறை என்பன கற்பிக் கப்பட்டன.

### ஆசிரியர் - மாணவர் தொடர்பு

இசுலாமியக் கல்வி முறையில் மகா பண்டிதர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தனி ஆதரவும் மதிப் பும் அளிக்கப்பட்டிருந்தன. சமூகத்தை வழிநடத்த வேண்டிய கடமை மகா பண்டிதர்களுக்கு உரி யது என்றே இசுலாமிய சமயம் கருதியது. அறிவு அளித்தல், பண்டிதர்களின், ஆசிரியர்களின் கட

மையாக இருந்தது. ஆசிரியர்களுக்கும், பண்டிதர்களுக்கும் தேவையான வசதிகளும், பாதுகாப்பும் அளித்தல் சமூகத்தின் ஆட்சியாளர்களின் கடமையாகக் கருதப்பட்டது. தனிநபர் கற்பதிலும், சிறு குழுக்களாகப் பிரிந்து கற்பதிலும் கற்பித்தல் முறையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. ஒரு பாடத்தை முழுமையாகக் கற்காத மாணவருக்கு அடுத்தப் பாடம் கற்பதற்கு உரிய தகுதி அளிக்க வில்லை. அதனால் கற்றல் திறன்மிக்க மாணவர்களுக்கு விரைவில் முழுமைப்படுத்தவும் உயர் கல்வி கற்கவும் வாய்ப்பு கிடைத்தது.

## 4. ஆங்கிலேயர் காலக் கல்வி

1498 இல் வாஸ்கோடிகாமா கோழிக்கோடு வந்ததன் பின்னர் சமயப் பரப்புதலை நோக்கமாகக் கொண்டு மிஷனரிமார்கள் இந்தியாவுக்கு வந்தனர். போர்ச்சுகீசியர்கள் கோவா, டாமன், டியூ, கொச்சி எனும் இடங்களில் பள்ளிக்கூடங்களை நிறுவினர். பிரெஞ்சுகாரர்கள், பாண்டிச்சேரி, மாகி, சந்திர நகர் எனும் இடங்களில் பள்ளிக்கூடங்களைத் தொடங்கினர். ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியும் பள்ளிக்கூடங்களை நிறுவியது.

இந்தியாவில் மிஷனரி செயல்கள் சுமுகமாக நடைபெறுவதற்கும், இந்தியாவை சமூகம் சார்ந்தும் பொருளாதாரம் சார்ந்தும் மேம்படுத்துவதற்கும் இங்கே மேற்கத்தியக் கல்வியைப் பரப்ப வேண் டும் என்பதை அவர்கள் பகுத்தறிந்து கொண்டனர். 1813 இல் சார்ட்டர் சட்டத்தின் படி கிறித்தவ மிஷனரிகளுக்குச் சமயத்தைப் பரப்புவதற்கு உரிய சுதந்திரம் கிடைத்ததுடன், இந்திய மக்களுக்குக் கல்வி வழங்குவதன் பொறுப்பு கம்பனிக்கு உரியதாக அமைந்தது.

1835 இல் மெக்காலேயின் திட்டம் நவீன இந்தியக் கல்விக்கு உரிய கொள்கையாக மாறியது. ஆட்சி யாளர்களான நமக்கும் நாட்டு மக்களான இந்தியர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் செய்வ தற்குத் துணைபுரியும் ஒரு சமூகத்தை இரத்தத்திலும், நிறத்திலும் இந்தியர்களாக இருப்பினும், நாட் டத்திலும், கண்ணோட்டத்திலும், நன்னடத்தையிலும் ஆங்கிலேயர்களான ஒரு சமூகத்தை வடிவ மைக்கத் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டியுள்ளது என்று அறிவித்துக் கொண்டு இந் தியாவில் ஆங்கிலேயக் கல்வியின் இலக்கினை அவர் விளக்கினார்.

விரைவில் இந்தியாவின் பல பகுதிகளில் கல்வித்துறைகள் ஆரம்பித்ததுடன் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் நிறுவினர். தனியார் நிறுவனங்களுக்குப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் நடத்து வதற்குத் தேவையான நிதி உதவிகள் வழங்கப்பட்டன. பெண் கல்வியை ஊக்கப்படுத்துவதற்கு உரிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தினர். ஆங்கிலேயக் கல்வி பரவியதுடன் நவீன கண் ணோட்டங்களும் தாராள மனப்பான்மையும் பரவின. இதன் விளைவாக கல்வித்துறையில் பல மாற் றங்கள் ஏற்பட்டன.

ஆரம்பக் கல்வி அரசின் பொறுப்பு என்பது அங்கீகரிக்கப்பட்டது. தனியார் நிறுவனங்களும், அர சும், அதற்கு உரிய நிதி உதவியை அளிப்பதற்கும் தீர்மானித்தன.

- ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து திறன்மிக்க ஆசிரியர்களை உருவாக்குதல்.
- பெண்கல்வியை ஊக்கப்படுத்துதல்.
- பல்கலைக் கழகங்களின் மேற்பார்வையில் உயர் கல்வியைப் பரப்புதல்.
- ஏழை மாணவர்களுக்கு உதவித்தொகை, மதிய உணவுத் திட்டம்.
- கல்வியை இலவசமாகவும், கட்டாயமாகவும் ஆக்குதல்.
- தொடக்கக் கல்வி தாய்மொழியில் இருக்க வேண்டும்.

- இளைஞர்களை உயர்கல்விக்கும், தொழிலுக்கும் தகுதி உடையவர்களாக ஆக்கும் உயர்நிலைக் கல்வி.

எனும் கண்ணோட்டங்களோடு கூடிய செயல்பாடுகளைக் கல்வித்துறையில் தொடங்கியது ஆங்கிலேயரின் காலத்திலாகும். நவீன கல்விக்கு அடித்தளமாக அமைந்த மிகப்பெரும் பாதச் சுவடுகளைப் பதித்தலே அன்று நடைபெற்றது. இன்றைய இந்தியக் கல்வியின் உள்ளடக்கம், கற்பித்தல் முறை, மதிப்பீடு செய்தல் முறை என்பனவற்றின் ஆதி வடிவங்களை இக்காலத்து கல்வி முறையிலும் காண இயலும்

## 5. சுதந்திரத்தின் பின்னர் கல்வி

இந்தியா சுதந்திரம் அடையும் போது வாழ்ந்திருந்த ஏறத்தாழ 36 கோடி மக்களில் 83% மக்களும் எழுத்தறிவு அற்றவர்கள். இந்தியரின் சராசரி ஆயுட்காலம் 32 வயதாகவும், தனிநபர் வருமானம் 237. 5 ரூபாயாகவும் இருந்தன. பொருளாதாரம் சார்ந்தும், கல்வி சார்ந்தும், உடல் நலம் சார்ந்தும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டனர்.

ஒரு பொதுவுடமைச் சமூகத்தை உருவாக்குதல் என்ற இலக்குடன் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறையில் வந்த பின்னர் இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பொருளாதாரம் - அரசியல்- சமூகம் என்பனவற்றின் வளர்ச்சிக்குக் கல்வி மிக இன்றியமையாதது. சமூக மாற்றம் ஏற்படுத்துவதற்கு உரிய வலுவான வழிமுறையாகக் கல்வியைக் கருதியதால் அரசியலமைப்புச் சட்டத்தில் அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியைப் பரப்புவதற்காகச் சுதந்திர இந்தியாவில் முக்கியமான பல வேரூன்றல்களும் நடைபெற்றன.

- மைய, மாநிலங்களில் கல்வி நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட்டன.
- ஐந்தாண்டுத் திட்டங்களில் அதிக நிதி கல்விக்காக ஒதுக்கப்பட்டது.
- கல்வித்துறையின் பிரச்சினைகளை அறிவதற்குத் திறன் மிக்கக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.
- திறன்மிக்கக் குழுக்களின் அறிவுரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தனித் திட்டங்களும், செயல்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இவற்றின் பலனாக இந்தியாவின் கல்வித்துறையில் மிக முன்னேற்றம் ஏற்பட்டது.

## தொடர் செயல்பாடுகள்

1. வேதகாலக் கல்வியை விட புத்த - சமணக் கல்வி மக்கள் மையமாக அமைந்திருந்தன எனக் கூறக் காரணம் என்ன?
2. இந்தியாவில் நவீன கல்விக்கு அடித்தளம் அமைத்தது ஆங்கிலேயக் கல்வி என்ற கருத்துடன் ஒத்துப் போகிறீர்களா? எதனால்?
3. மெக்காலேயின் கல்விக் கண்ணோட்டத்திலிருந்து விடுதலை பெற இந்தியக் கல்விக்கு இன்று வரை இயலவில்லை என்ற கருத்தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்து கருத்துகளைப் பதிவு செய்யவும்?
4. சுதந்திர இந்தியாவில் பள்ளிக்கூடக் கல்வி மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தொகுக்கவும்.
5. பண்டைய பாரதத்தில் பெண்கல்வியின் நிலைப்பாடு எவ்வாறு இருந்தது?

**கருத்தரங்கம்**

*இந்தியக் கல்வியின் முக்கியமான ஒவ்வொரு காலகட்டத்திலும்- வேதகாலக் கல்வி, புத்த - சமணக் கல்வி, இசுலாமியக் கல்வி, ஆங்கிலேயக் கல்வி, சுதந்திரத்திற்குப் பின்னர் கல்வி என்பனவற்றில் தனித்தனியாகக் கட்டுரைகள் தயாராக்கி வெளியிட்டு விவாதித்தல். விவாதத்தில் உருவாகின்ற கருத்துகளை ஒருங்கிணைத்து கருத்தரங்கத்தின் அறிக்கையையும் தயார் செய்வீர்கள் அல்லவா?*

## உலகக் கல்வி

### கற்றல் அடைவு

பல்வேறு கால கட்டங்களில் உலகக் கல்வியின் தனிச்சிறப்புகளை ஒப்புமை செய்தல். கல்வியின் வளர்ச்சிக்குக் காரணமான சமூக, பொருளாதாரம் சார்ந்த காரணங்களைப் பகுத்தறிதல்.

### முக்கியக் கருத்துகள்

- எகிப்து, மெசப்பட்டோமியா, கிரேக்கம் எனும் பண்டைய நாகரிகங்களில் அவர்களுக்கே உரிய கல்வி முறை அமைந்திருந்தது.
- மத்திய காலக் கல்வியில் சமயத்தின் தாக்கம் இருந்தது.
- உலகளாவிய கல்வி பற்றிய சிந்தனைகள் வலுப்பெற்றமை தொழில் யுகத்தில் ஆகும்.
- இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தொழிலாளர்களுக்கு உரிய திறன்களை மரபுசார் கல்வி வழியாகப் பெற்றுக்கொள்ள இயலாது. உயர் தரம் மிக்கப் பகுப்பாய்வுத் திறன், பிரச்சினை பகுப்பாய்வுத் திறன் என்பன பெறுவதற்கு உரிய வாய்ப்புகளை அனைவரும் பெறுமாறு செய்தல் வேண்டும்.

### கலந்துரையாடவும்

1. இந்தியாவின் கல்வி மரபைப் போன்று உலகின் பிற இடங்களிலும் பண்டைய காலத்திலேயே கல்வி முறை நடைமுறையில் இருந்தது. இதற்கு இந்தியக் கல்வி முறையிலிருந்து ஏதேனும் வேறுபாடு காணப்படுகிறதா?
2. தொழில் புரட்சி கல்வியில் செலுத்திய தாக்கங்கள் எவை?
3 உலகக் கல்வியின் சமகாலப் போக்குகள் கேரளக் கல்வியில் எவ்வாறு வெளிப்படுகின்றன?

### உள்ளடக்கம்

இன்று உலகத்தில் காணப்படுவதைப் போன்று கட்டமைக்கப்பட்ட கல்விமுறை நடைமுறையில் வந்து 150- 200 ஆண்டுகள் மட்டுமே ஆயின. சில நாடுகளில் 50 ஆண்டுகள் மட்டுமே.

உலகத்தில் பண்டைய நாகரிகங்கள் அனைத்திலும் அவர்களுக்கே உரிய கல்விமுறை இருந்தது. கி. மு. 3500 லேயே எகிப்தில் மேம்படுத்தப்பட்ட ஹீரோகிளிபிக்ஸ் எழுத்துகளைப் பயன்படுத்தி எழுதியிருந்தனர். அன்று பாப்பிரஸ் இலைகளில் எழுதினர்.

### 1. பண்டைய எகிப்தில் கல்வி

எகிப்தின் கல்விக்கு கி. மு. 3000 முதல் உள்ள வரலாறு உண்டு. கல்வியறிவு மிக்கவர்களும் அறிவுக் கூர்மை மிக்கவர்களும் ஆன சமயப் போதகர்கள் கல்வியின் மேற்பார்வையாளர்களாக இருந்தனர். சமயப் போதகப் பயிற்சிக்கு உரிய பள்ளிக்கூடங்களும், எழுத்தருக்கு உரிய பள்ளிக்கூடங்க

ளும் எகிப்தில் இருந்தன. 5 வயதில் தொடங்கும் கற்றல் 16, 17 வயதுவரை தொடர்ந்திருந்தது. இதில் 13, 14 வயதாகும் போது செய்முறை சார் பயிற்சி அளிக்கத் தொடங்குவர். சமயக் குருக்களாகப் பயிற்சி பெறும் கோயில் கல்லூரிகளில் 17 ஆவது வயதில் கல்வி ஆரம்பிக்கின்றது. அது தேவைக்கு ஏற்ப நீண்டு நின்றது. மனப்பாடம் செய்வதற்கும், நினைவாற்றலை அதிகரிப்பதற்கும் பள்ளிக்கூடங்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

எழுதுதல், வாசித்தல், கணிதம், சமயம் சார் செயல்கள், புவியியல், நட்சத்திர இயல், மருத்துவம் என்பனவற்றைப் பள்ளிக்கூடங்களிலிருந்தும் கற்றனர். அவர்களின் குலத்தொழிலைக் கற்றனர்.

சிறுவர்கள் மரப்பலகையில் எழுதினர். பெரிய மாணவர்கள் பாப்பிரஸ் இலைகளில் எழுதினர்.

## 2. மெசப்பட்டோமியன் கல்வி

பண்டைய எகிப்தின் கல்விக்கு இணையான முறையில் உள்ள கல்வியே மெசப்பட்டோமியாவின் பண்பாட்டிலும் காணப்பட்டது. கல்வித்துறையில் தலைமை வகித்தவர்கள் சமயப் போதகர்கள் ஆவர். கோயில்களோடு இணைந்து பள்ளிக்கூடங்கள் இயங்கின. அனைத்துக் கோயில்களிலும் நூலகங்கள் செயல்பட்டன.

மெசப்பட்டோமியன் கல்வியில் எழுத்துக்கு மிக முக்கியத்துவம் இருந்தது. கி. மு. 3000 த்தில் க்யூனிஃபோம் எழுத்து மிகச் சிக்கலாக இருந்த காரணத்தால் அதைப் படிப்பதற்கு ஏறக்குறைய 12 ஆண்டுகள் வரை தேவைப்பட்டன. செல்வந்தர்களுக்கு மட்டுமே அன்று கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தது. இளவரசர்கள், பெரும் வணிகர்கள், சமயப் போதகர்கள் என்போர் மட்டுமே அன்று கல்வி கற்றிருந்தனர். பெண்குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று கல்வி கற்கவில்லை.

மாணவர்களை எழுத்து, வாசிப்பு, கணிதம், வரலாறு என்பனவற்றைக் கற்பித்தார்கள். எதிர்காலத்தில் வேலைவாய்ப்பைக் கருத்தில் கொண்டு மருத்துவம், எண்ணியல், பொறியியல், விலங்கியல், நட்சத்திர இயல், வாஸ்துக்கலை போன்றனவும் கற்பிக்கப்பட்டன.

ஆசிரியர்கள், மாணவர்களுக்கு மரத்துண்டுகளின் மேற்பகுதியில் எழுதிக் கொடுத்தனர். மாணவர்கள் அதனைத் திரும்ப திரும்ப எழுதிப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பள்ளிக்கூடத்தில் கண்டிப்பான பணிவிற்கு முக்கியத்துவம் இருந்த போதிலும் ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றலுக்கு மூத்த சகோதரர்களைப் போன்று உதவினர்.

## 3 பண்டைய கிரேக்கத்தில் கல்வி

உலகக் கல்விச் சிந்தனைக்கு விலைமதிப்பற்ற நன்கொடை வழங்கிய அரும்பெரும் மரபு கிரேக்கத்திற்கு உண்டு. கிரேக்கத்தில் நகர அரசுகளின் தோற்றத்துடன் கல்விக்குத் தெளிவான நிலையான வடிவம் கிடைத்தது. நாடுகளான ஸ்பார்ட்டா, ஏதென்ஸ் எனும் இரு நகர அரசுகள் இரு வகைகளில் கல்விக்கு பிரதிநிதித்துவம் அளித்திருந்ததன. ஒழுக்கமும், பற்றும், வாய்மையும், வீரமும் மிக்க முன்மாதிரி வீரர்களை உருவாக்குதல் என்பதே ஸ்பார்ட்டன் கல்வியின் இலக்கு. ஒரு குழந்தை ஏழு வயது வரை தாயின் அரவணைப்பில் இருக்கும். அதன் பின்னர் அரசு செலவில் பள்ளிக்கூடங்களில் வைத்து ஓடுதல், சாடுதல், மற்போர், இராணுவ அணிவகுப்பு என உடல்சார் பயிற்சிகள் பெறுகின்றனர். 18 வயது முதல் 20 வயது வரை இராணுவத்தில் ஆயுதக் கலையும் கற்கின்றனர். அதன் பின்னர் பத்து ஆண்டுகள் இராணுவச் சேவை செய்ய வேண்டும். முப்பதாவது வயதில் அவனுக்கு முழு குடியுரிமையும், திருமணத்திற்கு உரிய அனுமதியும் கிடைக்கின்றன. பெண் குழந்தைகளுக்கும் இத்தகைய கல்வியே கிடைத்திருந்தது. இராணுவப் படையெடுப்புகள் பொதுவாக இருந்தமையால் இவ்வகையிலான கல்வி அன்று முக்கியத்துவம் பெற்றிருந்தது.

ஏதென்ஸ் நாட்டில் குழந்தைகளின் கல்விப் பொறுப்பு, முக்கியமாகக் குடும்பத்திடமே இருந்தது. பொதுப் பள்ளிக்கூடங்கள் அன்று இல்லாமலிருந்தன. ஏழு வயதில் ஆரம்பிக்கும் கல்வி குடும்பத் திற்குப் பொருளாதார வசதி இருந்தால் 15, 16 வயது வரை தொடர்ந்திருக்கிறது. முக்கியமாக இசைப் பள்ளிக்கூடம், உடற்பயிற்சிப் பள்ளிக்கூடம் என இரு வகைகளில் கல்விக்கூடங்கள் செயல்பட்ட ன. இசை பள்ளிக்கூடங்களில் தொடக்கத்தில் இசையும், காவியமும் மட்டுமே கற்பிக்கப்பட்டன. தொடர்ந்து நாடகம், வரலாறு, பேச்சுக்கலை, அறிவியல் என்பனவும் கற்பிக்கப்பட்டன. உடற்பயிற்சி முறைகளும், விளையாட்டுப் போட்டிகளும் உடற்பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டிருந் தன. 16 ஆம் வயதில் வாலிபர்கள் இத்தகைய கற்றல்களை நிறுத்திவிட்டு மாநிலக் கட்டுப்பாட்டில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்தில் நுழைவதுடன் அங்கே கற்கவும் செய்கின்றனர். விளையாட்டுப் போட்டிகள், அரசியல் விவாதங்கள், முதியோர்களுடன் உள்ள தொடர்பு என்பன வழியாக அவர் கள் பெரியவர்களின் கடமைகளைச் செய்வதற்கு உரிய திறனைப் பெறுகின்றனர். பின்னர் பல்வேறு தேர்வுகளில் வெற்றி பெற்றுவிட்டால் முழுக்குடியுரிமை பெறுகின்றனர்.

## உயர் கல்வி

கிரேக்கத்தில் சமூக -பொருளாதார- அரசியல் மாற்றங்களின் வாயிலாகக் கல்வி கூடுதல் வலுப் பெற்றிருந்தது. சோபிஸ்டுகள் என்று அறியப்பட்ட புதுப்பிரிவு ஆசிரியர்கள் தோன்றினர். இவர்க ளின் முயற்சியின் பலனாக இரு வகைகளில் பள்ளிக்கூடங்கள் தோன்றின.

1 உரையாடல் சார்ந்தன

2 தத்துவச் சிந்தனை சார்ந்தன

நுண்ணறிவு மேதைகளுக்கு நடைமுறைச் செயல்பாடுகளில் பயிற்சி அளிப்பதே உரையாடல் சார்ந்த பள்ளிக்கூடங்களின் இலக்கு. இரண்டாவதோ நீதிக் கொள்கைகளுக்கும் தத்துவச் சிந்தனைகளுக் கும் முக்கியத்துவம் அளித்தது. பிளேட்டோ நிறுவிய அகாடமியும், அரிஸ்டாட்டிலின் லைசியமும் இரண்டாவதன் எடுத்துக்காட்டுகள் ஆகும். ஏதென்ஸ், அலெக்ஸ்ஸான்டிரியா எனும் பல்கலைக்கழ கங்கள் இந்த இருவகைப் பள்ளிக்கூடங்களில் இருந்தே வளர்ந்து வந்தன.

## 4. இடைக்காலக் கல்வி

ஐரோப்பாவில் கத்தோலிக்கத் துறவி மடங்களே இடைக்காலக் கல்வி மையங்கள். கி. பி. 312 இல் கோண்ஸ்டன்டியன் பேரரசர் கிறித்தவச் சமயத்தை ஏற்றுக்கொண்டதன் பின்னர் கிறித்தவச் சமயம் உரோமப் பேரரசில் அங்கீகரிக்கப்பட்ட சமயமாக மாறியது. மெடிட்டரேரியன் தடத்தின் பெரும்பா லான பள்ளிக்கூடங்களிலும் கிறித்துவச் சமயம் பரப்புதல் நடைபெற்றது. கல்வி பெற்றவர்களுக்குச் சமூகத்திலும் ஆட்சியிலும் சிறப்பிடம் கிடைத்ததால் கல்வியின் முக்கியத்துவத்தைக் குறித்து அனை வரும் விழிப்புணர்வு பெற்றிருந்தார்கள்.

12 ஆம் நூற்றாண்டில் இடைக்கால மறுமலர்ச்சியின் வழியாகக் கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற் பட்டன. துறவறம் கற்க விரும்புபவர்களுக்கு 15 வயதின் முன்னரே ஏராளம் படிக்க இருந்தன. வாசித் தல், தியானம், ஜெபம் என்பன முக்கியப் பாடப் பிரிவுகள். நகரப் பகுதிகளில் வாழ்க்கைக்குப் பயன் தருவன மேலும் கற்பதற்கு இருந்தன. இலத்தீன், இலக்கணம், சொற்பொழிவு, சட்டம், கோயில் கணக் கு, எண்ணியல், இயற்பியல், அரசியல் தந்திரம், பொருளாதார இயல் எனும் பாடப் பிரிவுகள் அங்கே கற்பிக்கப்பட்டன. மேலும் நூல்நூற்பு, வேளாண்மை, மருத்துவம் எனும் தொழில்களும் கற்பிக்கப் பட்டன.

இத்தாலி, பிரெஞ்சு, இங்கிலாந்து எனும் நாடுகளில் பல்கலைக்கழகங்கள் இக்காலத்தில் தோன்றின.

ஐரோப்பாவின் வெளியேயும் இடைக்காலத்தில் கல்வி வளர்ச்சி அடைந்திருந்தது. பாக்தாத்தில் House of wisdom என்ற நூலகம் 9 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை அறிவு மையம் ஆகத் திகழந்தது. அங்கே பைத்தகோரஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், ஹிப்போகிறிஸ்டல், யூக்ளிட், சுசுருதன், சரகர், ஆரியபட்டர், பிரம்மகுப்தர் என்போர் உலகிற்கு அளித்த அறிவு முழுமையாக எழுதப்பட்ட தன் நகல் பாதுகாக்கப்பட்டிருந்தது. ஏறத்தாழ ஒரு இலட்சம் ஜனத்தொகை வாழ்ந்திருந்த பாக்தாத். அக்காலத்தில் மருத்துவ இயல், வேதியியல், உயிரியல், புவியியல் என்பனவற்றின் புகழ்பெற்ற கல்வி மையமாக அமைந்திருந்தது.

### 5 கல்வி தொழில் யுகத்தில்

அனைவருக்கும் கல்வி என்ற கருத்து வலுப் பெற்றமை தொழில் யுகத்தில் ஆகும். நம்பிக்கைகளிலும், சடங்குகளிலும் மூழ்கிக் கிடத்த சமூகத்தை அதிலிருந்து விடுவித்து புதிய தொழில் துறையில் நிறுத்துவதற்குக் கல்வி மிக அவசியமாக இருந்தது.

பிரிட்டனில் 1833 இல் உருவான தொழிற்சாலைச் சட்டத்தின் படி தொழிற்சாலையின் பணியாளர்களின் மக்களுக்குத் தினம் 2 மணி நேரம் கட்டாயமாகக் கல்வி கற்பிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 1880 இல் 10 வயதினரான அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயமாகக் கல்வி அளிக்க வேண்டும் என்று பிரிட்டன் தீர்மானித்தது. ஆசிரியர் பயிற்சிகள் தொடங்கியமை இக்காலகட்டத்தில் ஆகும்.

உலகப் போர்களின் பின்னர் இருபதாம் நூற்றாண்டில் கல்வித்துறையில் மிகப்பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. அறிவின் பேரதிர்வுகள் ஏற்பட்டன என்பதுடன் அறிவியல் சார் தொழில்கள் பரவவும் செய்தன. ஒன்றுகூடிய தொழிலாளர் இனம், தொலைக்காட்சி என்பனவற்றின் வருகையும் சமூக அரசியல் வாழ்க்கையில் மிக ஆழத்தில் தாக்கம் செலுத்திய நிகழ்வுகள் ஆகும். போர்களின் பின்னர் பெரும்பாலான நாடுகளும் சுதந்திரம் பெற்றதுடன் அந்த நாடுகளின் கல்வித்துறையில் குறிப்பிடும் அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டன. தொழில் முன்னேற்றத்திற்குக் கல்வி இன்றியமையாததாக இருந்தது.

- மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.
- கல்விக்கும் செல்வத்திற்கும் இடைய உள்ள தொடர்பு வெளிப்பட்டது.
- பயன்மிக்கக் கல்வி என்ற சிந்தனை வலுப்பெற்றது.
- கல்வி உளவியலின் தாக்கம் அதிகரித்தது.

என்பனவும் இக்காலத்தைய முக்கிய மாற்றங்கள் ஆகும்.

### 6 உலகக் கல்வியில் சமகாலப் போக்குகள்

உலகத்தில் பெரும்பாலான நாடுகளிலும் கட்டாயக் கல்வி நிலைத்திருந்தது என்பது நிகழ்காலத்தின் ஒரு முக்கியச் சிறப்பியல்பாகும். 30 ஆண்டுகளுக்குள் வரலாற்றில் இதுவரை காணப்பட்டதற்கும் மேலாக மனிதர்களுக்கு முறைசார் கல்வி கிடைக்கும் என்று யுனஸ்கோ கணக்கிட்டுள்ளது.

எழுத்தறிவு இல்லாதவர்களின், பள்ளிக்கூடம் செல்லாதவர்களின் எண்ணிக்கை சில பத்து ஆண்டுகளில் குறைந்துள்ளது. 1960 இல் 36% எழுத்தறிவு இல்லாதவர்கள் இருந்தார்கள் எனில் 2000 இல் அது 25% ஆக மாறியுள்ளது.

**World Declaration as Education for All UNESCO – 1990**

1990 இல் தாய்லாந்தில் ஜோம்ஸ்தீன் என்ற இடத்தில் நடைபெற்ற உலகக் கல்வி மாநாட்டில் அடிப்படைக் கல்வி நிறைவேற்றுவதற்கு உரிய ஒரு செயல்பாட்டு வழிமுறைத் திட்டம் தயாராக்கப்பட்டது. குழந்தைகள், இளையோர், முதியோர் என்போரில் எவராக இருப்பினும் அனைவருக்கும் கல்வி உரிமை உண்டு என்று மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

வளர்ந்த நாடுகளில் 1970 இல் இருந்து 2000 ஆன போது எழுத்தறிவு இல்லாதவர்களின் எண்ணிக்கை பாதியாக மாறியது. வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் 6% என்பது 1% எனக் குறைந்தது. இருபதாம் நூற்றாண்டின் பாதி ஆன போது உலகம் தொழில் நுட்பத்திலும், பொருளாதாரத்திலும் வளர்ச்சி அடைந்தது. இது தொழில் துறையிலும், வாழ்க்கையிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. 1980 ஆகும் போது அரசுகளும், கல்வி மேதைகளும் முக்கியத் தொழிலதிபர்களும், டிஜிட்டல் தொழிலிடங்களுக்குத் தேவையான திறனைக் கல்வி வாயிலாக உருவாக்குவதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்கள். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் இந்தத் துறைசார் திறன் இன்றியமையாதது.

மரபுசார் கல்வி அறிவுகளின் இடத்தில் பகுப்பாய்வுச் சிந்தனை, பிரச்சினைத் தீர்வுத் திறன், குழுச் செயல்பாடு என்பன புதிய காலத்தின் தொழில்களுக்கு மிகத் தேவையானவை.

## வளரும் நாடுகளின் கல்வி மாதிரிகள்

1. **பின்லான்ட்**

- சிறுவயது முதல் உள்ள early childhood education
- 6 வயது முதல் ஓராண்டு மழலைக் கல்வி
- 7 வயது முதல் 16 வயது வரை 9 ஆண்டுகள் அடிப்படையான பள்ளிக்கூடக் கல்வி
- காலையில் 8, 9 மணி முதல் பள்ளிக்கூட நாட்கள் தொடங்குகின்றன. 1, 2 மணிக்கு முடிவடைகின்றன.
- 9 ஆண்டுகள் கல்வி கற்றதன் பின்னர் கல்வி சார்ந்ததோ தொழில் சார்ந்ததோ ஆன உயர் கல்வியைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதாகும்.
- கற்பித்தல் ஊடகம் பினிஷ் மொழியில்
- சுவீடன் மொழியையும் ஆங்கில மொழியையும் கற்கின்றனர்.
- உலகில் கணிதம், அறிவியல், மொழி என்பனவற்றில் முன்னிலையில் நிற்கின்றனர்.
- மேதைமை மிக்க ஆசிரியர்கள், பள்ளிக்கூடங்களுக்குத் தன்னாட்சி அதிகாரம் ஆகிய பின்லான்ட் கல்வியின் தனித்தன்மைகள் ஆகும்.

### 2. ஜப்பான்

- பிறப்பு முதல் பள்ளிக்கூடப் பருவம் தொடங்குகிறது என்று கருதுகின்ற நாடே ஜப்பான்.
- மழலையர் கல்வி ஜப்பானில் வலுப்பெற்று வருகிறது.
- தொடக்கக் கல்வி 6 ஆண்டுகள்
- நடுநிலைப் பள்ளி 3 ஆண்டுகள்

- உயர்நிலைப் பள்ளி 3 ஆண்டுகள்
- பல்கலைக் கழகம் 4 ஆண்டுகள்

  இதுவே கல்வியின் காலம், இதில் தொடக்க நடுநிலைப் பள்ளிக் கல்வி ( 9 ஆண்டுகள்) கட்டாயமாகும்.

- கற்பித்தல் ஊடகம் ஜப்பானிய மொழி, வகுப்புகள் காலை 8.45 முதல் மதியம் 3.15 வரை ( 6 1/2 மணிநேரம்)
- பள்ளிக்கூடத்தில் ஊட்டச் சத்து மிக்க உணவு உண்டு.
- வகுப்பறைகளைச் சுத்தம் செய்வது மாணவர்களின் பொறுப்பில் ஆகும்.
- பள்ளிக்கூட நேரத்திற்குப் பின்னர் மாணவர்கள் பல்வேறு பட்டறைகளில் சென்று தொழில்களைப் படிக்கின்றனர்.
- பள்ளிக்கூட நுழைவு 100%
- எழுத்தறிவு 100%

மேலும் பல நாடுகளின் கல்வி முறைகளைக் குறித்துள்ள தகவல்களைத் திரட்டி கலந்துரையாடலாம் அல்லவா?

## தொடர் செயல்பாடுகள்

1. இணைய தளம் பயன்படுத்தி உலகக் கல்வியின் நவீனப் போக்குகளைக் கண்டறிந்து வகுப்பில் பொதுவாக வெளியிடவும்.
2. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய பெருங்கண்டங்களின் மேம்பட்ட வளரும் நாடுகளுக்கு இடையே உள்ள கல்விப் போக்குகளைக் கண்டறிந்து ஒப்பீடு செய்யவும்.
3. வேதகாலக் கல்வியையும் பண்டைய நாகரீகங்களில் காணப்படும் கல்வியையும் ஒப்புமைப்படுத்துக.
4. தொழில் யுகம், கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதா? அதன் காரணம் என்ன?
5. உலக நாடுகளின் பள்ளிக்கூடக் கல்வி அமைப்பு, இயல்பு ஆகியவற்றைத் திரட்டவும்.

Ref:-1. Encyclopaedia Britanica – Volume – 6

2. விஸ்வவிஞ்ஞான கோசம் - N.B.S volume 9
3. History of Education – Wikipedia,
4. History of Education – Nirmalkaur, Mittal Publications –NewDelhi 2005.
5. e-PG pathsala.website/NCERT-e-PG pathsala
6. www.paleeri.blogspot.com
7. www.edufocus.blogspot.com

# இந்தியாவில் கல்விக் குழுக்கள், அறிக்கைகள்

## முன்னுரை

இந்தியாவில் சுதந்திரத்திற்கு முன்னரும், பின்னரும் ஏராளமான கல்விக் குழுக்கள் உருவாகியுள்ளன. அவற்றை விமரிசனக் கண்ணோட்டத்துடன் அணுக ஓர் எதிர்கால ஆசிரியருக்கு இயலவேண்டும். அப்படியானால் மட்டுமே நிகழ்காலக் கல்விப் பிரச்சினைகளை நுணுக்கத்தோடு அணுகவும் பகுப் பாய்வு செய்து தீர்வுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும் இயலும்.

இந்தியாவில் சுந்திரம் கிடைப்பதற்கு முன்னர் இருந்த கல்விக் குழுக்கள் எவை?

அவற்றின் அறிவுரைகளும் பரிந்துரைகளும் இந்திய கல்விச் செயல்பாடுகளை நேர்மறையாக முன் னேறுவதற்கு எவ்வாறு உதவின?

சுதந்திரத்தின் பின்னர் வந்த கல்விக் குழுக்களும் சட்ட உருவாக்கங்களும் எவை?

அவை நாம் சந்திக்கின்ற கல்விப் பிரச்சினைகளை எவ்வாறு தடை செய்தன?

அவற்றின் அறிவுரைகளையும், பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதில் நாம் வெற்றி பெற்றி ருக்கிறோமா? எதனால்?

எனும் ஏராளமான வினாக்களைச் சுயமாகக் கேட்டுக்கொண்டே அவற்றை அணுக வேண்டும்.

முதல் அலகில் இந்தியக் கல்வியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உதவக்கூடிய ஏராளமான சட்ட உருவாக்கங்கள், கல்விக் குழுக்கள், அறிக்கைகள் என்பன அடங்கியுள்ளன. அவற்றின் உள்ளடக் கத்தை அறிந்து கொள்வதுடன் பகுப்பாய்வு செய்வதுமே இங்கே நோக்கமாக உள்ளது.

## இங்குக் கலந்துரையாடும் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| 1 | மெக்காலே மினிட்ஸ் | 1835 |
| 2 | வுட்ஸ் டெஸ்பாச் | 1854 |
| 3 | ஹண்டர் குழு அறிக்கை | 1882 |
| 4 | ஹர்டோக் குழு | 1929 |
| 5 | சார்ஜண்ட் அறிக்கை | 1944 |
| 6 | இந்திய அரசியலமைப்புச் சட்டம் | 1951 |
| 7 | உயர்நிலைக் கல்விக் குழு | 1953 |
| 8 | இந்தியக் கல்விக் குழு | 1966 |
| 9 | தேசியக் கல்விக் கொள்கை | 1968 |
| 10 | தேசியக் கல்விக் கொள்கை | 1986 |
| 11 | புரோக்ராம் ஆஃப் ஆக்ஷன் | 1992 |
| 12. | யஸ்பால் கமிட்டி அறிக்கை | 1993 |
| 13 | தேசியப் பாடஏற்பாடு வலைச்சட்டம் | 2005 |
| 14 | கல்வி உரிமைச் சட்டம் | 2009 |
| 15 | என் சி எப் டி இ | 2009 |

எனும் குழுக்களின் அறிக்கைகளின் முக்கியத்துவம், சிறப்பு, அவற்றின் பகுப்பாய்வு என்பன கற்றல் பொருளாக ஆக்கப்படுகின்றன.

## 1. மெக்காலே கல்வித் திட்டம் ( 1835 )

நவீன இந்தியக் கல்வியை வடிவமைப்பதில் பெரும் பங்கு வகித்த சட்ட உருவாக்கக் குறிப்பே 1835 ஆம் ஆண்டின் மெக்காலே கல்வித் திட்டம். எதிர்காலக் கல்வியில் தாக்கம் செலுத்தும் இக்குறிப்பின் பகுப்பாய்வு ஆசிரியப் பயிற்சி மாணவர்களைப் பொறுத்த வரையில் முக்கியமானதாகும். ஆங்கிலக் கல்வியும் மேற்கத்திய கருத்துகளும் வேரூன்றுவதற்கு உரிய முக்கியத்துவம் அளித்தே மெக்காலேயின் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இயல்பாகவே இத்திட்டம் காலனி ஆதிக்கத்தின் விருப்பங்களின் பகுதியாகும்.

*சுதந்திரத்திற்குப் பின்னர் உள்ள பாரதத்தில் தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட கல்வியைத் தவிர்க்கும் முறையையே நாம் பார்க்கிறோம். மகாத்மா காந்தி, தாகூர் எனும் கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துகளைப் பொருட்படுத்தாமல் இன்றளவும் மேற்கத்திய மொழியோடும் கல்வி முறையோடும் உள்ள நாட்டம் எதனால் என்ற வினாவை நாம் எழுப்ப வேண்டியுள்ளது. விரிவான கற்றலும் கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும் இங்கே இன்றியமையாததாக ஆகின்றன.*

இந்தியக் கல்வி வரலாற்றில் 1813 முதல் நாற்பது ஆண்டுகள் விவாதங்களின் காலமாக அமைந்தன. 1806– 1813 வரை மின்றோ பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். ஆங்கிலேயர்கள் இந்தியப் பண்பாட்டிற்கு உரிய முறையில் ஊக்கம் அளிக்க வேண்டும் என அவர் வலுவாக வாதிட்டார். அவ்வாறு கிழக்கத்தியவாதிகளான கம்பெனி அலுவலர்களும், மிஷனரிகளை ஆதரிக்கும் மேற்கத்திய வாதிகளும் இரு பிரிவுகளாகப் பிரிந்தனர். கம்பெனி இயக்குனர் குழுவிலும் இந்த இரு கண்ணோட்டங்களுக்கும் சமப் பிரதிநிதித்துவம் காணப்பட்டது. 1835 இல் இப்பிரச்சினையை அன்றைய கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பென்டிங் பிரபுவின் தீர்மானத்திற்கு விடுவதற்குக் குழு தீர்மானித்தது.

அன்று பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் ஜெனரல் கமிட்டியின் தலைவராகவும் கவர்னர் ஜெனரலின் செயலாக்கக் குழுவின் சட்ட உறுப்பினராகவும் இருந்தவர் மெக்காலே பிரபு ஆவார். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு மெக்காலேயின் புகழ்பெற்ற கல்வித் திட்டம் பிறந்தது.

1835 பிப்ரவரி மாதத்தில் இந்தியக் கல்வி வரலாற்றின் அடிப்படைப் பதிவுகளில் ஒன்றான மெக்காலே கல்வித் திட்டம் வெளியிடப்பட்டது. 1813 ஆம் ஆண்டு சார்ட்டரின் விதிகளுக்கு ஏற்ப எவ்வகைக் கல்வியைப் பாரதத்தில் நடைமுறைப்படுத்தலாம் எனத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு மெக்காலேவுக்கு அளிக்கப்பட்டிருந்தது. மெக்காலேயின் தாக்கங்களை இவ்வாறு தொகுக்கலாம்.

- 1813 ஆம் ஆண்டு சார்ட்டரில் பயன்படுத்தப்பட்டிருந்த 'இலக்கியம்' என்பது ஆங்கில இலக்கியம் எனவும் 'பண்டிதரான இந்தியர் என்பது தரும் பொருள் லோக்கின் தத்துவச் சாத்திரம், மில்ட்டனின் கவிதை எனபனவற்றில் ஆங்கில அறிவில் ஆழ்ந்த புலமை உடைய நபர் என்றும் அவர் விளக்கினார்.
- ஆங்கில மொழியின் வாயிலாக மட்டுமே அறிவியல் அறிவைப் பெற இயலும் என உறுதியாகக் கூறினார்.
- கிழக்கத்திய கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து செயல்படுவதில் அவர் மறுப்பினைப் பதிவு செய்தார்.

- இந்தியாவின் வட்டார மொழிகளை ஆங்கில இலக்கியத்திலிருந்தும் அறிவியலில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வளப்படுத்தவும்.
- இந்தியர்களின் இடையே ஐரோப்பிய இலக்கியத்தையும் அறிவியலையும் பரப்புதல் வேண்டும்.
- கற்றல் ஊடகத்தை ஆங்கிலம் ஆக்குவதில் எவருக்கும் எதிர்ப்பு கிடையாது என வெளியிட்டார்.
- இந்தியாவிலும், அரேபியாவிலும் உள்ள எல்லா இலக்கியங்களையும் விட விலை மதிப்பு மிக்கது ஓர் அலமாரியில் உள்ள ஐரோப்பிய இலக்கியம் எனக் கருத்து தெரிவித்தார்.
- ஆங்கில மொழியின் அபாரமான திறன் குறித்தும் கற்றல் ஊடகமாக அங்கீகரிக்கப்படுவதற்கு உரிய தகுதியையும் எடுத்துக் கூறினார்.
- உயர்குடியில் பிறந்து இந்திய ஆட்சித் துறையில் இருப்பவர்களுக்கு ஆங்கிலத்தில் புலமை உண்டு. ஆங்கிலத்தைக் கிழக்கிந்திய நாடுகளின் மொத்தப் பகுதியினுடையவும் மொழியாக மாற்றுவதற்கு வாய்ப்பு உண்டு.
- ஆட்சியாளர்களான நமக்கும் நாட்டு மக்களான இந்தியர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் செய்வதற்குத் துணைபுரிவதும் இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியர்கள் எனினும் கண்ணோட்டத்திலும் புத்திக் கூர்மையிலும் நன்னெறி உணர்விலும் ஆங்கிலேயர்களான ஓர் இனத்தைப் படைப்பதற்கு உரிய அனைத்துமே நாம் செய்ய வேண்டி உள்ளது என்ற கூற்றின் வழியாக இந்தியாவின் ஆங்கிலக் கல்வியின் நோக்கத்தை அவர் தெளிவுபடுத்தினார்.

மெக்காலேயின் நோக்கம் இந்தியாவில் நடைமுறைப்படுத்தியதன் விளைவாக பிற இனத்தாரை ஆங்கிலத்தின் தாக்கத்தினால் ஓர் எல்லை வரை இன்றளவும் அடிமைப்படுத்த இயல்கிறது. நிகழ் காலத்தில் இத்திட்டத்தைப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது.

### 2 வுட்ஸ் டெஸ்பாச் ( 1854)

இந்தியக் கல்வியின் மற்றொரு மைல்கல்லே 1854 ஆம் ஆண்டு வுட்ஸ் டெஸ்பாச் என்ற அறிக்கை. 1853 இல் கிழக்கிந்தியக் கம்பெனி சார்ட்டர் புதுப்பித்தல் தொடர்பாக இந்தியக் கல்வின் நிலை பற்றி ஆங்கிலப் பாராளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு ஒரு முழு விசாரணையை மேற்கொண்டது. கடந்த காலத்தின் கல்விக் கொள்கைகளை அலசி ஆராய்தல் மட்டுமன்று எதிர்காலக் கல்விக் கொள்கையை உருவாக்குவதும் அதன் முக்கிய இலக்கு ஆகும். அத்தேடுதலின் விளைவாகவே கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குனர்கள் 1854 ஜூலை 19 அன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வுட்ஸ் டெஸ்பாச் என்ற அறிக்கை வாயிலாக இந்தியாவின் ஆங்கில கவர்னர் ஜெனரலுக்குக் கல்வி சார்ந்த வழிமுறை பற்றிய அறிவுரைகளை எடுத்துக் கூறினர். அன்றைய கிழக்கிந்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக இருந்த சால்ஸ் வுட்டின் பெயரில் அந்த அறிக்கை அறியப்படுகிறது. மிக முக்கியக் கொள்கை உருவாக்கத்தை முன் வைத்த இந்த அறிக்கை பிரிட்டிஷ் இந்தியக் கல்வியின் மாக்னாகார்ட்டா என்றும் அழைக்கப்படுகிறது.

**அக்காலம் வரை கல்விதுறையில் புறக்கணிக்கப்பட்ட பலவற்றிற்கும் முக்கியத்துவம் வழங்கிக் கொண்டே 1854 இன் கொள்கை உருவாக்கப்பட்டது.**

- மேற்கத்திய அறிவியல், அறிவு, பண்பாடு என்பனவற்றின் உயர் பயன்பாடுகள் இந்திய மக்களில் சென்றடைய வேண்டும்.
- இது இந்திய மக்களின் வினைத்திறனையும் நற்பண்புகளையும் வளப்படுத்தும். இந்தியாவில் கிடைக்கும் வளங்களின் பெருக்கத்திற்கு இது துணைபுரியும் அதன் வாயிலாகப் பொருளா

தார வளர்ச்சிக்கும் வாணிபப் பரவலுக்கும் வழிகாட்டும்.

- ஐரோப்பிய அறிவு உட்கொள்கின்ற கலைகள், அறிவியல், தத்துவம், இலக்கியம் என்பனவற்றின் கற்றலே கல்வியின் நோக்கம்.
- ஆங்கில மொழி வழிக் கற்றலை நடைமுறைப்படுத்த விரும்புவோர் அனைவருக்கும் அது உதவி புரியும்.
- சாதாரண மக்களுக்கு வட்டார மொழியில் கல்வி கற்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் வட்டார மொழியில் கல்வி கற்போர் ஆங்கில மொழியைக் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும்.
- இக்கொள்கை கிழக்கிந்தியக் கல்வியைக் குறைகூறவில்லை. ஆனால் அது பயனற்றது எனவும் நவீன அறிவியல் கருத்துகளைத் தெளிவுபடுத்த இயலாது எனவும் குறிப்பிடுகிறது.

**இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சில செயல்பாடுகளும் அறிவுரைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

- வங்காளம், மதராஸ், பாம்பாய் பஞ்சாப், வடமேற்கு மாகாணம் எனும் இடங்கள் ஒவ்வொன்றிலும் கல்வித்துறைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- ஒவ்வொரு மாநிலத்திலும் இத்துறையில் தலைவராகப் பொதுக் கல்வி இயக்குனரும் அவருக்கு உதவி செய்ய ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர்.
- கல்கத்தா, பம்பாய், மதராஸ் எனும் மாநிலங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவுவதற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன.
- நாடு முழுவதும் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் நிறுவுவதற்கு உரிய பரிந்துரைகளும் வுட்ஸ் டெஸ்பாச் அறிக்கையில் காணப்பட்டது.
- ஆங்கிலத்திலோ, இந்திய மொழிகளிலோ கற்பித்தல் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளிக்கூடங்களும் நடுநிலைப் பள்ளிக்கூடங்களும் வட்டார மொழிகளைக் கற்பித்தல் ஊடகமாகக் கொண்டுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் நாடு முழுவதும் நிறுவுவதே நோக்கமாகும்.
- அரசாங்கத்தின்  நிதிச்சுமையைக் குறைப்பதற்காகத் தனியார் முகமைகளுக்கு கிரான்ட் இன் எய்டு வழங்கி கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.
- அரசு உதவிபெறும் தனியார் கல்வி நிறுவனங்களில் பரிசோதனை செய்வதற்காக அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.
- ஆசிரியப் பயிற்சி மையங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் தொடங்குவதற்கு அறிவுறுத்தப்பட்டது.
- அரசு வேலைகளில் ஆங்கிலப் புலமை உள்ளவர்களை நியமிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.
- பெண் கல்வியை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்பட்டது.
- வுட்ஸ் டெஸ்பாச் வாயிலாகத் தொடங்கப்பட்ட பல சீர்திருத்தங்களும் இன்றும் இந்தியாவில் நிலை நிற்கின்றன.

## 3. ஹண்டர் குழு அறிக்கை ( 1882 )

1882 இல் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் அதிகாரம் முடிவடைந்து ஆட்சியைப் பிரிட்டீஷ் அரசர் நேரடியாக நடத்த தீர்மானித்தார். பதினான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 1882 இல் இந்தியக்

கல்வியைப் பற்றி ஆராய்ந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க கல்விக் குழு நியமிக்கப்பட்டது. 1854 ஆம் ஆண்டின் வுட்ஸ் டெஸ்பாச் அறிவித்ததற்கு ஏற்ப இந்தியாவில் கல்வி நடைபெறவில்லை என்ற புகார்களும் வலுவடைந்தன. இவற்றைக் கருத்தில் கொண்டு வில்லியம் ஹண்டரின் தலைமையில் 21 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு கல்வி பற்றிப் படிப்பதற்காக நியமிக்கப்பட்டது.

### குழுவில் முக்கியப் பரிந்துரைகள்

1. அடிப்படைக் கல்வியை உறுதிப்படுத்துதல் அரசின் கடமையாகும். அதன் நோக்கம் சாதாரண மக்களுக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதாகும். மேற்படிப்பிற்கு உரிய அடித்தளமாக ஆரம்பக் கல்வியைப் பார்க்கக் கூடாது. ஆரம்ப நிலையில் கற்பித்தல் ஊடகம் வட்டார மொழி களாக இருக்க வேண்டும்.

2. பின்தங்கிய சமூகங்களையும் பழங்குடியினரையுமே நோக்கிக் கல்வியைப் பரவச் செய்வதற் குத் தேவையான அளவு நிதியை ஒதுக்க வேண்டும். ஆரம்பக் கல்வியின் பாடத்திட்டம் பிரிட் டிஷ் ஆட்சிப் பகுதிகளில் ஒரே போன்று அமைய வேண்டும்.

3 ஆரம்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக அனைத்துத் தன்னாட்சி நிறுவனங்களும் தனிப் பட்ட நிதியை ஏற்படுத்த வேண்டும். அதற்காக அரசு நிதி உதவி செய்ய வேண்டும்.

4 அனைத்து ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண் டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5. பெண் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காகப் பெண்கள் பயிலும் பள்ளிக்கூடங்களுக்குத் தேவை யான நிதி உதவியை அளிக்க வேண்டும்.

எனும் ஏராளமான அறிவுரைகளைக் குழு ஆங்கில அரசிடம் சமர்ப்பித்தது.

### 4. ஹர்டோக் குழு ( 1929)

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்துடன் இந்தியாவில் தேசிய இயக்கம் வலுப்பெற்றது. 1921 இல் ஒத்து ழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து ஆவேசம் உற்ற இந்திய அரசியல் உலகக் கவனத்தை ஈர்த்தது. 1919 இல் சட்ட ரீதியான செயல்பாடுகளைக் குறித்து ஆராய 1927 இல் நியமிக்கப்பட்ட சைமன் குழுவை இந்தியத் தலைவர்கள் புறக்கணித்தனர். ஆனாலும் இந்தியக் கல்வியைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அன்று டாக்கா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த சர் பிலிப் ஹர்டோக் தலைவராக இருந்த குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்தியக் கல்வியை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல தகுதி வாய்ந்த பல பரிந்துரைகள் குழு அறிக்கையில் இடம்பெற்றிருந்தன.

### முக்கியப் பரிந்துரைகள்

1. நடைமுறை வாழ்க்கையில் மாணவர்களைத் தயார்படுத்த தொழில்சார் படிப்பு அடிப்படையி லான கல்வியை நடுநிலை வகுப்புகளிலிருந்தே தொடங்க வேண்டும்.

2. கல்வித்துறையில் விரயம் (wastage) தேக்கம் (stagnation) ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு, கல்வியைப் பொறுத்த வரையில் ஆண் பெண் வேறுபாடின்மை என்பனவற்றைச் சீர்ப டுத்துவதுடன் செயல்திறனை அதிகரிக்க வேண்டும்.

3. பெண் கல்விக்கும் பெண்களுக்கும் கல்வித்துறையின் பல்வேறு நிலைகளில் பிரதிநிதித்துவம் உள்ளமையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்பட்டது.

4. ஆசிரியர் துறையில் திறன் வாய்ந்தவர்களை ஈர்ப்பதற்காகப் பயிற்சி, ஊதியம், சேவை முறை

கள் என்பன மேம்படுத்த சிபாரிசு செய்யப்பட்டது.

5. ஆரம்பக் கல்வியை நான்கு ஆண்டுகள் ஆக்குதல் வேண்டும். வட்டார வசதிகளுக்கும் காலநிலைக்கும் ஏற்ப பள்ளிக்கூடத்தையும் விடுமுறையையும் தீர்மானித்தல் வேண்டும். பாட ஏற்பாடு கிராம வாழ்க்கையோடு தொடப்புடையதாக இருத்தல் எனும் பரிந்துரைகள் வழங் கப்பட்டன.

ஆனால் துரதிஷ்டவசமாக ஊக்கப்படுத்தும் இப்பரிந்துரைகளைப் பயனுள்ள வகையில் நடைமுறைப் படுத்துவதற்கு 1930 – 31 கால அளவில் உலகளாவிய பொருளாதார மந்தம் தடையாக அமைந்தது.

## 5. சார்ஜன்ட் அறிக்கை ( 1944)

இந்தியாவில் கல்விக்கொள்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்க அன்றைய கல்வி ஆலோசகராக இருந்த சார் ஜன்டிடம் அரசாங்கம் கேட்டுக் கொண்ட து. 1944 இல் அவர் சமர்ப்பித்த அறிக்கை சார்ஜன்ட் அறிக்கை எனப்படுகிறது. இந்த அறிக்கையின் பரிந்துரைகளில் இந்திய தேசியக் கண்ணோட்டமும் செல்வாக்கும் பிரதிபலித்திருந்தன என்ற தனித் தன்மையை காண இயலும்.

### முக்கியப் பரிந்துரைகள்

1 நபர் ஒன்றுக்கு 11 ரூபாயாவது கல்விக்காக இந்தியாவில் செலவிட வேண்டும் ( இது பிரிட்ட னில் 33 ரூபாயாகும்)

2 கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் வழங்க வேண்டும்.

3. 3 முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக மழலையர் பள்ளிக்கல்வி வசதியை ஆரம் பக் கல்வி நிலையங்களின் பகுதியாக ஏற்படுத்த வேண்டும். சராசரித் திறனில் மேம்பட்ட மாண வர்களுக்கு மட்டுமே உயர்நிலைக் கல்விக்கு அனுமதி வழங்க வேண்டும். தொழில்நுட்பமும் அறிவு சார்ந்ததும் ஆன பாடக் கோப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

4 கற்பித்தல் ஊடகம் தாய்மொழியில் அமைதல் வேண்டும். ஆனால் ஒரு மொழி என்ற நிலை யில் ஆங்கிலம் கற்றிருக்க வேண்டும்.

5 ஏழைகளுக்கு உதவித்தொகை வழங்குதல், அனைவருக்கும் உடல்நலப் பாதுகாப்பு, குழந்தை களுக்கு மதிய உணவு, உடல் உள்ளம் சார்ந்த சவால்களை எதிர் கொள்பவர்களுக்குத் தனிக் கற்றல் வசதிகள் ஆகியனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6. ஆசிரியைப் பயிற்சியை மேம்படுத்த வேண்டும்.

7 கல்வி அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத பொறுப்பாகும் எனவும் கல்வியின் அடிப்படையில் தான் நாட்டின் வளர்ச்சி அமைகிறது எனவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

8 ஆரம்ப நிலை- நடுநிலை சார் கல்வியில் காந்திஜியின் அடிப்படைக் கொள்கைகளை நடைமு றைப்படுத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டது. இந்த அறிக்கையின் அடிப்படையில் மையத் தில் ஒரு கல்வி மேம்பாட்டு அலுவலகம் நிறுவப்பட்டது. இந்தியன் யூனிவேர்சிட்டி கிரான்ட் கமிஷன், ஆல் இந்தியா கவுன்சில் பார் டெக்கனிக்கல் எடியூகேசன், ஜெனரல் பீரோ ஆப் எடியூகேசன் எனும் நிறுவனங்களும் நிறுவப்பட்டன.

இந்த அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஆங்கில அரசால் இயலவில்லை எனி னும் பின்னர் வந்த கல்விச் செயல்பாடுகளுக்கு வழிகாட்டியாகச் செயல்பட சார்ஜன்ட் அறிக்கைக்கு இயன்றது.

## 6. இந்திய அரசியலமைப்புச் சட்டம் ( 1950)

சுதந்திரத்திற்குப் பின்னர் பாரதத்தில் கல்வி இலக்குகளைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக அமைந்தது இந்திய அரசியலமைப்புச் சட்டமாகும். பொதுவுடைமை சார்ந்த ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் உறுதிப்பாடு மிக்க ஒரு நாட்டை உருவாக்குவதற்கும் உள்ள கட்டமைப்புகளைப் புரிந்து கொள்ளவும் செய்கின்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த பதிவே இது.

அரசியலமைப்புச் சட்டம் முன் வைக்கின்ற இலக்குகள் நிறைவேறுவதற்கு மக்கள் கல்வி கற்றிருத்தல் இன்றியமையாதது. அதனாலேயே அரசியலமைப்பின் சில பிரிவுகள் கல்விக்கு மிக முக்கியத்துவம் வழங்குகின்றன.

### முக்கிய அரசியலமைப்பு சட்ட விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. இலவச – கட்டாய தொடக்கக் கல்வி
2 சிறுபான்மையினருக்குத் தனிக் கல்வி உரிமைகள்
3 சமயம் சார் கல்வி
4 பின் தங்கிய இனத்தாரின் கல்வி
5 கல்வியில் நடுவண், மாநில அரசுகளின் பங்கு

### 6.1 இலவச- கட்டாய தொடக்கக் கல்வி

அரசியலமைப்பின் 45 ஆம் பிரிவு இலவசமும் கட்டாயமும் ஆன முழுமையான கல்வியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் 14 வயது நிறைவடையும் வரை இலவச கட்டாயக் கல்வி வழங்க வேண்டும் என இப்பிரிவு குறிப்பிடுகிறது. ஆனால் இந்த இலக்கை அடையும் முயற்சிகள் இன்றளவும் தொடர்கின்றன.

### 6.2 சிறுபான்மையினருக்குத் தனிக் கல்வி உரிமைகள்

தங்களுக்கே உரித்தான தனிப்பட்ட மொழியோ எழுத்தோ பண்பாடோ உள்ள எந்தப் பிரிவைச் சார்ந்த இந்தியக் குடிமக்களுக்கும் அவற்றைப் பாதுகாக்கும் உரிமை உண்டு என அரசியலமைப்பின் 28 (1) பிரிவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அரசு உரிமையில் உள்ளதோ அதன் நிதி உதவியால் நடத்தப்படுகின்றதோ ஆன எந்த ஒரு கல்விக்கூடத்திலும் சமயம்– சாதி– இனம் – மொழி என்பனவற்றின் பெயரிலோ பிற ஏதேனும் காரணங்களாலோ எந்த ஒரு குடிமகனுக்கும் அனுமதி மறுக்கப்படக் கூடாது என 29 (2 ) குறிப்பிடுகிறது.

அரசியலமைப்பின் 30 ஆம் பிரிவிலும் சிறுபான்மையினருக்குக் கல்வி நிறுவனங்கள் நடத்துவதற்கு உரிய உரிமைகள் பற்றி உள்ளன.

1 சமயத்தையோ மொழியையோ அடிப்படையாகக் கொண்ட எல்லாச் சிறுபான்மையினருக்கும் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் நடத்துவதற்கும் உள்ள உரிமை உண்டு.

2. சமயத்தினுடையவோ மொழியினுடையவோ அடிப்படையில் சிறுபான்மையினர் நடத்துகின்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குவதில் அரசு பாகுபாடு காட்டக் கூடாது எனவும் அரசியலமைப்பு எடுத்துரைக்கிறது.

மொழிச் சிறுபான்மைச் சமூகத்தில் பட்டவர்களின் குழந்தைகளுக்குத் தொடக்க நிலையில் அவர்களின் தாய்மொழியில் கல்வி வழங்குவதற்கான பொறுப்பு மாநிலங்களுக்கு உண்டு. அவசியமெனில் இதுபோன்ற வசதிகள் கிடைப்பதற்காக மாநிலங்களுக்கு அறிவுரை வழங்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு எனவும் 350– a பிரிவு குறிப்பிடுகிறது.

### 6.3 சமயம் சார் கல்வி

அரசியலமைப்பின் 28 ஆம் பிரிவில் சமயக் கல்வி பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் சமய சுதந்திரம் உண்டு என்று வாக்குறுதி அளிக்கின்றது எனினும் அரசுப் பள்ளிக்கூடங்களில் எந்தச் சமயம் சார் கல்வியும் நடைபெறக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 6.4 பின்தங்கிய இனத்தாரின் கல்வி

அரசியலமைப்பின் 46 ஆம் பிரிவு தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் எனும் பின்தங்கிய பிரிவினரின் கல்வி- பொருளாதாரம் சார்ந்த காரியங்களில் ஆர்வம் காட்டுவதுடன் அவர்களை அனைத்துச் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாப்பதற்கு மாநில அரசுகளை அறிவுறுத்துவதுடன் இது அவர்களின் கடமை எனவும் குறிப்பிடுகிறது.

17 ஆம் பிரிவு தீண்டாமையைத் தடுப்பதுடன் அதை அழிக்கவும் முற்படுகிறது. 378 ஆம் பிரிவில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கு அரசியலமைப்பு வழங்குகின்ற பாதுகாப்பு பற்றிய செயல்பாடுகளை உறுதிப்படுத்துவதற்குத் தனி அலுவலர்களை நியமிப்பதற்கும் வழிவகுத்துள்ளது.

### 6.5 கல்வியில் நடுவண், மாநில அரசுகளின் பங்கு

அரசியலமைப்பில் கல்வியை மாநிலங்கள் கவனிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டின் 42 ஆவது சட்ட சீர்திருத்தத்தின் படி கல்வி நடுவண், மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த பொறுப்பில் வரக்கூடியதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ( கன்கரண்ட் லிஸ்ட்) நடுவண் அரசின் ஆட்சிப் பகுதிகளில் உள்ள கல்வி நடுவண் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது.

## 7 உயர்நிலைக் கல்விக் குழு (1953)

நடைமுறையில் உள்ள உயர்நிலைக் கல்வியை ஆய்வுசெய்து அதை மேம்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க மதராஸ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் இலட்சுமணசாமி முதலியாரின் தலைமையில் 1952 இல் இந்திய அரசு ஒரு குழுவை நியமித்தது. தலைவர் உட்பட ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழு ஓராண்டினுள்ளே தங்கள் பணியைச் செய்து முடித்தனர். 1953 இல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

### முக்கியப் பரிந்துரைகள்

- ஒரு ஜனநாயகச் சமூகத்தின் குடிமகனுக்குத் தேவையான பழக்க வழக்கங்கள் அணுகுமுறைகள், குணநலன்கள் என்பன உயர்நிலைக் கல்வி வாயிலாக வளரவேண்டும். உயர்நிலைப் பள்ளி பாட ஏற்பாடு அதன் பரிமாற்றம் வாயிலாகச் சிந்தனையிலும் எழுத்திலும் பேச்சிலும் தெளிவைப் பெற்றிருக்க வேண்டும். அறிவியல் விழிப்புணர்வு, நவீன கருத்துகளை உட்கொள்ளும் திறன், ஒவ்வொரு தனிநபரின் மேன்மையையும் சிறப்பினையும் பற்றிய உணர்வு, சக உயிரிகளுடன் சேர்ந்து நிம்மதியாக வாழும் திறன் என்பன போன்றவற்றைப் பெற்றிருக்க வேண்டும்.
- 4/5 +3+4+3 என்ற வரிசையில் கல்வி நிலைகள் தீர்மானிக்கப்பட்டன. ( முறையே பிரைமரி, ஜூனியர் பேசிக், ஹயர் எலிமன்டரி, சீனியர் பேசிக், ஹையர் செக்கன்டரி, பட்டப் படிப்பு)

- இன்டர் மீடியட் நிறுத்தப்பட்டது. இன்டர் மீடியட் நிலையிலிருந்து ஓராண்டு ஹையர் செக்கண் டரியிலும் ஓராண்டு மேற்படிப்பிலும் உட்படுத்தப்பட்டன.

- மேல்நிலைப் படிப்பை நிறைவு செய்தவர்களும் ஓராண்டு பல்கலைக் கழகப் படிப்பை நிறைவு செய்தவர்களும் மருத்துவ, பொறியியல் பட்டப் படிப்புகளுக்கு அனுமதி பெறுவதற்குத் தகுதி யானவர்கள் ஆவர்.

- பொதுப் பள்ளிக்கூடங்கள் தொடரவேண்டும். ஆனால் அங்குள்ள கல்வி பொதுக் கல்வி முறை யோடு ஒத்திருக்க வேண்டும்.

- கிராமப் பகுதிகளில் ரெசிடன்ஷியல் பள்ளிக்கூடங்கள் ( தங்கிப் படித்தல்) நிறுவப்பட வேண் டும்.

- உயர்நிலைக் கல்வியைப் புனரமைப்பதற்காக நடுவண் அரசு நிதி உதவி வழங்க வேண்டும்.

- வேலை நாட்கள் 200 என உறுதிப்படுத்த வேண்டும். வாரத்தில் ஆறுநாட்கள் கல்விநாட்கள், காலநிலை, வட்டாரத் தேவைகள் என்பனவற்றிற்கு ஏற்ப கற்றல் நேரத்தை ஒழுங்குபடுத்த பள் ளிக்கூடங்களுக்கு வசதி வழங்க வேண்டும்.

- அரசு அறிவிக்கின்ற பொது விடுமுறைகளுக்கும் இரண்டு மாத கால கோடை விடுமுறைக் கும் மேலாக 15 நாட்கள் நீண்டு நிற்கும் இரு விடுமுறைக் காலங்களும் இருக்க வேண்டும்.

- நடுநிலைப் பள்ளிக்கூடத்தில் 2 மொழி, ஜூனியர் பேசிக்கின் முதல் பருவத்தில் ஆங்கிலமும் இந்தியும்; ஒரே ஆண்டில் இரு புது மொழிகளைத் தொடங்கக் கூடாது. உயர்நிலை மேல்நி லைக் காலங்களில் இரு மொழிகளை அறிந்திருக்க வேண்டும். இவற்றுள் ஒன்று தாய் மொழியோ வட்டார மொழியோ ஆக இருக்கலாம்.

- உயர்நிலை அளவில் கற்பித்தல் ஊடகம் தாய்மொழி/ வட்டார மொழியாக இருக்க வேண்டும். அத்துடன் மொழிச் சிறுபான்மையினருக்கு நடுவண் கல்வி ஆலோசனை வாரியத்தால் பரிந் துரைக்கப்பட்ட விதத்தில் வசதிகள் அமைக்க வேண்டும்.

- கற்றல் முறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அறிவு வழங்குதல் என்ற நோக்கம் மட்டும் போதாது. அறிவுநாட்டமும் மதிப்பும் வளரவேண்டும். கண்டித்தல், மனப்பாடம் செய்தல் என் பனவற்றிலிருந்து மாறி குறிக்கோள் சார்ந்ததாகவும் நுண்பார்வை மிக்கதாகவும் இயல்புச் சூழல்களுடன் தொடர்புடையதாகவும் கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

- பள்ளிக்கூடங்களில் சமயம்சார் கல்வி முற்றிலும் வாலன்டரி அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டும். அது பள்ளிக்கூடத்தின் கற்றல் நேரத்தின் பின்னரே அமைய வேண்டும். இது பெற் றோர், நிர்வாகத்தினர் என்போரின் அனுமதியுடனே நடைபெற வேண்டும்.

- பாடப் புத்தகத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு உயர் அதிகாரம் உள்ள ஒரு பாடநூல் குழுவை நியமிக்க வேண்டும்.

- தேர்வு முறையில் மாற்றம் வரவேண்டும். இன்றைய தேர்வுமுறை பாட ஏற்பாட்டின் பண்பைத் தீர்மானிக்கிறது. மாறாகப் பாட ஏற்பாட்டினை அடியொற்றியல்ல தேர்வு நடத்தப்படுகிறது.

- பள்ளிக்கூடத்தின் வெளியே இந்த அதிகாரிகள் நடத்துகின்ற பொதுத் தேர்வுகளின் எண்ணிக் கையைக் குறைக்க வேண்டும். சரியான விடையைத் தேர்வு செய்து எழுதும் (objective) தேர்வு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

- உயர்நிலைக் கல்வி வாரியம் உருவாக்க வேண்டும்.

- 1: 30 என்ற விகிதத்தில் வகுப்புகளை அமைக்கவும். ஒரு பள்ளிக்கூடத்தில் உயர் அளவில் 500- 750 குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும்.
- பயிற்சிக் கல்லூரியில் கற்றல் இலவசமாக நடைபெற வேண்டும். உதவித்தொகை வழங்க வேண் டும். சேவைக்காலப் பயிற்சி வழங்குபவர்களுக்கு ஊதியம் வழங்கவேண்டும்.
- பள்ளிக்கூடத்தில் நூலகமும் நூலகரும் இருக்க வேண்டும்.
- பள்ளிக்கூட நிர்வாக அனுமதி, ஆசிரியர்களின் பணி, ஊதியச் சட்டங்கள் என்பன கல்வித்த ரத்தை உயர்த்துவதற்கு உதவிபுரியும் விதத்தில் அமைய வேண்டும்.
- ஆசிரியர்களின் ஓய்வு வயது 60 ஆக வேண்டும்.
- தலைமை ஆசிரியர்களாகத் திறன்மிக்கோர் கிடைக்க ஊதியத்தை அதிகரிக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்தில் பார்வையிடுதலின் போது கல்வி சார் செயல்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

உயர்நிலைக் கல்விக்குச் சுதந்திர இந்தியாவில் வழிகாட்டுவதற்கு இக்குழுவினால் இயன்றது. நடை முறையில் வரும் கல்விப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முறையில் தொலைநோக்கு மிக்கப் பரிந்துரைகளை முன் மொழிய இக்குழுவால் இயன்றது.

### 8. இந்தியக் கல்விக் குழு (1964 -66)

மழலைக் கல்வி முதல் பட்டப் படிப்பிற்கு பின் உள்ள ஆராய்ச்சி வரையிலான கல்வியை அதன் முழுமையில் கண்டு கொண்டு பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும் தீர்வுகளை அறிவுறுத்தவும் ஒரு கல்விக்குழுவை நியமிக்க 1964 இல் இந்திய அரசு தீர்மானித்தது. அன்றைய யு ஜி சி தலைவ ராக இருந்த டாக்டர் டி எஸ் கோத்தாரி இக்குழுவின் தலைவர். இக்குழுவில் 17 உறுப்பினர்கள் காணப்பட்டனர். குழு பன்னிரண்டு பணிக்குழுக்களையும் (Task forces) ஏழு செயல்பாட்டுக் குழுக் களையும் நியமித்தது. வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் உள்ள 9000 நபர்களிடமிருந்து தகவல் கள் சேகரிக்கப்பட்டன. 2400 பரிந்துரைக் கடிதங்கள் பெறப்பட்டன. 1966 ஜூன் 29 ஆம் நாள் அறிக்கை தயாரிக்கப்பட்டது. அறிக்கையின் முதல் பகுதி கல்வியின் இலக்கையும் எல்லா மாநிலங் களுக்கும் பொருந்துகின்ற சில பொதுக் கோட்பாடுகளையும் பற்றி விளக்குகிறது. தேசிய இலக்கை மையப்படுத்தி கல்வி முறையை நவீனப்படுத்துவதன் அவசியம், அமைப்பு சார் புனரமைப்பு, மாண வர்களைச் சேர்ப்பதில் பின்பற்ற வேண்டிய பொதுக் கோட்பாடு, ஆசிரியர்களின் பதவி உயர்வு, கல்வி பெறுவதற்கு உரிய கால வாய்ப்பை உறுதிப்படுத்துதல் என்பன விரிவாகக் கலந்துரையாடப் பட்டன.

## குழுவின் அறிவுரைகள்

விரிவான மூன்று திட்டங்களைக் குழு அறிவுறுத்தியது.

### 1. கல்வியின் உள்ளார்ந்த புனரமைப்பு

மனிதனின் வாழ்க்கைத் தேவைகளின் விருப்பத்திற்கு ஏற்ப பொருந்தும் விதத்தில் கல்வியின் உள் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அப்படியானால் மட்டுமே அது சமூகம்- பொருளாதா ரம்- பண்பாடு சார்ந்த மாற்றங்களுக்கு உரிய ஒரு வழிமுறையாக அமையும். அதற்காகக் குழு ஐந்து வழிமுறைகளை அறிவுறுத்தியது.

- கல்வியை உற்பத்தியுடன் இணைக்கவும் ( செயல் வழித் தொழில் சார் கல்வி வாயிலாக)

- கல்வித் திட்டங்களின் வாயிலாக சமூக உள்ளுணர்வையும் தேசிய உள்ளுணர்வையும் வலுப் படுத்தவும், மொழிக் கொள்கை, கற்றல் ஊடகம், தாய்மொழி, பிறமொழிக் கற்றல், பொதுப்பள் ளிக்கூடம்
- சமூக மதிப்புகளை மேம்படுத்தி ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், இலவசக் கல்வி, முதியோர் கல்வி, கற்றலில் திறன் மிக்கோருக்குத் தொடர் கல்வி வாய்ப்பு, ஆர்வமும் திறனும் உள்ள துறைகளில் தனிப்பயிற்சி, பெண்களுக்குச் சமவாய்ப்பு.
- மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கவும், அறிவியல் தொழில் நுட்பக் கல்வி வழியாக நவீ னமயமாக்கலை உறுதிப்படுத்தவும்.
- மாணவர்களிடம் மதிப்புணர்வு, சரியான மனப்பான்மைகள், அடிப்படைத் திறன்கள் என்பன வற்றை மேம்படுத்த வேண்டும். தொழில் நுட்ப அறிவும் தார்மீக மதிப்புகளும் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும்.

### 2. கல்வியின் தரத்தை மேம்படுத்தவும்

ஒவ்வொரு நிலையிலும் கல்வித்தரம் மேம்பட வேண்டும்.

சில துறைகளில் உலகத் தரத்தை அடைய வேண்டும்.

### 3. கல்வி வசதிகளின் மேம்பாடு

நாட்டிற்குத் தேவையான மனித வளங்களின் தீர்மானமும் அனைவருக்கும் சமவாய்ப்பு கிடைப்பதற்கு உரிய நாட்டின் கடமையையும் கருத்தில் கொண்டு கல்வி மேம்பாட்டைத் திட்டமிடல் வேண்டும்.

## 2. தொடக்க நிலைக் கல்வி பற்றிய பரிந்துரைகள்

- 7,8 ஆண்டுகள் தொடர்ச்சியாக நடக்கின்ற தொடக்கக் கல்வியின் நுழைவு வயது 6 வயதிற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
- தொடக்க நிலையில் பாட ஏற்பாடு எளிதாக இருக்க வேண்டும். இந்தக் கட்டத்தில் மொழி, கணிதம் என்பனவற்றில் மிககவனம் செலுத்தினால் போதும்.
- நடுநிலைப் பள்ளியில் பாட ஏற்பாடு செறிவுடன் விரிவானதாகவும் அமைய வேண்டும்.
- கற்றல் இலக்கையும் கற்றல் தரத்தையும் தெளிவுபடுத்த வேண்டும்.
- அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கும் இலவசக் கட்டாய தொடக்கக் கல்வியை உறுதிப்ப டுத்த வேண்டும்.
- 1975 -76 ஆகும் போது 11 வயது நிரம்பிய எல்லாக் குழந்தைகளுக்கும் 5 ஆண்டுகளின் மிக வார்ந்ததும் பயனுள்ளதும் ஆன கல்வியும் 1985- 86 ஆகும் போது 7 ஆண்டுகளின் கல்வி யும் பெற்றிருக்க வேண்டும்.
- விரயத்தையும் தேக்கநிலையையும் இயன்ற அளவில் குறைத்துக் கொண்டு வரவேண்டும்.
- தொழில் பயிற்சிக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- வட்டார அளவில் தொடக்கக் கல்வி வளர்ச்சிக்கு உரிய திட்டம் தயாரிக்க வேண்டும்.
- தொடக்க நிலைப் பள்ளிக்கூடங்கள் ஒன்றரை கிலோமீட்டர் சுற்றளவின் உள்ளேயும் நடுநிலைப் பள்ளிக்கூடங்கள் 2-5 கிலோமீட்டர் சுற்றளவின் உள்ளேயும் அமைந்திருக்க வேண்டும்.
- எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும்.

- புதிய சேர்க்கைக்கு முன்னரே பதிவு செய்யும் வழக்கத்தை உருவாக்க வேண்டும்.
- தேர்ச்சி விகிதம் ( எல் பி, யூ. பி) 80– 100 சதவீதமாக உயர்த்தவும்.

இடைநிறுத்தம் தடுப்பதற்கு உரிய வழிமுறைகளையும் குழுமம் பரிந்துரைத்துள்ளது.

> *இன்றைக்குத் தேவையான காரியங்களில் மிகவும் முக்கியமான ஒன்று இன்றைய கல்விமு றையில் காணப்படும் கண்டிப்புத் தன்மையில் மாற்றத்தைக் கொண்டுவருவதாகும். வேகமாக மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலகில் நிச்சயமாக ஒன்று மட்டும் உறுதி. இன்றைய கல்விமுறை இன்றைய தேவையை நிறைவேற்றும் எனினும் நாளைய தேவைக்கு அது போதுமானதாக அமையாது. ( டி. எஸ். கோத்தாரி)*

## 9. தேசியக் கல்விக் கொள்கை (1968)

கல்விக் குழுமத்தின் அறிக்கையின் (1964) அடிப்படையில் நடுவண் அரசு 1968 இல் தேசியக் கல்விக் கொள்கையை அறிவித்தது. இலவசக் கட்டாயக் கல்வியை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண் டும் என்பதும் தேசியக் கல்விக்கொள்கையின் மிக முக்கிய ஒரு கூறாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடத்தில் சேரும் ஒவ்வொரு மாணவனும் படிப்பை நிறைவு செய்கிறானா என்று உறுதிப்ப டுத்த பொருத்தமான செயல்பாடுகளை உருவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இடைநிறுத்தம் செய்யும் குழந்தைகளுக்காகவே தனிப்பட்ட முறை சாராக் கல்வித் திட்டங்களை யும் உருவாக்க வேண்டும்.

> *நமது கல்வி இலக்குகளில் மிக முக்கியமான ஒன்று பின்தங்கிய மற்றும் விளிம்பு நிலை சார் சமூகத்தினரையும் தனிநபர்களையும் அவர்களின் இக்கட்டான சூழலில் இருந்து கரைசேர்ப் பதற்கு உரிய கொடி ( தாவரம்) போன்று கல்வியைப் பயன்படுத்தும் விதத்தில் சமவாய்ப்பு அளிப்பதாகும்.*
>
> *1966 கல்விக்குழுமம்*

- சம வாய்ப்பு என்ற இலக்கை உறுதிப்படுத்துவதற்கு உரிய கல்விக் கொள்கை முன் மொழிந்த பரிந்துரைகள்.

  1. நான்காம் ஐந்தாண்டு திட்டத்திற்கு முன்னரே தொடக்க நிலையில் கட்டணமுறையை நிறுத் தவும்.
  2. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் கற்றல் கருவிகளும் இலவச மாக வழங்கவும்.
  3. கல்வியில் ஆர்வமும் திறனும் மிக்கவர்களை ஊக்குவிக்க, கல்வி உதவித்தொகை வழங் கவும்.
  4. பின்தங்கிய வகுப்பினர், எஸ். சி. எஸ். டி மாற்றுத்திறனாளிகள் என்போருக்குத் தனி ஊக் கம் அளிக்கவும்.

இந்த இலக்கை நிறைவேற்ற சில வழிமுறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- கல்வி வசதிகளை ஏற்படுத்துவதில் சமத்துவமின்மைகளை நீக்குவதற்குக் கிராமப் பகுதிகளி லும் பிற பின்தங்கிய பகுதிகளிலும் பள்ளிக்கூடங்களை நிறுவ வேண்டும்.
- அரசுப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க வேண்டும்.
- பெண் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

- உடல்- உளம் சார் குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் கல்விக்கு உரிய வசதிகளை உருவாக்க வேண்டும்.

> **தேசியக் கல்விக்கொள்கை 1968**
>
> *இந்தக் கொள்கை தேசிய வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்துதல், கல்வி அமைப்பில் புரட்சிகரமான புணரமைப்பை உறுதிப்படுத்துதல், எல்லா மண்டலங்களிலும் மேம்பாட்டை உயர்த்த அறிவியல் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்துதல், மதிப்புணர்வை விரிவுபடுத்துதல் எனக் கல்வியை வாழ்க்கையுடன் தொடர்புப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிருந்தது.*

இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதன் வாயிலாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள நன்மைகள் இந்தியக் கல்வி மண்டலத்தில் ஏற்பட்டன.

- கல்வி வசதிகள் பெரிய அளவில் இந்தியா முழுவதும் பரவின. இந்தியாவின் 90% கிராமங்களிலும் ஒரு கிலோமீட்டர் சுற்றளவிற்குள் கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டமை இக்கொள்கையின் அடிப்படையிலாகும்.
- கல்வி அமைப்பை இந்தியா முழுவதும் ஏறக்குறைய எல்லா மாநிலங்களும் அங்கீகரித்தமை இந்தக் கொள்கையின் வாயிலாகும். 10 + 2+ 3 என்ற கல்வி அமைப்பு பல மாநிலங்களிலும் நடைமுறையில் வந்தது.
- பள்ளிக்கூடப் பாட ஏற்பாடு அறிவியல், கணிதம் என்பன கட்டாயமாக்கப்பட்டன. தொழில்சார் கல்விக்குப் பள்ளிக்கூடங்களில் அங்கீகாரம் கிடைத்தது.
- பட்டப் படிப்புகள் புனரமைக்கப்பட்டன. பட்ட மேற்படிப்புகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் வசதிகள் உருவாயின.

## 10. தேசியக் கல்விக்கொள்கை (1986) ( என். ஸி. இ. 1986)

1968 இன் தேசியக் கல்விக்கொள்கை புரட்சிகரமான பல கொள்கைகளைப் பரிந்துரைத்தது ஆனால் இரு பத்தாண்டுகள் நிறைவடையும் முன்னரே 1986 இல் புதிய தேசியக் கல்விக்கொள்கை உருவாக்கப்பட்டது.

> *குறுகிய கால இடைவெளியில் புதிய தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டிய அவசியம் என்ன?*
>
> *கல்வி மண்டலத்தில் வெளிப்பட்ட எந்த மாற்றத்தைப் புதிய தேசியக் கல்விக்கொள்கை 1986 இல் முன் மொழிந்தது?*

1968 இன் தேசியக் கல்விக்கொள்கையின் பகுதியாக எடுத்துரைக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நுட்பமும் விரிவானதும் ஆன உத்திகளும் திட்டவட்டமான பொறுப்புகளும் பொருளாதார நடவடிக்கைகளும் இன்றியமையாதனவாக இருந்தன. அதைப் பயனுள்ளதாகச் செயல்படுத்த முடியவில்லை. அதன் காரணமாகத் தரமேன்மை, பொதுத்தன்மை கிடைக்கும் வாய்ப்புகள், பயன்பாடு எனும் மண்டலங்களில் இருந்த பிரச்சினைகள் அதிகரித்ததுடன் இவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து தீர்வுகாண வேண்டிய அவசர நிலையும் ஏற்பட்டது. புதிய தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்கி முன்னோக்கிச் செல்வது அல்லாமல் வேறொரு தீர்வும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

1985 ஆகஸ்டு மாதத்தில் "Challenges of Education - A policy perspective" என்ற ஆவணத்தை நடுவண் அரசு வெளியிட்டது. இந்த ஆவணம் தொடர்பான கலந்துரையாடல்களின் தொடர்ச்சியா கவே தேசியக் கல்விக்கொள்கை 1986 இல் உருவானது.

1986 இல் இந்தியப் பாராளுமன்றம் அங்கீகரித்த தேசியக் கல்விக்கொள்கை இந்தியாவில் தொடர்ந்து வந்த கல்வி வளர்ச்சியில் அதிகத் தாக்கம் செலுத்தியது. இந்த ஆவணம் பன்னிரெண்டு பகுதிக ளாக விரிவாக்கப்பட்டுள்ளது. அவற்றின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## முன்னுரை

கல்விப் பரவலின் அவசியம் குறித்தும் சமகாலச் சவால்களைத் தாண்டிச் செல்ல வேண்டியதன் இன்றியமையாமையைக் குறித்தும் கூறுகிறது. நாடு அடைந்த நன்மைகள் அனைவருக்கும் கிடைக்கப் பெற வேண்டுமெனில் கல்வி எல்லோருக்கும் கிடைப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். இந்த இலக்கு நிறைவேற புதிய தேசியக் கல்விக்கொள்கையை உருவாக்குவதற்கு நாடெங்கும் விவாதங் கள் நடத்தியும் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலிருந்தும் கருத்துகளும் அறிவுரைகளும் பெறப் பட்டன.

1968 இன் கொள்கையின் மேன்மைகளும் குறைபாடுகளும் கண்டறியப்பட்டன. நாற்சந்தியில் நின்று கொண்டிருந்த இந்தியக் கல்வி மேம்பாட்டிற்குப் புதுவடிவங்கள் வாயிலாக முன்னேற்றத் திட்டங் கள் இன்றியமையாதனவாக இருந்தன. புதிய பல சவால்களைத் தாண்டிச் செல்வதற்குப் புதிய கல் வித்திட்டம் கட்டாயமாக்கப்பட்டது.

- கல்வியின் உட்பொருளும் பங்கும் விவரிப்பதற்கே அடுத்தக் கட்டத்தில் முயற்சி செய்யப்படு கிறது. அனைவருக்கும் கல்வி என்பதை உறுதிப்படுத்தவும் அதன் வாயிலாக ஒவ்வொரு வரும் முழுமைசார் வளர்ச்சி பெறுதலை நிறைவேற்றுவதையுமே இது இலக்காகக் கொண்டுள்ளது. கல்வி இன்றைக்கும் எதிர்காலத்திற்கும் உரிய சிறந்த முதலீடு என்பதே தேசியக் கல்விக் கொள் கையின் உட்பொருள்.
- தேசியக் கல்வி அமைப்பு : எந்த வகையிலும் பாகுபாடின்றி அனைவருக்கும் கல்வி என்பதை உறுதிப்படுத்தும் அமைப்பே இது. 10+2+3 என்ற கல்விக் கட்டமைப்பை ஏறக்குறைய அனைவ ரும் அங்கீகரித்தனர். முதல் 10 ஆண்டுகளை 5+3+2 எனத் தரம் பிரிக்கவும் இங்குத் தீர்மானிக் கப்பட்டது.

தேசியக் கல்வி அமைப்பு ஒரு தேசியப் பாட ஏற்பாடு சட்டகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள து. இதில் ஒரு பொதுப் பகுதியும் வட்டாரம் சார்ந்ததும் நெகிழ்வும் உடைய ஓர் இடமும் காணப்ப டும்.

அமைதி சார்ந்த தோழமை, உலகளாவிய கூட்டுறவு என்ற கருத்துகளை இளைய தலைமுறைக்கு வழங்குதல், சமவாய்ப்பை உறுதிப்படுத்துதல்.

அனைத்துக் குழந்தைகளும் அடிப்படைத் திறன்களை பெறுகின்றனர் என உறுதி செய்தல், தொழில் நுட்பக் கல்விக்கும் உயர் கல்விக்கும் வசதி செய்தல், ஆராய்ச்சிக் கல்வியை ஊக்குவித்தல், அனைத் துக் குழந்தைகளுக்கும் நடுநிலை வரை கல்வி வழங்குதல், எழுத்தறிவுச் செயல்பாடுகள், முதியோர் கல்வி என்பனவற்றை ஊக்குவித்தலுக்குத் தேசியக் கல்விகொள்கை முன்னுரிமை அளிக்கிறது.

**பாட ஏற்பாட்டின் உள்ளடக்கக் கூறுகள்**

| |
|---|
| 1. இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாறு |
| 2 அரசியலமைப்புக் கொள்கைகள் |
| 3 குடியாட்சியும் சமயச் சார்பின்மையும் |
| 4 இந்திய மரபும் பண்பாடும் |
| 5 சமத்துவவாதம் |
| 6 பாலினச் சமத்துவம் |
| 7. சுற்றுச்சூழல் பாதுகாப்பு |
| 8 சமூகச் சமத்துவமின்மையை ஒழித்தல் |
| 9 சிறு குடும்பம் என்ற கருத்து |
| 10 அறிவியல் மனப்பான்மை |

யூ ஜி சி, தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (AICTE), வேளாண்மை ஆராய்ச்சிக் குழுமம் (ICAR), இந்திய மருத்துவக் குழுமம் (IMA) என்பன மேம்படுத்தப்பட்டன. NCERT, NIEPA எனப் பல தேசிய நிறுவனங்களைத் தேசியக் கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகப் பங்கேற்க வைத்தன.

- **சமத்துவத்திற்கான கல்வி**

கல்வி மண்டலத்தில் சமத்துவமின்மையை அகற்றுவதற்கும் இதுவரை வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட தேவைகளை எடுத்துரைக்கவும் புதிய தேசியக்கல்விக் கொள்கை முக்கியத்துவம் அளித்தது.

- **பெண் சமத்துவதற்திற்கான கல்வி**

பெண்களின் வாழ்க்கையில் அடிப்படையான மாற்றங்களை உருவாக்குவதற்கும் ஒரு முகமையாகக் கல்வியைப் பயன்படுத்துவதற்கும் உரிய வாய்ப்பு உருவானது.

- **தாழ்த்தப்பட்ட/பழங்குடியினரின் கல்வி**

தாழ்த்தப்பட்ட பிரிவினரின் கல்வியில் பிறரின் கல்விக்கு உரிய சமத்தன்மையை உறுதிப்படுத்துதல். இதற்காகப் பொருளாதார உதவிகள், கல்வி உதவித்தொகைகள், விடுதி வசதிகள், ஆசிரியப் பணிநியமனம் எனப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன.

பின்தங்கிய வகுப்பினர், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள், முதியோர் என இவர்கள் அனைவரின் குறைபாடுகளுக்குத் தீர்வு காணும் செயல்பாடுகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

- **பல்வேறு காலகட்டங்களில் கல்வி**

**மழலைப் பருவப் பாதுகாப்பும் கல்வியும்**

குழந்தை மேம்பாட்டிற்காக அதுவும் கல்வியில் முதல் தலைமுறை சார்ந்தோரின் வளர்ச்சிக்காகத் தேசியக் கல்விக்கொள்கை தனிக் கவனம் செலுத்துகிறது. குழந்தை மேம்பாட்டின் முழு இயல்பைப் பகுத்தறிந்து மழலைப் பருவக் கல்விக்கு மிக முக்கியத்துவம் அளிக்கிறது.

இதற்காக இயல்கின்ற ஒருங்கிணைந்த சேவைகளும் நிகழ்ச்சிகளும் முன்வைக்கப்படுகின்றன. குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவிபுரியும் விளையாட்டு சார் அனுபவங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. எழுத்து – எண் கல்வி இந்த நிலை ஊக்கப்படுத்தபடுவதில்லை.

- **நடுநிலைக் கல்வி**

பதினான்கு வயதுவரை உள்ள குழந்தைகளின் முழுமையான பள்ளிச்சேர்க்கைக்கும் இடைநிறுத்தம் இல்லாமல் செய்து நடுநிநிலைக்கல்வியை நிறைவு செய்வதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதனுடன் கல்வியின் தரத்தை உயர்த்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

*குழந்தை மைய அணுகுமுறை: செயல்பாடு சார்ந்ததும் செயல் தொடர்பு உடையதும் ஆன கல்வி முறை நடுநிலை வகுப்புகளில் தேவைப்படுகிறது. முதல் தலைமுறை சார்ந்த குழந்தைகளின் கற்றல் வேகத்தைக் கவனிப்பதுடன் தேவையான தீர்வு முறையைக் கற்பிக்கவும் வேண்டும். ஆரம்பக் கல்வியில் முழு வகுப்பிற்கும் தேர்ச்சி அளித்தலை உறுதிப்படுத்த வேண்டும். உடல் சார்ந்த தண்டனை கல்வி அமைப்பில் இருந்து கண்டிப்பாக விலக்கப்பட வேண்டும். குழந்தைகளின் வசதிக்கு ஏற்ப பள்ளிக்கூடச் செயல்பாட்டு நேரம், விடுமுறைக் காலம் என்பனவற்றில் மாற்றம் செய்ய வேண்டும்.*

- **பள்ளிக்கூட வசதிகள்**

பள்ளிக்கூடங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், ஒரு பள்ளிக்கூடத்தில் இரு ஆசிரியர்களையாவது நியமித்தல் ( அதில் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும்) தேவையான கற்றல் கருவிகளைக் கிடைக்கச் செய்தல்.

பள்ளிக்கூடத்திலிருந்து இடைநிறுத்தம் செய்பவர்களுக்கு முறைசாராக் கல்வி வசதியை ஏற்படுத்தி தேசியப் பாடஏற்பாடு சட்டகம் உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**உயர்நிலைக் கல்வி:** இந்தக் கட்டத்தில் அறிவியல், சமூக அறிவியல், உளவியல் பாடங்களில் அனுபவம் அளிக்க வேண்டும். தொழில்சார் கல்விக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிக்கூடங்களின் பரவல் தேசியக் கல்விக்கொள்கையில் உட்பட்டதாகும். மேதைமைமிக்க மாணவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகளைத் தயார்படுத்த வேண்டும். ஏழை மாணவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும். இதன் பகுதியாக உயர் தரம் மிக்க வளர்ச்சிக்கு மையமாக அமையும் பள்ளிக்கூடங்கள் நிறுவ வேண்டும். தங்கும் வசதிகள் கொண்ட கட்டணம் இல்லாத பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும்.

தொழில் சார் கல்வி மனித வளத் திறனையும், திறமைகளையும் மேம்படுத்துவதுடம் தொழில் சார் கல்வியை உறுதிப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. நடுநிலைக் கல்வியின் பின் பல்வேறு தொழில் கல்விக்கு வாய்ப்பு கிடைக்கும். ஆரோக்கியத் துறை, வேளாண்துறை, சமூகச் சேவைத்துறை, வாணிபத்துறை என்பனவற்றில் உள்ள தொழில் வாய்ப்புகளைக் கவனிக்க வேண்டும். இதற்காகத் தொழில்கல்வி மையங்களை அரசு, தனியார் மண்டலங்களில் நிறுவ வேண்டும்.

- **உயர்கல்வி– ஆராய்ச்சிக் கல்வி**

உயர்கல்விக்கும் ஆராய்ச்சிக் கல்விக்கும் 1986 இன் தேசிய கல்விக் கொள்கையில் மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மனித இனம் எதிர்கொள்ளும் சமூகமும் பண்பாட்டுடன் புதுமையும் ஆன்மீகமும் சார்ந்த பிரச்சினைகளைப் பிரதிபலிப்பதற்கு வாய்ப்பு அளிப்பதாக இருக்க வேண்டும். உயர்கல்விப் பாடங்களையும் பாடப்பிரிவுகளையும் புனரமைக்க வேண்டும். ஆராய்ச்சிக் கல்வியைப் பல்கலைக்கழக அளவில் ஊக்குவிப்பதுடன் அதற்கு உதவிகள் அளிக்கவும் வேண்டும். மேலும் ஆராய்ச்சியின் தரம் மேம்படவும் வேண்டும்.

திறந்த பல்கலைக்கழகங்களும் தொலைதூரக் கல்வியும் உயர்கல்வியின் ஜனநாயகமயமாக்கலையும் பரவலையும் உறுதிப்படுத்தும். இந்த இலக்கை நிறைவேற்றுவதன் பகுதியாகவே இந்திராகாந்தி திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அதனுடன் கிராமியப் பல்கலைக்கழகங்கள் என்ற கருத்தும் புதிய கல்விக்கொள்கையில் எடுத்துரைக்கப்பட்டது.

தொழில்நுட்பக் கல்வி, கல்வி மேலாண்மை என்பனவற்றின் வளர்ச்சியை இலக்காகக் கொள்ள வேண்டும். கல்வி அமைப்பைப் பயனுள்ளதாக இயக்குவதற்கு உரிய உத்திகளும் செயல்களும் தேசியக் கொள்கையில் விளக்கப்பட்டுள்ளன.

கல்வியின் உள்ளடக்கம், செயல்முறை என்பன நம் பண்பாட்டை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். குழந்தைகளின் அழகுணர்வு, இசைவு, சீராக்கம் என்று முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

முறைசார் தகுதிகளுக்கு அப்பால் நிபுணர்களின் சேவை பள்ளிக்கூடங்களில் கிடைக்கச் செய்ய வேண்டும். மொழிக்கல்வி, செயல்வழிக் கல்வி, சுற்றுச்சூழல் கல்வி, கணிதம், அறிவியல், உடல் நல– உடற்பயிற்சிக் கல்வி என்பனவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நூலகம், நவீன தொழில நுட்பம், பல்வேறு ஊடகங்கள் என்பனவற்றைப் பள்ளிக்கூடத்தில் பயன்படுத்த வேண்டும்.

## மதிப்பீடு

மதிப்பீட்டுச் செயல்பாட்டிலும் தேர்விலும் மாற்றங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

தேர்வுகள் கல்வியில் பயன்மிக்க மாறுதல்களை ஏற்படுத்துவதற்குத் துணைபுரிகின்றனவாக அமைய வேண்டும்.

கற்பித்தல் நோக்கமும் தேர்வு முறைகளும் ஒன்றோடொன்று தொடர்புள்ளனவாக இருக்க வேண்டும். அது குழந்தையின் மேம்பாட்டிற்கும் கற்றல் செயல்பாட்டை நவீனப்படுத்தவும் உதவிபுரிய வேண்டும்.

நினைவு கூர்மையைச் சோதித்துப் பார்ப்பதன் முக்கியத்துவம் குறைக்கப்பட வேண்டும். தொடர்ச்சியானதும் முழுமையானதும் ஆன மதிப்பீட்டிற்கு எல்லாத்துறைகளிலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

மதிப்பீடு செய்தல் குழந்தைக்கும் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் பயன்படுவதாக அமைய வேண்டும்.

மதிப்பெண்களுக்குப் பதிலாகத் தரம் வழங்குவதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## ஆசிரியர்

*ஆசிரியரின் தேர்வு, ஆசிரியர் சங்கங்களின் பங்கு, ஆசிரியக் கல்வி ஒரு தொடர் செயல்பாடு, முயற்சிகள், டயட்டுகள் எனும் காரியங்கள் தேசியக் கல்வியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் கல்வி மேலாண்மை, வளங்கள், எதிர்கால கல்விக் கோட்பாடு என்பன எடுத்துரைக்கப்படுகின்றன. சுருக்கமானது எனினும் கல்வியின் அனைத்துத் துறைகளையும் தொட்டுள்ளது. 1986 இன் தேசியக் கல்விக்கொள்கையின் வரைவு எதிர்கால இந்தியாவிற்கு ஒரு வழிகாட்டியாகும்.*

### 11. புரோகிராம் ஆப் ஆக்ஷன் 1992

1986 இல் தேசியக் கல்விக் கொள்கையை மதிப்பிடுவதற்கு 1990 நவம்பர் 7 ஆம் தேதி ஆச்சார்யா

இராமமூர்த்தி தலைவரும் வேறு 16 உறுப்பினர்களும் உள்ள ஒரு குழுவை நடுவண் அரசு உருவாக்கியது.

அதன் கவனத்தில் உட்பட்ட கருத்துகள் இவையாகும்.

1. 1986 இன் தேசியக் கொள்கையையும் அதன் செயலாக்கத்தையும் மதிப்பீடு செய்தல்.

2. கல்விக்கொள்கையின் பரிந்துரைகளில் செய்ய வேண்டிய மாற்றங்களை அறிவுறுத்துதல்.

3 மாற்றம் செய்யப்பட்ட கொள்கையைக் குறிப்பிட்ட காலத்திற்கு உள்ளே நடைமுறைப்படுத்துவதற்கு உரிய செயல்திட்டத்தைப் பரிந்துரை செய்தல்.

இதற்காக 6 துணைக் குழுக்கள் உருவாகிச் செயல்படத் தொடங்கின.

**ஆச்சாரியார் இராமமூர்த்தி** (1913– 2010) சமூக ஆர்வலர், காந்தியவாதி, கல்விநிபுணர். 1990 இல் இராமமூர்த்தி மறுபரிசீலனை குழுவின் தலைவர் ஸ்ராம் பாரதி (Shram bharathi) யின் இயக்குனர் பத்மஸ்ரீ விருது கிடைத்துள்ளது. (1999)

## முக்கியப் பரிந்துரைகள்

- பெண் குழந்தைகளின் முழுமையான பள்ளிக்கூடச் சேர்க்கையை உறுதிசெய்வதற்கு வட்டார அளவிலான வேறுபாடுகளைக் கவனத்தில் கொண்டே திட்டமிடல் வேண்டும்.
- கல்வியின் பல கூறுகளையும் கருத்தில் கொண்டே திட்டமிடல் வேண்டும். அதிகாரப் பரவலும் பங்களிப்பும் சார்ந்த திட்டமிடல் வட்டாரத் தேவைகளைக் கவனத்தில் கொள்வதற்கு உதவிசெய்யும்.
- பாட ஏற்பாட்டில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய சூழல்களை உருவாக்க வேண்டும். எடுத்துக்காட்டாக வரலாற்றுக் கல்வியில் சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை எடுத்துக்கூற வேண்டும்.
- கணிதம், அறிவியல் என்பன முக்கியத்துவத்துடன் பெண்குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.
- ஆண்– பெண் பாகுபாடின்றி பாடஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- அடிப்படைச் சட்டங்கள் குறித்த அறிவு( பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பைக் குறித்து) அரசியலமைப்பு வழங்கும் பாதுகாப்பு என்பன தொடர்பான கருத்துகளைக் கலந்துரையாட வேண்டும்.
- பாலினச் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதுடன் பாடப்புத்தகத்தில் பாலினச் சமமின்மையை நீக்குவதற்குத் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.
- பெண்குழந்தைகளுக்குத் தொழில்சார் கல்வி, கல்வியின் பல்வேறு துறைகள் மூலமாக வழங்குவதற்குத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.
- ஆசிரியப் பயிற்சி, ஆசிரியக் கல்வி என்பன புனரமைக்க வேண்டும்.
- பணிபுரியும் காலத்தில் உள்ள பயிற்சி டயட்டுகள் – பள்ளிக்கூடத்தின் பல்வேறு துறைகளுடன் ஆலோசனை நடத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.
- பெண்களின் கற்றல் மையமும் சமூக அறிவியல் ஆராய்ச்சி மையமும் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் எட்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் கூறாக உருவாக்க வேண்டும்.
- பெண்களைக் குறித்துள்ள கல்வி ஆய்வுகளின் கண்டுபிடிப்புகளைப் பாடஏற்பாடில் உட்படுத்த வேண்டும்.

- மகளிர் மேம்பாட்டிற்காக மகளிர் அமைப்பு போன்ற செயல்பாடுகளைத் தொடங்க வேண்டும்.
- ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிற்படுத்தப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் என்போரின் கல்வி முன்னேற்றத்திற்குப் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டன.
- பொதுப் பள்ளிக்கூடங்களின் பரவல் நடுநிலைக் கல்வி கிடைக்கச் செய்தது. இத்துறைக்கு அதிகத் தொகை வழங்குவதன் வாயிலாக அடிப்படை வசதிகளை விரிவுபடுத்த இயலும்.
- பௌதீகமும் கல்வி சார் மேம்பாட்டையும் இலக்காகக் கொண்டு ஆபரேஷன் பிளாக் போர்ட் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆரம்பநிலையில் பயிற்றுவிக்கும் மொழி தாய்மொழியாக இருக்க வேண்டும். உயர்நிலையில் வட்டார மொழியைக் கற்பிக்க வேண்டும். 10 ஆண்டுகளுக்குள் பொதுப் பள்ளிக்கூடங்களைக் கட்டம் கட்டமாக நிறுவ வேண்டும். பள்ளிக்கட்டணம், காப்பிடேஷன் கட்டணம் என்பனவற்றைத் தவிர்க்க வேண்டும். இனிமேல் நவோதயா பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க வேண்டிய தேவை இல்லை. இப்போது உள்ளவற்றைப்(261) புதுப்பிப்பதுடன் வளப்படுத்தவும் வேண்டும்.

கற்றல் நிகழ்வில் மழலைப் பருவக் கவனிப்பையும் கல்வியையும் உட்படுத்த வேண்டும். கல்வி உரிமையை அடிப்படை உரிமையின் உள்ளே உட்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

என் பி இ பத்தி 55 குறிப்பிட்ட நடுநிலைக் கல்வியை முழுமையாக்குதல், தரம்மிக்கக் கல்வியை உறுதிப்படுத்துதல் என்பனவற்றுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று காரியங்களையும் உட்படுத்த வேண்டும்.

- பணிமண்டலத்துடன் இணைந்த செயல்பாடு
- சமூகத்தையும் கல்வியையும் இணைத்தல்
- அதிகாரப் பரவலும் பங்களிப்பு முறையும் உள்ள கல்வியைத் திட்டமிடுதலும் மேலாண்மையும்.

இவ்வாறு என் பி இ 1986 பின்னர் கல்வி மண்டலத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் அடித்தளப் பதிவாகக் கவனிக்கப்பட்டது.

## 12. யஸ்பால் குழு அறிக்கை

### ஆர் கே நாராயணன்

> பள்ளிக்கூடப் பையின் எடை குழந்தையின் முதுகெலும்பை வளைப்பது மட்டுமன்றி, சிறுவயது முதல் கற்றல் சுமையைச் சிரமகரமாக மாற்றவும் செய்கிறது. வீட்டுப் பாடங்கள், டியூஷன், தேர்வுகள் என இவற்றின் காரணமாக விளையாட நேரம் கிடைப்பதில்லை. மேலும் கற்றல் மகிழ்ச்சி தராத செயலாக மாறுகிறது. இராஜ்ய சபையில் கவனாஈர்ப்பு தீர்மானம் உரையாடலில் இருந்தது.

ஆர். கே நாராயணனின் கருத்துடன் நீங்கள் ஒத்துப் போகிறீர்களா? வீட்டு வாசலுக்கு வரும் பள்ளிப் பேருந்தில் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குச் செல்கின்றனர். இங்குப் பள்ளிக்கூடப் பையின் எடை பிரச்சினை ஆகுமா? ஆகுமெனில் தீர்வு என்ன? எதனால்?

பள்ளிக்கூட மாணவர்களின் கற்றல் எடை அது பாடப் புத்தகம் ஆயினும் உள்ளடக்கம் ஆயினும் குழந்தையின் கல்விசார் மேன்மையை மிகக் கடுமையாகப் பாதிக்கிறது என ஏராளமான ஆய்வுகள் சான்றுகளாக உள்ளன.

ஈஸ்வர்பாய் பட்டேல் ரிவியூ குழு 1977

என் சி இ ஆர் டி வர்க்கிங் குழு 1984

இராமமூர்த்தி குழு 1992

கற்றல் எடையைக் குறைத்துக்கொண்டு பயன்மிக்கக் கல்வியை உறுதிப்படுத்துவது எவ்வாறு என்பதை அறிவுறுத்த பேராசிரியர் யஸ்பாலின் தலைமையிலான தேசிய ஆலோசனைக் குழுவை 1992 மார்ச் 1 இல் நடுவண் மனிதவள மேம்பாட்டுத் துறை நியமித்தது. இந்தக் குழு 1993 ஜூலை 15 இல் 28 பக்கங்கள் அடங்கிய சுமையில்லாக்கற்றல் (Learning without bauden) என அறியப்படுகின்ற அறிக்கையைத் தாக்கல் செய்தது.

**Medium of instruction**

The question of medium of instruction, particularly in early life, will not be fully resolved till the time our dominant and externally connected sections of society continue to give more importance to elementary grades in foreign language, that to intimate connection with the vernacular knowledge with our children gain during every week of their growing up before they go to school. It is because of this reason that we have restrained ourselves from repeating the recommendation that mother tongue alone should be the medium of instruction at the primary stage.

## பேராசிரியர் யஸ்பால் குழுவின் முக்கிய அறிவுரைகள்

- ஆரம்ப வகுப்புகளில் பயிற்றுமொழி தாய்மொழியாக இருக்க வேண்டும்.
- குழந்தைகளின் குழுச் செயல்பாடுகளையும் பயன்பாடுகளையும் ஊக்குவித்தல். பள்ளிக்கூடங்களில் இணைந்து செயல்படும் கல்விக்கு வாய்ப்பு அளித்தல். தனிப்பட்ட பயன்பாடுகளுக்கு உரிய முயற்சிகள் குழந்தைகளிடம் மன அழுத்தத்தை உருவாக்குவதுடன் மகிழ்ச்சியான கற்றலில் இருந்து பின்னோக்கிச் செல்லவும் வழி வகுக்கிறது.
- பாடப்புத்தகம் எழுதுதலைப் பரவலாக்கி அதில் ஆசிரியர்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.
- முதல் கால அளவிலான குழந்தைக் கல்வி தொடர்பாகச் சட்டம் வடிவமைக்கப்படல் வேண்டும். இந்தக் கட்டத்தில் எழுத்தும் வாசிப்பும் கற்றுக் கொடுப்பதையும் தேர்வுகள் நடத்துவதையும் தவிர்க்க வேண்டும்.
- எடை கூடிய பாடப்புத்தகங்களைச் சுமந்து செல்வதைத் தவிர்ப்பதற்கு அவற்றைக் குழந்தைகள் தனித்தனியாக வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். புத்தகங்கள் பள்ளிக்கூடத்தின் சொத்தாக இருக்க வேண்டும். அவற்றைப் பள்ளிக்கூடத்தில் பாதுகாக்க வேண்டும்.
- ஆரம்ப வகுப்புகளில் வீட்டுப்பாடம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். நடுநிலை வகுப்புகளில் வீட்டுப்பாடம் கட்டாயம் எனில் அவை பாடப்புத்தகத்துடன் தொடர்புடையதாக இருக்கக் கூடாது.
- ஆசிரிய மாணவ விகிதம் 1: 40 என்பதிலிருந்து 1: 30 ஆக வேண்டும்.
- கற்றலில் மின்னனு ஊடக வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.

- ஆசிரியப் பயிற்சிகளை மேம்படுத்த வேண்டும்.
- உயர்நிலை, ஆரம்ப நிலை, மழலை நிலை ஆசிரியப் பயிற்சிக்கு உரிய பி.எட் புரோகிராம் தொடங்க வேண்டும்.
- சி பி எஸ் இ பாட ஏற்பாடு நடுவண் அரசு பள்ளிக்கூடங்களிலும் நவோதயா பள்ளிக்கூடங்க ளிலும் மட்டுமே செயல்படுத்த வேண்டும்.
- கிராம, வட்டார, மாவட்ட அளவில் கல்விக்குழுக்களை நிறுவவும், கல்வி திட்டமிடலை மேற் பார்வை செய்தலும் வேண்டும்.
- பள்ளிக்கூடத்தைச் செயல்பாடுத்துவதற்கு உரிய நிதி உதவியை (மொத்த சம்பளத் தொகை யின் 10%) பள்ளிக்கூடத்தின் மராமத்துப் பணிகள் செய்தல், கற்றல் கருவிகள் வாங்குதல். பள் ளிக்கூட ஆவணங்கள் வாங்குதல் என்பனவற்றிற்குப் பயன்படுத்த வேண்டும்.
- பள்ளிக்கூடம் ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கும் சட்டத்தைக் கட்டாயப்படுத்துவதுடன் பொதுத் துறைகளுக்கும் தனியார் துறைகளுக்கும் ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- 10, 12 வகுப்புகளின் பொதுத் தேர்வில் பாடப் புத்தக மையமாகவும் வினாடிவினா மாதிரியில் உள்ளதும் ஆன வினாக்களைத் தவிர்த்து கருத்தை அடிப்படையாகக் கொண்ட வினாக்களை வழங்கும் முறையைப் பின்பற்ற வேண்டும். கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் மனப்பாடம் செய்யும் முறையைத் தவிர்ப்பதற்கும் இந்த ஒரு முறை மட்டுமே போதுமானது. மொழி, கணி தம், அறிவியல், புவியியல் என்பனவற்றின் கற்றல் முறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்.

## 13. தேசியப் பாட ஏற்பாடு வலைச்சட்டம் 2005

மனித வள மேம்பாட்டு அமைச்சர், மக்களவையில் செய்த அறிவிப்பின் படி 2004 ஜூலை மாதத் தில் என் சி இ ஆர் டி இன் செயலாக்கக் குழு கூடியதுடன் தேசிய பாட ஏற்பாடு வலைச் சட்டத்தை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டின் சுமையில்லாக் கற்றல் (Learning with-out burdon) என்ற அறிக்கையின் கருத்தை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட என் சி எப் 2000 புதுப் பிக்க வேண்டும் எனக் கல்விச் செயலர் என் சி இ ஆர் டி இயக்குநருக்கு அறிவிப்பு அனுப்பினார். இதன்படி பேராசிரியர் யஸ்பாலைத் தலைவராகக் கொண்டு நேஷனல் ஸ்டியரிங் கமிட்டியும் 21 நேஷனல் போகஸ் குழுக்களும் உருவாக்கப்பட்டன. இந்தியச் சமூகத்தின் அனைத்துத் துறை சார்ந்தோரின் கருத்துகளை ஏற்றுக்கொண்டு என் சி எப் 2005 தயாரிக்கப்பட்டது.

புதுப்பித்த தேசியப் பாட ஏற்பாடு வலைச்சட்டம் தொடங்குவது இரவீந்திரநாத் தாகூரின் நாகரிக மும் முன்னேற்றமும் என்ற கட்டுரையில் உள்ள குறிப்பின் மேற்கோளுடன் ஆகும்.

### நாகரிகமும் முன்னேற்றமும் - இரவீந்திரநாத் தாகூர்

சிறுவனாக இருந்த போது சிறுசிறு பொருட்களைப் பயன்படுத்தி நான் விளையாட்டுப் பொருட்க ளைத் தயாரிப்பேன். கற்பனையில் விளையாட்டுகளுக்கு வடிவம் கொடுப்பேன். என் மகிழ்ச்சியின் சுதந்திரம் சார் உலகில் என் நண்பர்களும் இருந்தனர். அவர்களும் சேரும்போதே என் மகிழ்ச்சி முழுமைபெறுகிறது. என் மழலைப் பருவத்தின் சொர்க்க உலகில் ஒரு நாள் பெரியவர்களின் வாணிப உலகிலிருந்து ஒரு தூண்டுதல் நுழைந்து வந்தது. ஓர் ஆங்கிலேயரின் கடையிலிருந்து வாங்கிய ஒரு விளையாட்டுப் பொருள் எங்கள் நண்பர் குழுவில் ஒருவருக்குக் கிடைத்தது. அந்த விளை யாட்டுப் பொருள் அழகானதாகக் காணப்பட்டது. அவன் அதில் பெருமிதம் கொண்டான். விளை யாட்டுகளில் கவனம் குறைந்தது. விலை உயர்ந்த அந்த விளையாட்டுப் பொருள் அவனுக்குச் சொந் தமானதால் நண்பர்கள் அனைவரையும் விட அவனே சிறப்பானவன் எனக் கர்வம் கொண்டான்.

காரணம் அவர்களின் விளையாட்டுப் பொருட்கள் விலை குறைந்தனவாகக் காணப்பட்டன. அவன் எங்களை விட நாகரீகமானவன் என்று, பொருளற்றது எனினும் அழகான ஒரு விளையாட்டுப் பொரு ளின் உரிமையாளன் அல்லவா அவன்! உற்சாகப் பெருக்கில் ஒன்றை அவன் புரிந்து கொள்ளவில் லை. அந்தச் சூழலில் சாதாரணமானது எனத் தோன்றிய ஒன்று, அழகான தன் விளையாட்டுப் பொருளை விட விலை மதிப்பான வேறொன்றை இக் கர்வத்துக்கு அடிமைப்பட்டதனால் தான் இழந்துவிட்டோம் என்ற ஒரு குழந்தையின் சுயப் பகுத்தறிதல். விளையாட்டுப் பொருள் அவனது செல்வத்தை மட்டுமே கருத்தில் கொள்கிறது. ஆனால் அவனின் குழந்தைத் தன்மையின் படைப் பாளுமையையோ விளையாட்டுகளிலிருந்து கிடைக்கும் ஆனந்தத்தையோ விளையாட்டு உலகின் நண்பர்கள் வழங்கும் பங்களிப்பையோ எதுவும் உட்கொள்வதில்லை.

குழந்தைப் பருவத்தின் சத்தே 'படைப்பாளுமையும் அளவற்ற ஆனந்தமும்' எனக் கவிஞர் அதில் நம்மை நினைவூட்டுகிறார். பெரியவர்களின் கவனக்குறைவால் அந்த இரண்டையும் அழித்துவிடு வார்கள், சுதந்திரத்தின் பின்னர் பல்வேறு பாடஏற்பாடு சார் சீர்திருத்தங்கள் நடந்தன. ஒரு தேசியக் கல்வித் திட்டத்திற்கு வடிவம் கொடுப்பதற்காக அறிவுறுத்தப்பட்டதே 1986 ஆம் ஆண்டின் தேசி யக் கல்விக் கொள்கை. அது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள நாட்டின் முன்னேற்றத்தைக் காட் டுகின்ற அடிப்படைக் காரணி உட்பட்ட ஒரு தேசிய பாட ஏற்பாடு வலைச்சட்டம் என்ற கருத்தை முன்வைத்தது. இதற்காக 1992 இல் தயாரித்த செயல்முறைத் திட்டத்தில் (POA) குறிப்பிடப்பட்டுள் ளமை இன்றியமையாமை, தரமேன்மை, நெகிழ்வு (flexibility) என்பன ஆகும்.

சமூக நீதியையும், சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட சமயச் சார்பின்மையையும் வேற் றுமைகளையும் அங்கீகரிக்கின்ற சம உரிமைகள் உடைய ஒரு சமூகமாகவே அரசியலமைப்பு இந் தியாவைக் காண்கிறது. இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் விரிவான சில கல்வி இலக்கு கள் இந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. சுதந்திரச் சிந்தனை, செயல்பாடு, பிறர் நல அக்கறை, புதுச்சூழல்களைப் படைப்பாளுமையோடும் எளிதாகவும் பிரதிபலிப்பதற்கான திறன் என்பன இதில் உட்படும்.

கற்றல் என்பது குழந்தைகளுக்குச் சுமையும் துன்பமும் உடையதாக மாறியுள்ளது. என்பது கல்வி இலக்குகளுக்கும் தரத்திற்கும் ஏற்பட்ட சிதைவுமாற்றமாகவே குறிப்பிடப்படுகிறது. இதற்குத் தீர்வு காண்பதற்குப் பாட ஏற்பாடு உருவாக்கத்தில் ஐந்து கோட்பாடுகள் குறிப்பிட்டுள்ளன. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பள்ளிக்கூடத்திற்கு வெளியே உள்ள வாழ்க்கையுடன் அறிவைத் தொடர்புப்படுத்தவும்.
2. மனப்பாடம் செய்வதைத் தவிர்க்கவும்.
3. பாடப்புத்தகத்திற்கு அப்பால் கற்றல் செயல்பாடுகளை விரிவுபடுத்தவும்.
4. தேர்வுகள் கூடுதல் இலகுவானதாகவும் வகுப்பறையில் உள்ள கற்றல் அனுபவங்களுடன் ஒருங் கிணைவதாகவும் அமைய வேண்டும்.
5. நாட்டின் ஜனநாயக அரசியலில் ஒருவருக்கொருவர் ஆர்வம் கொள்வதுடன் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு தொடர்பை வளர்த்துதலும் ஆகும்.

என் சி எப் 2005 ஐந்து அலகுகளாக வரிசைப்படுத்தப்பட்டுள்ள கல்வி தொடர்பான கண்ணோட் டம், கல்வியும் அறிவும், பாட ஏற்பாடு மண்டலங்களும் மதிப்பீடும், பள்ளிக்கூடமும் வகுப்புச்சூழ லும், அமைப்பு சார் மேம்படுத்துதல்கள் என்பனவே அவை.

- தொடக்க நிலை வகுப்புகள் ஆரம்பகாலக் குழந்தைக் கல்வியின் தொடர்ச்சியாகும். அதனால்

அதன் தொடர்ச்சியாகவே தொடக்க நிலை வகுப்புகளில் பாடவரிசையைத் தீர்மானிக்க வேண்டும்.

- மாணவர் மேம்பாடு, கல்வி ஆகியவற்றைக் குறித்துள்ள ஒருங்கிணைந்த கண்ணோட்டம் இருக்க வேண்டும்.
- உட்படுத்தப்பட்டுள்ள கல்விக் கண்ணோட்டம் காணப்பட வேண்டும்.
- அறிவுருவாக்கத்திற்கும், படைப்பாற்றலுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- உருவாக்கம், கண்டுபிடித்தல், உட்கொள்ளுதல், விமரிசனத் திறன் என்பன வளரச் செய்ய வேண்டும்.
- வட்டார அறிவுகளுக்கும், அனுபவங்களுக்கும் பாட ஏற்பாடில் இடம் அளிக்க வேண்டும்.
- சுற்றுப்புறத்துடன் தொடர்புடைய செயல்திட்டங்களில் ஈடுபடுவதற்கும் அதன் வாயிலாக அறி வுருவாக்கத்திற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- தாய்மொழி கற்பித்தல் மொழியாக இருக்க வேண்டும்.
- இந்தியாவின் பன்மொழித் தன்மையைப் பள்ளிக்கூடக் கல்வியின் வளமாகப் பயன்படுத்தவும்.
- கணிதக் கற்றலில் சிந்தனை கணிதமயமாதலுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- அறிவியல் கற்றலின் உள்ளடக்கம், செயல்முறை, மொழி என்பன கற்பவரின் வயது, தகுதி ஆகியவற்றிற்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும்.
- சமூக அறிவியலின் உள்ளடக்கத்தைப் படித்து தேர்வு எழுதுவதற்குத் தகுதி பெறுவதை விட சமூகச் செயல்பாடுகளை விமரிசனக் கண்ணோட்டத்தோடு மதிப்பிடுவதற்கு உரிய திறனை உருவாக்குதலே சமூக அறிவியல் கற்றலின் இலக்காகும்.
- அமைப்பு சார் மேம்படுத்தலின் நோக்கம் கல்வியின் தரமேன்மையாக இருக்க வேண்டும்.
- பாடஏற்பாடு புனரமைப்பின் முக்கியச் செயல்பாடு என்பது தேர்வு முறையைப் புனரமைத்தல் ஆகும். வினாக்களின் தன்மையில் மாற்றம் ஏற்படுத்தி மதிப்பீட்டுத் தேர்வில் நினைவுக் கூர் மையைவிட முக்கியத்துவம் அளிக்க வேண்டியது படைப்பாற்றலுக்கும் அறிவுசார் சிந்தனைக் கும் ஆகும்.
- தொடர் மதிப்பீடு, பருவ மதிப்பீடு எளிதாதல் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து தேர் வைக் கற்றல் அனுபவத்துடன் ஒன்றிணைக்க வேண்டும்.
- கல்விச் செயல்பாடுகளை நவீனமாக்க சமூகப் பங்களிப்பை உறுதி செய்தல் வேண்டும்.

## 14. கல்வி உரிமைச் சட்டம் 2009

**(இலவசக் கல்வி கிடைப்பதற்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் 2009)**

ஜனநாயகக் கட்டமைப்பின் நார்களை வலுப்படுத்த முழுமையான தொடக்கக் கல்விக்கு முக்கியப் பங்கு உண்டு என நம் அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரித்துள்ளது. இந்த இலக்கை அடைவதற்கா கவே இந்தியக் குடியரசின் 60 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் கல்வி உரிமை மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவிற்கு 2009 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்தது. 1-4-2010 முதல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதன் முக்கிய விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- இச்சட்டம் 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயமான தொடக்கக் கல்வியை உறுதி செய்கிறது. 1 முதல் 8 வரையுள்ள வகுப்புகளின் கல்வியே தொடக்கக் கல்வி யாகும். இதற்கான எல்லா வசதிகளையும் உரிய காலத்தில் செய்து கொடுக்க வேண்டும் என்பது அரசின் கடமையாகும்.
- பள்ளிக்கூடச் சேர்க்கைக்கு எவ்விதப் பணப்பிரிவும் இருக்கக் கூடாது.
- பள்ளிக்கூடத்திற்கு ஒரு நிர்வாகக் குழு இருக்க வேண்டும். எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம் காணப்பட வேண்டும்.
- அரசியலமைப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மதிப்புகளுக்கு ஏற்பவும் குழந்தையின் அனைத்து விதமேம்பாட்டை இலக்காகவும் கொண்டே பாட ஏற்பாடு அமைய வேண்டும். அது குழந்தை யின் அறிவுத் திறன், புத்திக்கூர்மை, உடல் - உளத் திறன்கள் என்பன வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும்.
- கற்பித்தல் முறை செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டதும் குழந்தை மையமானதும் செயல்முறை அடிப்படையிலும் அமைய வேண்டும்.
- குழந்தைகளின் புரிந்து கொள்ளும் திறனையும், புரிந்தவற்றைச் செயல்படுத்தும் திறனையும் முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் மதிப்பீடு செய்ய வேண்டும்ய
- 1 முதல் 5 வரையிலான வகுப்புகளின் கற்றல் நேரம் ஓராண்டு 800 மணிநேரம்/ 200 பணிநாட் கள்.
- 6 முதல் 8 வரையுள்ள வகுப்புகளில் கற்றல் நேரம் 1 ஆண்டு 1000 மணிநேரம்/ 220 பணிநாட் கள்.
- ஆசிரியரின் வேலை நேரம் ஒரு வாரத்தில் 45 மணிநேரமாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு வகுப்பிற்கும் கற்பித்தல் கருவிகளையும் விளையாட்டுப் பொருட்களையும் தட களப் போட்டிகளுக்கும் விளையாட்டுகளுக்கும் தேவையான கருவிகளையும் வழங்க வேண்டும்.
- கற்றலில் பின்தங்கிய மாணவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான தனிப்ப யிற்சிகள் வழங்க வேண்டும்.
- 2002 இல் அரசியலமைப்புச் சட்டத்தில் உட்படுத்தப்பட்ட பிற்சேர்க்கை 21 அ இன் படி 6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அடிப்படை உரிமை ஆக்கப் பட்டது. ஒவ்வொரு குழந்தைக்கும் நிறைவும் நியாயவும் ஆன தரம் வாய்ந்த முழு நேரத் தொடக்கக் கல்வி கிடைப்பதற்காகவே இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 15. தேசிய ஆசிரியக் கல்விப் பாட ஏற்பாடு வலைச்சட்டம் 2009

முழுமையான தொடக்கக் கல்வி என்ற அரசியலமைப்பு இலக்கிற்கு அடிக் கோடிட்டுக் கொண் டுள்ள அரசியல் தீர்மானமே குழந்தைகளின் கல்வி உரிமைச் சட்டம் 2009. இச்சட்டத்தின் இலக்கை அடைய வேண்டுமெனில் தேவையான அளவில் தகுதியும் பயிற்சியும் பெற்ற ஆசிரி யர்கள் வேண்டும்.

- ஆசிரியர் பயிற்சியின் கால அளவு
- அவர்களின் அறிவு
- கற்பித்தல் திறன்கள்

- தொழிலுடன் உள்ள கடமையுணர்வு
- சம காலப் பிரச்சினைகளை விவாதிக்கும் பழக்கம்
- அரசியலமைப்பு மதிப்புகளுடன் காட்டப்படும் ஆதரவும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை யும்.
- இவை அனைத்தும் ஆசிரியரிடம் தாக்கம் செலுத்தும் காரணிகளாகும். இவ்வாறான ஒரு சூழ லில் ஆசிரியர் கல்விக்குக் காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் வேண்டும் என NCFTE 2009 அறி வுறுத்துகிறது.

  எதிர்காலத்தில் ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டிய தகுதிகள், திறன்கள் மனப்பான்மை கள் என்பனவற்றைப் பற்றி வரைவு விவாதிக்கிறது.

## முக்கிய அறிவுரைகள்

- தொடக்க நிலை ஆசிரியர் பயிற்சிக்காக 4 ஆண்டுகள் ஒருங்கிணைந்த திட்டங்களைப் பல்க லைக் கழகங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட டயட்களிலும் தொடங்க வேண்டும்.
- ஆர்வம் உள்ளவர்களை ஆசிரியர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய உத்திகளைத் தோற்றுவிக்க வேண்டும்.
- ஆசிரியர் கல்விக்கான பாடத்திட்டம், ஆசிரியர் கல்வியின் திட்ட வரைவு போன்றவற்றைத் தயாரிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட பாட ஏற்பாடு மேம்படுத்துவதன் அடிப்படையில் ஆசிரியர் கல்வி பாட ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## தொடர் செயல்பாடுகள்

1 இந்தியக் கல்வியை மேலைநாட்டுமயமாக ஆக்குவதற்கு 1835 ஆம் ஆண்டின் மெக்காலே கல்வித்திட்டம் முக்கியப் பங்கு வகித்தது. இக்கூற்றைப் பகுப்பாய்வு செய்து குறிப்பு தயாரிக்க வும்.

2. சமகால இந்தியக் கல்வியைக் குறிப்பாக கேரளத்தின் கல்வித்துறையைப் பாதித்திருக்கும் ஆங் கிலமயமாக்கலின் போக்கில் மெக்காலேயின் அறிவே தாக்கம் செலுத்துகிறது. பகுப்பாய்வு செய்து கருத்துகளை வெளியிடவும்.

3. மெக்காலேயின் கருத்தின் முழுமையே 1854 வுட்ஸ் டஸ்பாச்சில் தாக்கம் செலுத்தியது என் பதை விளக்குக.

4. வுட்ஸ் டெஸ்பாச் உருவாக்கிய அறிவுரைகளும் செயல்பாடுகளும் எவை? விமரிசனப் பார் வையில் மதிப்பீடு செய்யவும்.

5. 1852 இல் வெளியான ஹண்டர் குழு அறிக்கையின் பரிந்துரைகள் எவை? இதன் முன்னர் வெளியான குழுப் பரிந்துரைகளிலிருந்து எத்தகைய வளர்ச்சிகளை ஹண்டர்குழு அறிக்கை யில் காணமுடிகின்றது. விளக்கக் குறிப்பு தயாரிக்கவும்.

6. 1929 ஆம் ஆண்டின் ஹர்டோக் குழுவின் முக்கியப் பரிந்துரைகள் எவை? இந்தக் குழு உரு வாக்கத்தின் அரசியல் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தவும்.

7. 1944 ஆம் ஆண்டின் சார்ஜன்ட் அறிக்கையில் இந்தியத் தேசியத் தலைவர்களின் கண்ணோட்

டமும் தாக்கமும் அமைந்திருந்தது. முக்கியப் பரிந்துரைகளை விமரிசனக் கண்ணோட்டத்து டன் மதிப்பீடு செய்யவும்.

8. சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவின் கல்வி இலக்குகளைத் தீர்மானிப்பதிலும் செயல்பாட்டுத் திட்டங்களை உருவாக்குவதிலும் வழிகாட்டியாகச் செயல்படுவது இந்திய அரசியலமைப்பு ஆகும். இந்தியா எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசியலமைப்புத் திட்டங்கள் எந்த அளவுக்குத் துணைபுரிகின்றன? பகுப்பாய்வு செய்யவும்.

9. இரண்டாம் நிலைக் கல்விக் குழுவின் (1953) சிறப்பியல்புகளையும் வரையறைகளையும் விமரிசனக் கண்ணோட்டத்துடன் விளக்கவும்.

10. இந்தியக் கல்விக்குழு 1966 முழுமையான உள்ளடக்கத்திலும் விரிவான கண்ணோட்டத்திலும் மிகவும் கவனத்தை ஈர்க்கிறது. அதன் பரிந்துரைகளை இன்றளவும் நடைமுறைப்படுத்தவில்லை. விமரிசனக் கண்ணோட்டத்துடன் பகுப்பாய்வு செய்யவும்.

11. 1966 ஆம் ஆண்டு குழு அறிக்கையில் தொடக்கக் கல்வி பற்றிய பரிந்துரைகளைக் கேரளாவில் எந்த அளவில் செயல்படுத்த இயன்றது.

12. 1968 இன் தேசியக் கல்விக்கொள்கையின் முக்கியத்துவத்தையும் முக்கியச் சிறப்பியல்புகளையும் எழுதவும்.

13. 1986 இன் தேசியக் கல்விக்கொள்கை 1968 இன் கொள்கையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது.?

14. 1986 இன் தேசியக் கல்விக் கொள்கை கேரளத்தின் கல்வித்துறையில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது? பகுப்பாய்வு செய்யவும்.

15. 1992– இன் இராமமூர்த்தி குழுவின் பரிந்துரைகளைப் பகுப்பாய்வு செய்யவும்.

16. 1993 இன் யஸ்பால் குழு அறிக்கையின் புரட்சிகரமான அறிவுரைகளைக் குறிப்பிடவும். அறிவுரைகளின் சிறப்பியல்புகளை விளக்கவும்.

17. இந்தியக் கல்வியில் NCF 2005 எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது? NCF இன் அறிவுரைகளைச் சோதித்துப் பார்த்து மதிப்பீடு செய்யவும்.

18. 2009 இன் கல்வி உரிமைச் சட்டம். 2011 இன் சட்டம் ஆகியன கேரளத்தினுடையவும், இந்தியாவினுடையவும் ஜனநாயகம், சமயச் சார்பின்மை. சுதந்திரம் எனும் அரசியலமைப்பு விழுமியங்களை வலுப்படுத்துவதில் எவ்வாறு துணைபுரிகின்றன?

19 ஒரு நாட்டின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதில் ஆசிரியரின் பங்கு மிக முக்கியமானது. ஆசிரியர்களை வலுப்படுத்துதலில் NCFTE 2009 வகிக்கும் பங்கினை விளக்கவும்.

20. தொடக்க நிலையில் கற்றல் ஊடகத்தைப் பற்றிச் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் உள்ள குழுக்களும் குழுவினரும் பல்வேறு அறிவுரைகளை வழங்கியுள்ளனர். அவற்றை ஒருங்கிணைத்து கற்றல் ஊடகம் பற்றிய சுயக்கருத்தை விளக்கவும்.

21. கல்விக் குழுக்களையும் அறிக்கைகளையும் சூழலுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்த நம்மால் முடிவதில்லை. இதற்கான காரணங்களை அறிவுபூர்வமாக வெளிப்படுத்தி தீர்வுகளைப் பரிந்துரை செய்யவும்.

# இந்தியக் கல்வியின் பிரச்சினைகளும் தீர்வு முறைகளும்

## கற்றல் அடைவு

சுதந்திரத்தின் பின்னர் இந்தியக் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், பிரச்சினைத் தீர்வு அறிவுரைகளைத் தயாரிக்கும் திறன் பெறுதல்.

## முக்கியக் கருத்துகள்

- சுதந்திரத்தின் பின்னர் கல்விக்காக அதிகத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.
- தேசிய அளவிலும் மாநில அளவிலும் கல்வி முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக ஒன்றிணைந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- இந்திய அரசின் கொள்கைகளும் திட்டங்களும் தொடக்கநிலை முதல் பல்கலைக் கழக நிலை வரையுள்ள கல்வி முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தன.
- இந்தியக் கல்வியின் முன்னேற்றத்திற்குத் தடையாகச் சில பிரச்சினைகள் நிலை நிற்கின்றன.
- கல்வியைத் தனியார் மயமாக்குதல். சாதாரண மக்களுக்குக் கல்வியை அரிதாக்குகிறது.
- முழுமையான தரம்மிக்கக் கல்வியே நம் தேசிய இலக்கு.

## ஆசிரியரின் அனுபவ விளக்கம்

ஆந்திராவில் ஒரு கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டேன். ஆசிரியர்கள் மட்டுமே அங்கிருந்தனர். மதிய உணவு நன் முறையில் சமையல் செய்யப்படுகிறது. 12 மணி அளவில் சுமார் இருபது குழந்தைகள் வந்தனர். அவர்கள் கையில் பாத்திரங்கள் காணப்பட்டன. அவர்கள் மதிய உணவு உண்டதன் பின்னர் வகுப்பில் அமர்ந்தனர். அப்போது எங்கிருந்தோ சிலர் பள்ளிக்கூடத்திற்கு வந்தனர். அவர்கள் குழந்தைகளைத் திருப்பி அழைத்துச் செல்ல வந்தவர்கள். அவர்களுக்கு வீட்டில் வேலைகள் உண்டு. இளைய குழந்தைகளைக் கவனிக்க வேண்டும். பிற வேலைகளில் வீட்டாருக்கு உதவிபுரிய வேண்டும். அவர்கள் அங்கு வந்தவர்களுடன் குழந்தைகள் சென்றனர். இந்த நிகழ்வுடன் உள்ள பிரதிபலிப்பு என்ன? இதற்கான காரணம் என்ன? இதற்கு எவ்வாறு தீர்வு காண இயலும்?

இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள பள்ளிக் கல்வியைப் பற்றி நீங்கள் புரிந்து கொண்டது என்ன?

## உள்ளடக்கம்

சுதந்திரத்தின் பின்னர் கல்வித்துறையில் பெரிய சவால்களை எதிர்கொண்டே நாம் முன்னோக்கிச் சென்றோம். ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டத்திலும் மிக அதிக நிதி ஒதுக்கீடு கல்விக்காக வைக்கப்பட்டு கல்வியின் ஒவ்வொரு நிலையிலும் முன்னேற்றத்தைத் திட்டமிட்டு உறுதி செய்ய முயற்சி செய்ததாகச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பத்து ஆண்டுகளுக்குள் 14 வயதுவரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக்கல்வி வழங்க வேண்டும் என்பது நம் நாட்டின் இலக்காகும். வறுமை ஒழிப்பு, அறிவுபூர்வமான சமயச் சார்பற்ற சிந்தனை, வளர்ச்சிக் கண்ணோட்டம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்குக் கல்விக்கு உள்ள முக்கியப் பங்கைப் பகுத்தறிந்து கொண்டே அரசியலமைப்பில் இத்தகைய ஓர் இலக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் எழுத்தறிவிலும், கல்வித்துறையிலும் ஏற்பட்ட முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரும் துணையாக அமைந்தது.

மழலையர் பள்ளியிலிருந்து மேல்நிலை வரையிலான கல்வி கிடைப்பதற்காகவே பரவலாகப் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டதுடன் குழந்தைகளை இக்கல்விக் கூடங்களில் வரச் செய்யவும் இயன்றது. உயர்கல்விக்கு உரிய கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் நிறுவப்பட்டன. தொழில்நுட்பத்துறையில் தொழில் வாய்ப்புகளையும் முன்னேற்றத்தையும் இலக்காகக் கொண்டு தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து ஐ டி ஐ முதல் பொறியியல் கல்லூரிகள் வரை நிறுவப்பட்டன.

சுதந்திரத்தின் பின்னர் கல்வித்துறையில் பொதுத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதால் சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கும் கல்விகற்று முன்னேறும் வாய்ப்பு கிடைத்தது.

அவர்கள் இந்தியாவிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பணிகளில் அமர்ந்து தங்களின் மேதைமையால் அங்கீகாரமும் பெற்றுள்ளனர்.

பெண் கல்வி முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்கது. இந்தத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் புள்ளிவிவரக் கணக்கிலிருந்து புரிந்துகொள்ள இயலும். அதைப்போன்று தனிக் கவனம் தேவைப்படும் மாணவர்களையும் வனப்பகுதிகளில் வாழக்கூடிய பழங்குடியினரினுடையவும் கல்வியை  உறுதிப்படுத்துவதற்குச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

2009 இன் கல்வி உரிமைச் சட்டத்தின்படி தொடக்கநிலைக் கல்வி மாநில அரசின் கட்டுப்பாட்டில் வந்தது. நாட்டின் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டு ஆண்டு கல்வி இதன் வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோமீட்டருக்குள்ளாக ஆரம்பக் கல்வி நிலையங்கள், குழந்தை மையக் கல்வி முறை, குழந்தைகளின் வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்ற மதிப்பீடு, தகுதியான ஆசிரியர்கள் எனக் கற்றலை உறுதிப்படுத்தும் பொதுச் சட்டமே இது.

இவ்வாறு கல்வித்துறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் இப்போதும் பல பிரச்சினைகளைக் கல்வித்துறை எதிர்கொள்கிறது. 14 வயது வரை உள்ள அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்ற இலக்கை இதுவரை நாம் அடையவில்லை. பழங்குடியினர் உட்பட்ட பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் பிரிவினர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற உணர்வு இன்னும் ஏற்படவில்லை. எழுத்தறிவின்மை, அறியாமை, வறுமை என்பனவற்றால் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதில்லை. பள்ளிக்கூடத்திற்கு வந்தாலும் கல்விகற்றலை நிறைவு செய்யாமல் விட்டுச் செல்வது வடஇந்தியாவில் பல மாநிலங்களிலும் இன்றும் காணலாம்.

- பள்ளிக்கூடங்கள் குறைவு
- பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை
- பெண்கல்வியின் குறைவு
- தரமேன்மை மிக்கக் கல்வி கிடைக்கப்பெறாத காரணத்தால் குழந்தைகளுக்கு அடிப்படைத் திறன்கள் கூடக் கிடைக்காத நிலை
- குழந்தைத் தொழிலாளர்கள்

என்பன தீர்வு காண வேண்டிய பிரச்சினைகளாக இப்போதும் நிலைகொள்கின்றன.

## கல்வித்துறையைத் தனியார்மயமாக்குதலும் வாணிபமயமாக்குதலும் உருவாக்கும் பிரச்சினைகள்.

உலகமயமாதல் மற்றும் தாராளமயமாதல் காலங்களில் அரசுகள் பொதுத்துறையிலிருந்து விலகி படிப்படியாகப் பின்னோக்கிச் செல்லும் போக்கு இந்தியாவிலும் காண முடிந்தது. இதன் காரணமாக நாடு

முழுவதும் தனியார் கல்வி நிறுவனங்கள் பெருகி வருகின்றன. கேரளம் தவிர பிற மாநிலங்களிலும் இந்தியாவின் பெருநகரங்களிலும் பள்ளிக்கூடக் கல்வியே பெரும்பாலும் தனியார் பள்ளிக்கூடங்களில் தான் நடக்கிறது. உயர்கல்வி முக்கியமாகத் தனியார் துறையில் இயங்குகிறது. இது சாதாரண மக்களுக்குப் பெரும் பொருட்செலவை ஏற்படுத்துவதுடன் அவர்களைக் கல்வியிலிருந்து அகற்றுகிறது. வாணிப மயமாக்கப்பட்ட கல்வியைப் பணம் கொடுத்து வாங்கக் கூடிய வசதியின்மையால் சமூக நீதி மறுப்பே இங்கு நிகழ்கிறது. இதுபோன்ற நிறுவனங்களை நன்கு கண்காணிக்கவோ, மாணவர்களுக்கான நீதியை உறுதிப்படுத்தவோ செய்யும் பயன்மிக்க அமைப்புகள் எதுவும் இல்லை. அதனால் பொதுத்துறையில் கல்வி நிலையங்கள் ஆரம்பித்து அங்கே தரம் வாய்ந்த கல்வியை உறுதிப்படுத்துதல் கால கட்டத்தின் தேவையாகும். இதற்கு இயலவேண்டுமெனில் தேசிய அளவில் கல்விக்கு அதிகநிதி ஒதுக்கீடு வைக்க வேண்டும்.

நமது கல்விக்கூடங்களில் காணப்படும் மற்றொரு பெரிய பிரச்சினை கல்வியின் தரம் ஆகும். பயிற்சிபெற்ற தகுதியான ஆசிரியர்களின் குறைவு பல மாநிலங்களிலும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தீர்வு காண ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆரம்பிக்க வேண்டும். பள்ளிக்கூடங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக நடமாடும் கல்வித்துறை அமைக்கப்பட வேண்டும். குழந்தை மையமும் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டதும் ஆன பாட ஏற்பாடு இல்லாமையும் தரம் இல்லாமைக்கு ஒரு காரணம் ஆகும். இதற்குத் தீர்வு காண இத்தகைய பாட ஏற்பாட்டை வடிவமைக்க வேண்டும். இதற்காகப் பாட ஏற்பாடுசார் துறையில் பெரும் முன்னேற்றத்தை அடைந்த கேரளத்தைப் போன்ற மாநிலங்களின் அனுபவத்தை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும்.

## தொடர் செயல்பாடுகள்

1. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் கல்வித் தரத்தை மேற்கோள் வழியாகக் கண்டுபிடித்து வெளியிடவும்.

2 இந்தியக் கல்வித் துறையின் பிரச்சினைகளும் அதற்குத் தீர்வு காண்பதற்கான அறிவுரைகளும் என்பது பற்றி ஒரு கட்டுரை தயாரித்து கருத்தரங்கத்தில் வெளியிடவும்.

3. புதிய காலத்தின் தேவைக்கு ஏற்ப இந்தியக் கல்வியில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் யாவை?

4. கல்வித்துறையின் தரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் எவை? விளக்கவும்.

5. பெண்கள், பிற ஒடுக்கப்பட்டோர் என்போரின் கல்வி முன்னேற்றத்திற்காகச் செய்ய வேண்டிய செயல்பாடுகளை விளக்கவும்.

### பின்னிணைப்புச் செயல்பாடுகள் ( ஆசிரிய மாணவர்கள் செயல்படுத்த வேண்டும்)

1 இந்தியாவின் அனைத்து இலக்கியங்களையும் விட விலைமதிப்பானதே ஓர் அலமாரியில் உள்ள ஐரோப்பிய இலக்கியம் என்ற மெக்காலேயின் கருத்தை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா. இத்தகைய ஒரு கருத்தை மெக்காலே வெளியிட்டதன் காரணம் என்ன? இக்கருத்தை முன்வைத்து ஒரு பொதுக்கலந்துரையாடல் நடத்தவும் ( மெக்காலே, அவர் இந்தியக் கல்வியின் தொடக்கத்தில் வழங்கிய நன்கொடைகள் மெக்காலே திட்டம், இந்திய இலக்கியம்– இதிகாசப் படைப்புகள் என்பன பற்றியும் அக்கால ஆங்கிலத்தில் இணையமும் கிடைக்கப் பெற்றிருந்ததா என்றும் புத்தகங்களும் இணையமும் பயன்படுத்தி தகவல்கள் சேகரித்ததன் பின்னர் கலந்துரையாடல் நடத்தவும்.)

2. காலனி ஆதிக்கக் காலத்தில் உள்ள கல்விக் குழுக்கள் இந்தியக் கல்விக்கு வழங்கிய வழிமுறைகள் என்பதைப் பற்றி ஒரு கருத்தரங்கம் நடத்தவும். நீங்களும் பொருள் சார்ந்து concept paper தயாரிக்கலாம். சரியாக வழிகாட்டப்பட்டது என்றோ வழிகாட்டப்படவில்லை என்றோ உங்களுக்கு வாதிடலாம். உங்கள் வாதத்திற்கான காரணங்கள் உங்கள் கட்டுரைத் தாளில் இருக்க வேண்டும். கட்டுரைத் தாளை வெளியிட வேண்டும். தொடர்ந்து பிற மாணவர்கள் எழுப்புகின்ற வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும்.

3 இந்த அலகில் கற்றல் மண்டலங்களின் வழியாகச் செல்லவும். சில மண்டலங்களில் கலந்துரையாடல்/ விவாதம்/ கருத்தரங்கம்/ சொற்பொழிவு/ தொகுத்து வெளியிடுதல் போன்ற ஏதேனும் தொடர் செயல்பாடு நடத்தும் வாய்ப்பு உள்ளது. அத்தகைய வாய்ப்பு மண்டலங்களைக் குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடிக் கண்டுபிடிக்கவும். எந்தச் செயல்பாடு நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கவும்.

குழுவில் ஒருவரை ஒருங்கிணைப்பாளராகத் தேர்ந்தெடுத்து கற்றல் செயல்பாட்டை வகுப்பறையில் நடத்தவும்.

## பார்வை நூல்கள்


1 இந்தியன் வித்யாப்யாசம் நூற்றாண்டுகளிலூடெ - தாயாட்டு சங்கரன் ( கெ எஸ் டி ஏ)

2. வித்யாப்யாசம் பாரதத்தில் - டாக்டர் டி. கெ. முகமது, கேரள பாஷா இன்ஸ்டிடியூட்

3 National Policy on Education – 1986 – MHRD Delhi – 1986

4. Learning without Burden – Yespal Committee Report – 1993, MHRD NewDelhi 1993.

5. National Curriculum framework 2005 MHRD, NewDelhi, 2005.

6. National Curriculum Framework for Teacher Education – 2009 MHRD, New Delhi 2009.

7. History of Education in Modern India 1857-2007. Suresh Chandraghosh – Orient Blackswam Ltd, Hydrabad.

8. History of Education of India, B,N. Dash, Dominant publishers and District buters, Delhi.

9. The Right of Children to free and Compulsory Education Act, 2009.

10. Report of the Committee for review of National Policy on Education 1986.

11 வித்யாப்யாச பரிவர்த்தனத்தினு ஓராமுகம் - கேரள சாஸ்திர சாகித்ய பரிஷத்

12. மலையாளத்தின்றெ பாவி- சேதுராமன் ஐ. பி. எஸ்- மாத்ருபூமி பிரஸ்தீகரணம்.

13. நம்முடெ பாஷா நம்முடெ சம்ஸ்காரம்- எடிட்டர். டோ. காவும்பாயி பாலகிருஷ்ணன்- கேரள சாஸ்த்ர சாகித்ய பரிஷத்

14. e-PG Pathsala website (NCERT)-www.ncert.nic.in/epgpathsala

அலகு 2

# கேரளக் கல்வி - வளர்ச்சியும் மேம்பாடும்

(15 மணி நேரம்)

## கற்றல் அடைவு

கேரளக் கல்வியின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் தாக்கம் செலுத்திய சாதகமான எதிரான வரலாற்றுக் காரணிகளைப் பகுத்தாராய்ந்து கருத்து முடிவுகளை அடைதல்.

### முக்கியக் கருத்துகள்

- சங்க காலத்தின் தொடர்ச்சியாக சமண- புத்த சமயக் காலகட்டங்களில் பாகுபாடில்லாத கல்வி முறை நிலை நின்றது.
- பள்ளிக்கூடங்கள், எழுத்துப் பள்ளிகள், களரிகள், கூடங்கள், மதரசாக்கள், கிறித்தவ மிஷனரிகள் ஆற்றிய பங்கு.
- சாதி, ஜன்மி (நிலப் பிரபுக்கள்) நாடுவாழி கட்டமைப்பு கல்வியில் செலுத்திய தாக்கம்.

- கேரளத்தின் கல்வி வரலாற்றைப் பற்றி நீங்கள் அறிந்தன யாவை? அதைப்பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?
- கேரளத்தின் கல்வி வரலாற்றின் தொடக்கம்?
- ஆதிகாலத்தின் பள்ளிக்கூட மாதிரிகள் எவ்வாறு இருந்தன? அவற்றின் சிறப்பியல்புகள் யாவை?
- கிறித்தவ மிஷனரிகளின் கல்விச் செயல்பாடுகள் கேரளாவின் கல்விநிலையில் எவ்வாறு தாக்கம் செலுத்தின.
- ஜன்மி ( நிலப் பிரபுக்கள்) முறை பழக்கத்தில் இருந்த காலத்தில் கல்விக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் என்ன?

இவ்வினாக்களுக்கான உங்கள் விடை என்ன?

கேரளாவின் கல்விநிலைக்கு வளமான ஒரு வரலாறு உண்டு. சங்க காலம், சமண- புத்தக் காலம் எனும் கால கட்டங்களில் எழுதப்பட்டுள்ள படைப்புகளும் பிற அடையாளங்களும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை எனினும் அக்காலத்தைப் பற்றிய ஏராளமான நூல்களும் கட்டுரைகளும் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றைப் பற்றிய ஒரு பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் படைப்புகளைப் பயன்படுத்தித் தேவையான கருத்துகளைச் சேகரிக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். அதன் பின்னர் வகுப்பறையில் கலந்துரையாட வேண்டும். அதில் உங்களுக்கே உரிய பங்கு வகிப்பதில் கவனம் செலுத்துவீர்கள் அல்லவா.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளோடு தொடர்புடைய தகவல்களைச் சேகரித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள நூல்களின் உதவியைத் தேடுவீர்கள் அல்லவா.

- கேரள சம்ஸ்காரம்- எ. ஸ்ரீதரமேனோன் (பக்கம் 21 முதல் 71 வரை 157- 175/ 189- 204)
- கேரள சம்ஸ்காரம்- பேராசிரியர் எஸ். அச்சுதவாரியார் (பக்கம் 23 முதல் 162 வரை)
- கேரளம் மலையாளிகளுடெ மாதுர்பூமி- இ. எம். எஸ்
- குடிப்பள்ளிக்கூடம் அட்சர வித்யயுடெ ஆத்யாங்கணம்- கங்காதரன் செங்ஙலூர்.

- கேரளம்- வித்யாப்யாசத்தின்றெ படவுகள்- கேரள சாஸ்த்ர சாகித்ய பரிஷத்

  www.kerala.me/education

  www.shodhganga.ac.in

இந்த அலகின் கற்றலுடன் தொடர்புடைய ஒரு பல்லூடக (Multimedia) வெளியீடு தயாரிக்கவும், வெளியீடு தயாரிப்பதற்குத் தேவையான கதைப் பலகையைத் தயாரிப்பீர்கள் அல்லவா.

மேலே கூறப்பட்டுள்ள முக்கியக் கருத்துகளுடன் தொடர்புடைய சில குறிப்புகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

### சங்க காலம் – சங்க இலக்கியங்கள்

தமிழின் மிகப் பழைய செய்யுள் நூல்களே சங்க இலக்கியம் என அறியப்படுகிறது. கேரளம் பண் டைய காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்ததனால் சங்க இலக்கியங்களைக் கற்றல் கேர ளாவின் வரலாற்றுக் கல்விக்கும் பண்பாட்டுக் கல்விக்கும் துணைபுரிவதுடன், இன்றியமையாததும் ஆகும். சங்க காலப் புலவர்களில் பலர் கேரளம் சார்ந்தோர் என்பது குறிப்பிடத் தக்கது.

சங்க காலத்தைப் பற்றிய பல்வேறு கருத்துகள் இருந்தாலு கி.பி முதல் நூற்றாண்டுகள் என்று பொது வாகக் கூற முடியும். புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணி மேகலை, திருக்குறள் என்பன முக்கியமான சங்க கால இலக்கியங்கள் ஆகும்.

சுட்டிக் காட்டுமாறு சாதிக்கட்ட அமைப்போ, சமூக வேற்றுமைகளோ சங்ககாலத்தில் இல்லை. மக் கள் சமூகச் சமத்துவத்துடன் சுதந்திரமாக வாழ்ந்தனர். சாதியின்மை இக்காலத்தின் ஒரு முக்கியச் சிறப்பியல்பாகும். சாதியின் பெயரால் உயர்வு – தாழ்வுகள், தீண்டாமை எனும் தீய பழக்க வழக்கங் கள் கேரள வாழ்க்கையைப் பாதித்திருக்கவில்லை.

பெண்களுக்குச் சமூகத்தில் உயர் பதவி அளித்திருந்தமை சங்க காலத்தின் கவனிக்கத்தக்க சிறப்பி யல்பு ஆகும். பரவலாகப் பெண்கள் கல்வி கற்றிருந்ததன் பலனாக ஔவையார் போன்ற பல பெண் புலவர்களும் அக்காலத்தில் வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறு சமுதாய அடிப்படையில் பிரிவினைகள் அங்கீகரிக்கப்படாத ஒரு வாழ்க்கை முறை நிலை நின்றிருந்த காலத்தில் கேரளாவில் சமண, புத்த சமயங்களும், அந்தணர் குலமும் உள்ளே நுழை கின்றன. மக்கள் ஒரே நேரத்தில் சமண, புத்தக் கோயில்களில் வழிபாடுகள் செலுத்தியதுடன், வைதீக விதிகளின் படி வழிபாடுகள் செய்யும் முறையில் பகையோ, போட்டியோ வெளிப்படுத்தாமல் பல் வேறு சமயங்கள் ஒன்று சேர்ந்த சிறப்பான காட்சியே தென்பட்டிருந்தது.

கிறித்துவிற்கு முன்னர் சமண சமயம் கேரளாவில் தோன்றியது. மதிலகம் கோயில், கூடல் மாணிக் கம் கோயில் என்பன ஒரு காலத்தில் சமண சமயக் கோயில்களாக இருந்தன எனக் கருதப்படுகிறது. வயநாட்டில் பத்தேரி (கணபதி வட்டம்) மானந்தவாடி எனும் இடங்களும் சமண சமய மையங்க ளாக இருந்தன. அந்த இடங்களில் சமண சமயக் கோயில்கள் உள்ளன. கேரளாவில் கி.பி 8 ஆம் நூற்றாண்டில் தொடங்கின சமண சமய அழிவுப்பாதை கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் முற்றுப்பெற்றது.

கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் அசோகப் பேரரசின் காலத்திலேயே கேரளாவில் புத்த சமயம் வந்துவிட் டது. இன்றைய கொல்லம், ஆலப்புழை மாவட்டங்களில் முக்கியமான பல புத்த சமயக் கோயில்கள் இடம் பெற்றிருந்தன. அங்கிருந்து கிடைக்கப்பெற்ற புத்தர் சிலைகள், புத்த சமயப் பிரச்சாரத்தின் சான் றுகள் ஆகும். அம்பலப்புழையில் உள்ள கருமாடிக்குட்டன் புகழ் பெற்ற புத்தச் சிலையாகும். நம்பூதி ரிமார்களின் வருகையால் கி.பி 8ஆம் நூற்றாண்டில் புத்த சமயத்தின் அழிவு தொடங்கியது.

புத்த சமயம் கேரளாவிற்கு அளித்த விலைமதிப்பற்ற நன்கொடை எழுத்தறிவும், அதன் விளைவான கல்விப் பிரச்சாரமும் ஆகும். புத்த விகாரங்களுடன் சேர்ந்து கல்விக் கூடங்களும், மருத்துவ விடுதிகளும் நடத்தும்  மரபு இருந்தது. நமது எழுத்துப் பள்ளிகளும், பள்ளிக்கூடங்களும் புத்த சமயத்தின் நன்கொடைகளாகும். குடிப் பள்ளிக்கூடமும், களரிகளும் அவ்வாறு உண்டானவையே. கோயில்களோடு சேர்ந்து பிறிகாலத்தில் எழுந்த பாடசாலைகள் புத்த சமயத்தின் தாக்கத்தால் உருவானவையே. ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை, பார்த்திவபுரம் சாலை, காந்தளூர் சாலை என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

கி.பி. 1–ஆம் நூற்றாண்டிலேயே கிறித்தவ சமயம் கேரளாவில் வந்துவிட்டது. கிறித்துவிற்கு முன் கேரளா, கிரேக்கம், உரோமாபுரி எனும் மேற்கத்திய நாடுகளுடன் கொண்டி இருந்த வணிகத் தொடர்பே இதற்குக் காரணம். கி.பி 52 இல் புனிதர் தோமையார் தன் சீடர்களுடன் முசிறியில் (இன்றைய கொடுங்கல்லூர்) வந்தார் என்று கருதப்படுகிறது. கேரளாவில் கிறித்தவர்கள் சமயப் பிரச்சாரத்தில் மட்டும் கவனம் செலுத்தவில்லை. கால – சமூக மாற்றங்களுக்கு ஏற்ப வேளாண்மை, தொழில், வணிகம் எனும் மண்டலங்களில் ஈடுபட அவர்களால் முடிந்தது. இதில் கல்வி மண்டலத்தில் நடத்திய செயல்பாடு குறிப்பிடத்தக்கதாகும். எல்.எம். எஸ் (லண்டன் மிஷன் சொசைட்டி) சி எம் எஸ் (சர்ச் மிஷன் சொசைட்டி) பாசல் மிஷன் ஆகியவற்றின் செயல்பாடுகளே கேரளாவின் நவீன கல்விக்குத் தொடக்கம் குறித்தன. கேரளாவின் கல்வி முன்னேற்றத்தில் கிறித்தவ சபைகளின் நன்கொடை விலைமதிப்பற்றது. அச்சடி வடிவத்தினுடையவும், ஊடகங்களின் ( பத்திரிகை, இதழ்கள்) செயல்பாடுகளினுடையவும் தொடக்கம் கிறித்தவ மிஷனரிகளிடம் இருந்தே ஆரம்பிக்கின்றது. ஏராளமான பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் கேரளம் முழுவதும் நிறுவ அவர்கள் முயற்சிகள் மேற்கொண்டனர்.

கி.பி 7 ஆம் நூற்றாண்டில் முகம்மது நபியின் காலத்திலேயே இசுலாமிய சமயச் செய்திகளை அரேபியர்கள் கேரளத்தில் கொண்டு வந்தனர் என்று மலபார் மானுவலில் லோகன் சுட்டிக் காட்டுகிறார். இசுலாம் சமயம் உருவான காலத்திலேயே கேரளாவில் வந்துவிட்டது. இசுலாமிய சமயக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏராளமான மதரசகளும் அவற்றுடன் இணைந்த நிறுவனங்களும் கேரளாவில் உயர்ந்து வந்தன.

ஆரியரான அந்தணர்கள் ஏராளமாகக் கேரளாவில் வந்தகாலம் கி.பி 8 ஆம் நூற்றாண்டிலாகும், இவர்களைப் பிற்காலத்தில் மலையாள பிராமணர்கள் என்றும் நம்பூதிரிமார் என்றும் அழைத்தனர். இவர்களின் வருகையால் இந்து சமயம் கூடுதல் பிரச்சாரம் பெற்றது. புத்த – சமண சமயங்கள் வலிமை இழக்கத் தொடங்கின. பிராமணர்களின் செயல்பாட்டு மண்டலம் கோயில்களை மையமாகக் கொண்டிருந்தது. கோயில்கள் வழிபாட்டு மையங்களாக மட்டும் இருக்கவில்லை. மக்களின் யோகா இடமும், அடைக்கலமும், கல்வி மையமும், கலை மையமும் ஆக இருந்தன. புத்த சமயத்தின் முறையைப் பின்பற்றி கோயில்களோடு இணைந்து கல்விச்சாலைகள் நிறுவப்பட்டன. மாணவர்களுக்கு இலவசமாகத் தங்கிப் படிப்பதற்கு உரிய எல்லா வசதிகளும் அங்கே ஏற்படுத்தப்பட்டன. திருவனந்தபுரத்தில் உள்ள வலியசாலை, திருவல்லாசாலை, மூழிக்களம்சாலை, பார்த்திவபுரம் சாலை, காந்தளூர்சாலை எனும் இவையெல்லாம் இத்தகைய கல்விச்சாலைகளாகும். இவற்றில் பார்த்திவபுரம் சாலை உயர்கல்விக்கு உரியதாக இருந்தது. தருக்கம் இலக்கணம், மீமாம்சை, வேதாந்தம், சோதிடம் என்பன இங்குக் கற்பிக்கப்பட்டன. இந்தச் சாலைகளில் பிராமண மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பிற பிரிவு மக்களுக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது. அதன் விளைவு பிற்கால சமூக வாழ்க்கையில் பிரதிபலித்தது.

## தொடர் விளைவுகள்

ஆரியப் படையெடுப்பின் விளைவாக கேரளாவின் சமூக வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற் பட்டது. மக்கள் தாயமுறை நடைமுறையில் இருந்தது. பதினோராம் நூற்றாண்டு முடிந்தவுடன் அது மருமக்கள் தாய முறையாக மாறியது. வடமொழியின் ஆதிக்கம் அதிகரித்தது. மணிப்பிரவாளம் ஓர் இலக்கிய மொழியாக நூற்றாண்டுகளாக நிலைநின்றது. சந்தேசக் காவியங்கள், சம்புக்கள், ஆட் டக் கதைகள் என்பன மணிப்பிரவாள முறையில் உள்ளவைகளாகும்.

ஆரிய ஆதிக்கத்தின் தீய விளைவுகளில் முக்கியமானது ஆரியர்கள் அறிவுறுத்தி நடைமுறைப்ப டுத்திய நால்வருணக் கட்டமைப்பின் கசப்பு அனுபவங்களாகும். ஆரியர்களின் வருகைக்கு முன் னர் வருணக்கட்டமைப்பின் பெயரால் பிரிவினைகள் இங்குள்ள மக்களிடம் காணப்படவில்லை. சங்க காலத்தில் இங்குக் கல்வி வாய்ப்பு எல்லா மக்களினித்தாருக்கும் சமமாக இருந்தது. ஆனால் ஆரியர்களின் ஆதிக்கத்தால் பெரும்பாலானோரை உள்ளடக்கிய சூத்திரப் பிரிவினருக்குக் கல்வி வாய்ப்பு விலக்கப்பட்டமைக்குச் சூத்ரட்சர சம்யுக்தம், தூரத பரிவர்ஜயேத் என ஆரியர்கள் உரு வாக்கிய சட்டங்கள் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

## ஜன்மி முறை

பிறப்புரிமை உள்ளவற்றை அனுபவிக்கும் நபரே ஜன்மி. கேரள வரலாற்றில் தொலைதூர விளை வுளை உருவாக்கிய நூற்றாண்டுப் போர் என அறியப்படும் சேர- சோழப் போரே ஜன்மி முறை தொடங்குவதை ஊக்குவித்தது. 12 ஆம் நூற்றாண்டில் நூற்றாண்டுப் போருக்குப் பின் கோயில் சொத் துக்கள் ஊராளர்களின் சுய ஆட்சிக்கு உட்பட்டன. ஊராளர்களை நம்பிய எழுத்தறிவற்ற காராளர் கள் இதைப் பற்றி அறியவே இல்லை. அப்போது பிராமணர் அல்லாதோர் இறைவனுக்கு அர்ப்ப ணித்த சொத்துக்கள் பிராமணர்களின் சொத்துக்கள் ஆயின. இப்படி பிராமணர்கள் பெரிய நிலச் சொத்துக்களுக்கு உரிமையாளர்கள் ஆயினர்.

மார்த்தாண்ட வர்மாவின் ஆட்சிக்காலத்தில் திருவிதாங்கூரில் சொத்துவரி ஏற்படுத்தப்பட்டது. (1939) கொச்சியில் 1762 இல் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளிலும் தேவஸ்தானங்களுக்கும் பிரம்ம தேயங்களுக்கும் வரி சுமத்தப்படவில்லை. வரிச்சுமையிலிருந்து தப்பிக்க ஏழைகளான பல பேர் தங்கள் சொத்துக்களைப் பதிவேட்டில் மட்டும் பிரம்மதேயம் ஆக்கினர். ஆனால் அவர்களுக் குத் தங்கள் நிலங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நிலவரி வசூலிக்க நியமிக்கப்பட்ட அலுவலர்கள் பலரும் தங்கள் அதிகார எல்லையை மீறி அதிக நிலங்களுக்கு உரிமையாளர்கள் ஆயினர். திப்பு சுல்தானின் படையெடுப்பைத் தொடர்ந்து மலபாரில் புதிய ஜன்மிகள் உருவாயினர், மலபாரிலிருந்து திருவிதாங்கூருக்குக் குடியேறிய நம்பூதிமமார்களின் சொத்துக்களைப் பலம் படைத்த பிரமுகர்கள் கைவசப்படுத்தி ஜன்மிகளாகவும் மாறினர். ஜன்மிகள் தங்களுக்குக் கிடைத்த சொத்து ரிமையைப் பயன்படுத்திக் குத்தகையைக் கூட்டுதல், உரிமையைப் பறித்தல் என்பதற்கு உரிய அதி காரத்தைப் பயன்படுத்தவும் தொடங்கினர். நாடுவாழிகளும், தேசவாழிகளும் ஆன சாமந்தர்கள் தங்கள் படைபலத்தால் நில உடைமைகளாயினர். பக்தி காரணமாக விவசாயிகள் நம்பூதிரிகளை நில உடைமையாளர்களாக அங்கீகரித்தனர் எனில் தங்களின் உயிர் பாதுகாப்பிற்காகத் தம்புரான் மாரை நில உடைமையாளர்களாக அங்கீகரித்தனர்.

கேரளாவில் நடைமுறையில் இருந்த சாதி, ஜன்மி, நாடுவாழி முறையின் கீழ் கல்வி மேல்தட்டு இனத்தினற்கு மட்டுமாக வரையறுப்பதற்குச் சமூகத்தின் மேல்தட்டினர் முயற்சி செய்தனர், அவர் ணர்களுக்குப் பள்ளிக்கூடச் சேர்க்கை அனுமதிக்கவில்லை. கீழ்ச் சாதியினருக்கு வேலைவாய்ப்புக ளும் மறுக்கப்பட்டன. அரசு வேலைகளில் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. தரமான

மொழியில் பேசும் உரிமைக்குக் கூட தடை விதிக்கப்பட்டிருந்தது. சுருக்கமாகக் கூறினால் மொழி, இலக்கியம், நில உரிமை, தொழில், கல்வி உரிமை, பொதுவழியில் நடக்கும் உரிமை, அணிகலன்கள் அணியும் உரிமை, வழிபாட்டுச் சுதந்திரம் என அனைத்துமே மேல் தட்டினருக்கு உரிய உரிமைகளாக மாறக்கூடிய நிலையே அன்றிருந்தது.

- சங்க காலம் சமண- புத்தக் காலம் எனும் கால கட்டங்களில் உள்ள சமூக வாழ்க்கை பற்றிய உங்கள் கண்ணோட்டங்கள் எவை?
- கேரளாவில் ஆரியர் வரவு நம் சமூக வாழ்க்கையை முன்னோக்கி நடத்த துணை புரிந்ததா? இது குறித்த உங்கள் கருத்து யாது?
- கிறித்தவ மிஷனரிமார்களின் கல்விச் செயல்பாடுகள் கேரளக் கல்வியை முன்னோக்கிச் செலுத்தியது. விளக்கவும்.
- சாதி- ஜன்மி, நாடு வாழி கட்டமைப்பு எவ்வகையில் கேரளாவின் சமூகக் கட்டமைப்பிற்குப் பயன்மிக்கதாக அமைந்தது?

உங்கள் கருத்தாடல்களை நாளேட்டில் குறிப்பிடவும்.

**பார்வை நூல்கள்**

- கேரளம் மலயாளிகளுடெ மாதுர் பூமி - இ எம் எஸ்
- கேரளத்தின்றெ இந்நலகள்- கெ என். கணேஷ்
- Educational development in India – A. Abdul Salim, P.R. Gopinathan Nair
- கேரளத்தின்றெ சாம்ஸ்காரிக சரித்ரம் - பி கே கோபாலாகிருஷ்ணன் ( பக்கம் 103- 219)
- கேரளத்திலெ வித்யாப்யாசம்- பச்சாத்தலவும் பரிவர்த்தனவும் — கேரள பாஷா இன்ஸ்டிட்யூட் 2012
- பரணகூடவும் வித்யாப்யாசவும்- கேரளத்தின்றெ அனுபவங்கள் - — கார்த்திகேயன் நாயர் கேரளா பாஷா இன்ஸ்டிடியூட் 2018
- இந்தியன் வித்யாப்யாசம் நூற்றாண்டுகளிலூடெ - தாயாட்டு சங்கரன்

எனும் புத்தகங்களை வாசித்துக் குறிப்பு எடுப்பீர்கள் அல்லவா.

## கற்றல் அடைவு (தொடர்ச்சி)

2 ஆம் அலகின் முக்கியக் கருத்துகள் தொடர்கின்றன.

- இராணி கௌரி பார்வதி பாயின் விளம்பரம்
- திருநாராயணகுரு, அய்யங்காளி எனும் சமூகச் சீர்திருத்த வாதிகளின் செயல்பாடுகள்.
- 1940 இல் திருவிதாங்கூரில் மதிய உணவுத்திட்டம்.
- 1957 இன் கல்வி மசோதா, 1959 இன் கெ இ ஆர்
- மாணவர்களுக்குச் சலுகைகள்
- பொதுக்கல்வி வலுவூட்டுச் செயல்பாடுகள்.

- திரு நாராயண குரு. அய்யங்காளி எனும் சமூகச் சீர்திருத்தவாதிகளின் கல்வித்துறை சார் செயல் பாடுகள் எவை?
- இராணி கௌளரி பார்வதி பாயின் 1817 இன் விளம்பரத்தின் முக்கியத்துவம் யாது?
- 1940 இன் திருவிதாங்கூரின் மதிய உணவுத்திட்டம் கேரளக் கல்வித்துறையில் எவ்வாறு தாக் கம் செலுத்தியது?
- 1957 இன் கேரளக் கல்வி மசோதாவைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதன் முக்கியத்துவம் என்னென்ன? இவற்றில் உங்களின் கருத்துக் கணிப்பு என்ன?

முன்னர் குறிப்பிட்டது போன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கியக் கருத்துகளுடன் தொடர்பு டைய சான்றாதாரங்களைப் பார்த்து உங்கள் நாளேட்டில் குறிக்கவும். வகுப்பறையில் பொதுக் கலந் துரையாடல் நடத்தி ஒருங்கிணைப்பு செய்வீர்கள் அல்லவா.

**பார்வை நூல்கள்**

- Educational development in India – A-Abdul Salim & P.R. Gopinathan Nair (Anmol Publications Pvt. Ltd. New Delhi) (பேஜ் 38-40, 71-73, 148-155)
- கேரள சம்ஸ்காரம்- பேராசிரியர் அச்சுதவாரியர் கேரள பாஷா இன்ஸ்டிட்யூட் (பக்கம் 181 முதல் 208 வரை)
- கேரளம் வித்யாப்யாசத்தின்றெ படவுகள் - கேரள சாஸ்த்ர சாகித்ய பரிஷத்
- பரணகூடவும் வித்யாப்யாசவும் - கேரளத்தின்றெ அனுபவங்கள்

இந்தப் பகுதியின் கருத்துகளை ஒருங்கிணைத்து பல்லூடக வெளியீட்டிற்கு அவசியமான கதைப் பலகையைத் தயார் செய்யலாம் அல்லவா.

மேலே குறிப்பிடப்பட்ட முக்கியக் கருத்துகளுடன் தொடர்புடைய குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## இராணி கௌளரிபார்வதிபாயின் விளம்பரம்

திருவிதாங்கூரில் உள்ள மக்களுக்குக் கல்வி அளிப்பதற்கு உரிய பொறுப்பை அரசு ஏற்றெடுப்பது டன் தொடர்புடைய 1817 இல் இராணி கௌளரி பார்வதிபாய் வெளியிட்ட விளம்பரம் கேரளக் கல்வி வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். இவ்விளம்பரத்தின் சிறு பகுதி இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

"The state should defray the whole cost of education of its people, in order that there might be no backwardness in the spread of enlightenment among them; that by diffusion of education they might become better subjects and public servants and that the reputation of the state might be advanced thereby." ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இரு ஆசிரியர்களை நிய மனம் செய்யவும் அன்றாடச் செயல்பாடுகளைச் சோதனையிடவும் இந்த விளம்பரத்தின் வழி அரசு அனுமதி அளித்தது. உரிய தகுதி உள்ளவர்களை ஆசிரியர்களாக நியமனம் செய்யவும் மாதச் சம் பளமாக 50 பணம் தரவும் இந்த விளம்பரத்தின் வழி அனுமதி கிடைத்தது. கல்விச் செலவினங் களை அரசு ஏற்றுக்கொள்கின்ற மிகப் புரட்சிசார் ஒரு விளம்பரமே இராணி கௌளரி பார்வதிபாயின் விளம்பரம்.

திருவிதாங்கூரில் கல்வியை அனைவருக்கும் கிடைக்கும் படிச் செய்த பல நடவடிக்கைகளை அரசு எடுத்தது. அதில் குறிப்பிடத்தக்கது மாணவர்களுக்கு அளித்த சலுகைகளும் உதவித்தொகையும். பள்ளிக்கூடத்தில் சேர்வதற்கு ஏராளமான தடைகள் இருந்த ஒரு காலகட்டம். இந்தத் தடைகளை

நீக்குவதற்காகப் பல நடவடிக்கைகளை அரசு ஏற்றெடுகிறது. தாழ்த்தப்பட்ட சாதியினைச் சார்ந்த மாணவர்களுக்கு மானியங்களும் பொருளுதவிகளும் அரசு அளித்தது. கட்டண சலுகை, உதவிப்பணம், மதிய உணவு, புத்தகங்கள், சீருடைகள் என்பன அவற்றுள் சில. தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்களில் உள்ள குழந்தைகளுக்கு 1904 ஆம் ஆண்டு முதல் இலவசமாகக் கல்வி அளிக் கப்பட்டிருந்தாலும் 4 ஆம் வகுப்பிலுள்ள குழந்தைகள் கல்விக் கட்டணம் கட்ட வேண்டிய நிலை இருந்தது. 1923 ஆம் ஆண்டு முதல் வட்டாரக் கல்வி நிலையங்களிலும் ஆங்கிலப் பள்ளிக்கூடங் களிலும் ஒடுக்கப்பட்ட பிரிவுகளிலுள்ள மாணவர்களுக்கு இலவசக் கல்வியும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்குப் பாதி கட்டணச் சலுகையும் அனுமதிக்கப்பட்டிருந்தன. பின்னர் இது தனியார் பள் ளிக்கூடங்களுக்குப் பரவியதுடன் கட்டணத்தின் முக்கால் பகுதியைத் தனியார் உடைமையாளர்க ளுக்கு அரசு கொடுக்கிற முறை நடைமுறைக்கு வந்தது.

1936 இல் திருவிதாங்கூரில் உள்ள அனைத்து வட்டாரப் பள்ளிக்கூடங்களிலும் ஒடுக்கப்பட்ட பிரி வில் உள்ள மூன்றாம் நான்காம் வகுப்புகளில் படிக்கிற குழந்தைகளுக்கு 14 சக்கரம் (Rs. 0.50) உத வித்தொகை அனுமதிக்கப்பட்டது. 1935 இல் 60 ஹரிஜன் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1938 இல் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு நிதி உதவி (கிரான்ட் இன் எய்ட்) இலவசப் பாடப்புத்தகங் கள் ஆகியன வழங்கப்பட்டன. 1943 முதல் இலவச சீருடையும் நடைமுறைக்கு வந்தது. தேர்வுக்கட் டணம் கட்டுவதிலிருந்து அவர்களைத் தவிர்த்தனர்.

## திருவிதாங்கூரின் மதிய உணவுத்திட்டம்

தன்னார்வத் தொண்டு முறையில் பல குழுக்களும் 1920 முதல் திருவிதாங்கூரில் இருந்த பல பள் ளிக்கூடங்களையும் மையப்படுத்தி மதிய உணவு வழங்கும் முறை நடைமுறையில் இருந்தது. அந் தக் காலத்தில் பெரும்பாலான குழந்தைகளுக்கும் உணவு கொண்டு வருவதற்கு உரிய வசதி இல்லா மல் இருந்தது. பொது மக்களிடம் நன்கொடைகள் வாங்கி மதிய உணவு அளிக்கும் முறை பல இடங்களிலும் சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கல்வி அனைவருக்கும் கிடைப் பதற்கு வேண்டி 1940 இல் மதிய உணவு முறை அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. ஒவ் வொரு பாட சாலைக்கும் மாதத்திற்கு 100 ரூபாய் இதற்காக அனுமதிக்கப்பட்டது. 1946 முதல் 100 பறை ( சுமார் 1300 கிகி) அரிசி ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்காக அனுமதிக்கப் பட்டது.

## கொச்சியின் கல்வி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பத்து வரை கல்விப்பரவலுக்கும் முன்னேற்றத்திற்கும் தேவையான நேரடி நடவடிக்கைகள் எதையும் கொச்சியிலிருந்த அரசு ஏற்றெடுக்கவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் நடுவிலும் இறுதியிலும் சில வட்டாரப் பள்ளிக்கூடங்கள் கொச்சியில் ஆரம்பிக்கப் பட்டன. 1837, 1845 ஆம் ஆண்டுகளில் இரு ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் கொச்சியில் ஆரம்பிக் கப்பட்டன. அரசக் குடும்பத்தினருக்கும் உயர் சாதிக் குழந்தைகளுக்கும் கல்வி கற்கவே அவை ஆரம்பிக்கப்பட்டன. 1875 இல் இந்தப் பள்ளிக்கூடம் மகாராஜாஸ் கல்லூரியாக உயர்த்தப்பட்டது. 1873 இல் மாவட்டப் பள்ளிக்கூடங்களும், தாலுக்குப் பள்ளிக்கூடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. 1840 இன் பின்னரே மக்களின் கல்விக்காகச் சில நடவடிக்கைகள் கொச்சியில் ஆரம்பமாயின. ஆண் குழந்தைகளுக்குப் பத்தும் பெண் குழந்தைகளுக்கு இரண்டும் என வட்டாரப் பள்ளிக்கூடங்கள் அந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கல்வி விரிவாக் கத்திற்கு உரிய அடித்தளத்தை உருவாக்க கொச்சி அரசால் இயன்றது.

இருபதாம் நூற்றாண்டில் தான் கொச்சியில் கல்வி சார்ந்து பெரிய மாற்றங்கள் உண்டாயின. 1919 இன்

கல்வி விதிமுறை, 1921 இன் கல்வி விதிமுறை, 1944 இன் கல்வி விதிமுறை என்பன மிகக் குறிப்பி டத்தக்கன.

## பெண் குழந்தைகளின் கல்வி

பெண் குழந்தைகளின் கல்விக்குக் கொச்சி அரசு மிக முக்கியத்துவம் அளித்தது. கட்டண நிரக்கைக் குறைக்கவும் அதிகப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1921 இன் கல்வி விதிமுறை பெண்குழந்தைகளுக்குத் தனி உதவித்தொகைகளை ஏற்படுத்தியது.

## பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் உள்ள கல்வி

பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் உள்ள கல்விக்குத் தாராளமய அணுகுமு றையையே கொச்சி அரசு கடைபிடித்தது. 1914 முதல் கட்டணச் சலுகையைக் குறைப்பதற்காக அரசு நடவடிக்கைகள் எடுத்தது. பகல்நேரங்களில் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல இயலாதவர்களுக்காக 19 இரவுப் பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டன. தனி உதவித்தொகைகள், இலவச உணவு, ஆடை கள், புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டன. 1943 இல் கொச்சி நாட்டின் அனைத்து ஆரம்பப் பள் ளிக்கூடங்களிலும் மதிய உணவுத் திட்டம் வழங்கப்பட்டது.

## மலபாரின் கல்வி

19 ஆம் நூற்றாண்டின் முதல் பத்திலேயே உயர் தரம் மிக்க ஏராளமான பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக் கப்பட்டன. ஆங்கிலேயர்களின் நேரடி ஆட்சியின் கீழ் மலபார் இருந்தது. பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையில் மலபார் மிக முன்னணியில் இருந்தது. திருவிதாங்கூரில் 264, கொச்சியில் 70, மல பாரில் 759 எனும் எண்ணிக்கையில் இருந்தன.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே மிக மேம்பட்ட கல்விச்சூழல் மலபாரில் இருந்தது. 75 மாணவர்கள் கற்றிருந்த ஒரு மருத்துவக் கல்லூரி கோழிக்கோட்டில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று தாலுக்குப் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. வட்டார மொழியே கற்பித்தல் மொழியாக இருந்தது. பாசல் மிஷன் 1848 இல் வடமலபாரில் முதல் ஆங்கிலப் பள்ளிக் கூடத்தை மாவட்டத்தில் ஆரம்பித்தது. இதுவே பிற்காலத்தில் மலபார் கிறித்தவக் கல்லூரியாக மாறி யது. 1858 இல் வட மலபாரில் முதல் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தை டாக்டர். குண்டர்ட் நிறுவினார். பிரண்ணன், தலச்சேரியில் நிறுவிய பள்ளிக்கூடமே பிரண்ணன் கல்லூரியாக வளர்ந்தது. 1886 இல் பாலக்காட்டில் நிறுவப்பட்ட பள்ளிக்கூடம் விக்டோரியா கல்லூரியாகவும், சாமூதிரி ராஜா 1877 இல் நிறுவிய பள்ளிக்கூடம் குருவாயூரப்பன் கல்லூரியாகவும் மாறின.

மலபாரின் முதல் வட்டாரப் பள்ளிக்கூடம் மலப்புரத்தில் 1856 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1857 இல் மேலும் ஐந்து தாலுக்குகளில் வட்டாரப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1864 இல் றேட் பள் ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கிரான்ட்சிஸ்டம் 1867 இல் மலபாரில் ஆரம்பமானது. குழந்தை களின் வருகைப் பதிவு (குறைந்தது மாதத்திற்கு 15 நாட்கள்) அடிப்படையில் நிதி உதவி அனுமதிக் கக் கூடிய முறையே இது. கல்வி மேற்பார்வைக்கு மாவட்ட வாரியங்களும் வட்டார வாரியங்களும் நடைமுறையில் வந்த காலகட்டமே இது.

## மகளிர் கல்லூரி

இக்காலத்தில் மலபாரில் பெண்கல்வி கிறித்தவ மிஷனரிகள், பிற சமயம் சார் முகமைகள் என்பன வற்றின் தலைமையில் இயங்கியது. பெண்களில் குறிப்பாக இந்து இசுலாம் பெண்களின் இடைநிறுத்தம் மிக அதிகமாகக் காணப்பட்டது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக 1880 இல் பெண்கல்வி அலுவலர் களை நியமனம் செய்து அவர்களின் தலைமையில் வீட்டிற்குச் சென்று கல்வி அளிக்கக் கூடிய நட

வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க நிதி உதவி அனுமதிக்கப்பட்டது. திருவிதாங்கூர், கொச்சி ஆகிய இடங்களில் உள்ளதைப் போன்று பெண் குழந்தைகளுக்குக் கல்வி உதவிக்தொகையோ அல்லது பிற சலுகைகளோ மலபாரில் இருக்கவில்லை. 4.1% பெண் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் பயின்றனர். 1895- 96 காலகட்டத்தில் பொது எழுத்தறிவு 3.9% சதவிகிதத்திலிருந்து 3% ஆகக் குறைந்தது.

பின்தங்கிய வகுப்பினர், ஒடுக்கப்பட்ட பிரிவினர் என்போரின் கல்வி முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் 1885 காலகட்டம் வரை அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. இந்தப் பிரிவில் உள்ள குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் ஈர்க்க ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நடைமுறைகள் பின்னர் ஆரம்பிக்கப்பட்டன. இரவுநேர வகுப்புகளும், மாலைநேர வகுப்புகளும் இதற்காகத் தொடங்கப்பட்டன. "On this situation the inspector of schools in Malabar made the following observation. "The boys will not attend unless a peon is sent round every morning to fetch them. The masters have to pay frequent visits to the parents of the pupil and to beg as a personal favour to themselves that children may be sent to school."

1905-06 இல் நிதி உதவியின் விதிமுறை புதுப்பிக்கப்பட்டது. ஆசிரியர்கள், குழந்தைகள் என இவர்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவு என்பனவற்றின் அடிப்படையில் நிதி உதவி வழங்குதல் ஆரம்பமானது. 1912- 13 இல் ஆசிரியர்களின் ஊதியம் உயர்ந்தது. அரசு உதவிபெறும் பள்ளிக்கூடங்களின் கிராண்ட் 50% ஆக உயர்ந்தது. 1921 இல் ஏற்பட்ட மாப்பிள கலகத்தின் பின்னர் அரசு வட்டாரப் பள்ளிக்கூடங்களுக்கு வலுவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1923 இல் மாவட்ட உயர்நிலைக் கல்வி வாரியங்கள் நிறுவப்பட்டன. 1934 இல் இடைநிறுத்தம் தடுப்பதற்காகச் சில கட்டாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிக்கூடப் பருவத்தினரான குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாத பெற்றோர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அந்த ஆண்டு தாலுக்கு வாரியங்களுக்குப் பதிலாக மாவட்ட வாரியங்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு மாவட்ட வாரியத்திற்கும் ஒரு கல்வி அலுவலரை நியமித்தனர்.

## திருநாராயண குரு, அய்யங்காளி சமூகச் சீர்திருத்தவாதிகளின் செயல்பாடுகள்.

திருநாராயண குரு சமூக மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கிய யுகச் சிற்பியும் ஆன்மீகக் குருவும் ஆவார். (1856- 1928) உயர்சாதி, கீழ்ச்சாதி எனும் பாகுபாடு கொடிகட்டி வாழ்ந்த காலமே அது. கீழ்ச்சாதியினர் தாழ்த்தப்பட்டவர்களாகப் பார்க்கப்பட்டனர். அவர்களுக்குக் கோயிலில் செல்வதற்கு உரிய அனுமதி வழங்கப்படவில்லை. தீண்டாமை போன்ற மூடப் பழக்கவழக்கங்களுக்கு எதிராகக் குரு போராடினார். இதன் விளைவாகவே 1884 இல் அருவிப்புரத்தில் சிவப்பிரதிட்டை செய்தார் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் முதல் நிகழ்வான வைக்கம் சத்யாகிரகத்திற்குத் தன் வருகையின் மூலம் ஆதரவு அளித்தார்.

1903 இல் டாக்டர் பல்பு, குமாரனாசான் ஆகியோரின் முழுப் பங்களிப்புடன் SNDP ( திரு நாராயண தர்ம பரிபாலன யோகம்) என்ற அமைப்பு பதிவு செய்யப்பட்டது. சமயம், நன்னடத்தை, கல்வி, தொழில் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்தே யோகம் செயல்பட்டது.

இனி கோயில் கட்டுதல் அல்ல பள்ளிக்கூடங்கள் கட்டுதலே பொது மக்களுக்குத் தேவை. பள்ளிக்கூடமே முக்கியத் தேவாலயம் எனக் குரு ஒரு முறை குறிப்பிட்டார். இதற்கு ஏற்ப SN டிரஸ்டை உருவாக்கி அதன் கீழ் கேரளாவின் பல இடங்களில் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி அளிக்கும் சூழல் இதனால் உருவானது. கேரளாவின் கல்வி மேம்பாட்டிற்கு அன்னாரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

அருவிப்புரத்தில் நடந்த SNDP யோகத்தின் முதலாண்டு பொதுக்கூட்டத்தில் குரு முன் மொழிந்த முத்திரை வாக்கியங்கள்.

- கூடிவாழ்வீர்; வலுப்பெறுவீர்.
- கல்வியால் சுதந்திரம் பெறுவீர்.
- மதம் எதுவாயினும் மனிதன் நல்லவன் இருந்தால் போதும்.
- ஒரு சாதி ஒரு மதம் ஒரு தெய்வம் மனிதனுக்கு

கேரளாவில் இருந்த ஹரிஜனங்களும், பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களும் நூற்றாண்டுகளாய் அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங்களையும், துயரங்களையும் கண்டும் கேட்டும் வளர்ந்த அய்யங்காளி (1863 –1941) அந்த நிலைமையை மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டார். 1950 இல் சாது ஜன பரிபாலன சங்கத்திற்கு வடிவம் கொடுத்தார். ஹரிஜனங்களுக்குப் பள்ளிக்கூடங்களில் சேர அனுமதி இல்லை. கோயில் வழிபாடுகளோ பொதுப் பாதைகளில் பயணம் செய்யவோ சுதந்திரம் இல்லை.

ஹரிஜனங்களை ஒன்றுதிரட்டி பொதுவழியில் நடந்து சென்று இந்த அநீதிக்கு எதிராகப் போராடினார். அந்தக் காலத்தில் இது ஒரு புரட்சிகரமான நிகழ்வாக இருந்தது. 1910 இல் ஸ்ரீமூலம் பிரஜா சபையில் உறுப்பினர் ஆனார். ஹரிஜன் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் அனுமதிப்பதற்காகப் பல போராட்டங்களை அவர் தலைமை தாங்கி நடத்தினார். கல்வியின் மூலம் சமூகச் சுதந்திரம் பெற வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள் ஆகும்.

நிலப்பிரபுக்களின் நெல் அறைகளை நிறைக்க இரவு- பகலாக உழைப்பது என்பதே பிற்படுத்தப்பட்டோரின் வேலை. வருத்தப்பட்டு வேலை செய்து வருகின்ற வேளையில் மண்ணில் சிறு குழி எடுத்து அதில் இலையை வைத்து உணவை அளிப்பதே வழக்கமாக இருந்தது. நோய்வாய்ப்பட்டால் மருத்துவர்கள் உடலில் கைவைத்துப் பரிசோதிப்பதில்லை. மாத்திரைகளை எறிந்து கொடுப்பர். சாதியின் அடையாளமான கல் மாலை அணிந்து நடப்பதற்குக் கட்டாயப்படுத்தினர். இடுப்புக்கு மேலும் கால் முட்டுக்குக் கீழும் ஆடை அணிவதற்கு உரிமை இல்லை.

திருவிதாங்கூர் வேளாண்மைத் தொழிலாளர்களின் முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் அய்யங்காளி ஆவார். நிலப் பிரபுக்களின் வயல்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் வேலைக்குச் செல்லவில்லை. இறுதியில் நிலப்பிரப்புக்கள் தோல்வியை ஒத்துக் கொண்டனர்.

போக்குவரத்துச் சுதந்திரத்திற்காக 1893 இல் நடத்தின வில் வண்டிப் போராட்டம் கேரள வரலாற்றின் இன்னொரு மைல்கல். அதைப் போன்றே சாதி அடையாளமான கல்மாலையைத் தவிர்க்கவும், மார்புத்துணி அணியவும், செவியில் அணியும் இரும்பு வளையங்களை நீக்கவும் அவர் அறைகூவல் விடுத்தார். அதற்காக நடத்திய போராட்டமே கல் மாலைப் போராட்டம்.

சமூகத்தில் காணப்பட்ட மூடப் பழக்க வழக்களுக்கும் சாதி சார்ந்த காரியங்களுக்கும் எதிராகப் போராட மிக அவசியமானது அறிவுபெறுதலே என்பதை அய்யங்காளி புரிந்திருந்தார். தீண்டத்தகாதவர்களுக்காக 1904 இல் வெங்ஙானூரில் ஒரு குடிப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார். ஆனால் ஆசிரியர்கள் கிடைக்காததன் காரணமாக அந்தப் பள்ளிக்கூடத்தை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. 1907 இல் ஸ்ரீமூலம் திருநாள் முதன்முறையாக தீண்டத்தகாதவர்கள் பள்ளிக்கூடங்களில் சேர்வதற்கு உரிய ஆணையைப் பிறப்பித்தார். ஆனால் மேல் சாதியினரின் எதிர்ப்பின் காரணமாகப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கை நடைபெறவில்லை. 1910 இல் மீண்டும் ஆணை பிறப்பித்தார். அதன் விளைவாக பஞ்சமி என்கிற ஒடுக்கப்பட்ட குழந்தையுடன் ஊருட்டம்பலம் பள்ளிக் கூட்திற்கு அய்

யங்காளி சென்றார். நிலப்பிரபக்கள் அவரையும் அவரோடு சென்றவர்களையும் தாக்கினர். பள்ளிக் கூடத்திற்கும் தீயிட்டனர். அதன் பின்னர் அய்யங்காளி வெங்ஙானூர் சாவடி நடையில் குழந்தை யைச் சேர்ப்பதற்காகச் சென்றார். அங்கும் தாக்குதல் நடந்தது. அதற்கெதிராக அய்யங்காளி விவசா யிகளை ஒன்றிணைத்து போராட்டம் நடத்தினார். நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் 1914 இல் மீண்டும் பள்ளிக்கூடச் சேர்க்கை அனுமதி ஆணை பிறப்பிக்கப்பட்டது. அய்யங்காளி முன் னின்று நடத்திய இப்போராட்டம் கண்டல கலகம் என வரலாற்றில் அறியப்படுகிறது.

## 1957 இன் கல்வி மசோதா

கேரளக் கல்வி வரலாற்றில் மிக முக்கியமான மைல்கல் 1957 இன் கேரளக் கல்வி மசோதா வெளியீடு. ஆசிரியர்களின் சேவை ஊதிய நடவடிக்கைகளைச் சரிப்படுத்தவும் அவர்களிடம் பாதுகாப்புணர்வு ஏற்படுத்த இந்தச் சட்டத்தின் மூலம் இயன்றது. ஆசிரியர் நியமனத்தில் இருந்த ஊழல்களை ஒழிக் கவும் இதனால் இயன்றது.

அரசுப் பள்ளிக்கூடங்களிலும், தனியார் பள்ளிக்கூடங்களிலும் கல்வியின் எல்லா நிலைகளையும் வரிசைப்படுத்தினர்.

- அனைத்து அரசுஉதவிபெறும் பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களின், பிற ஊழியர்களின் ஊதியத்தை அரசு நேரடியாக அளித்தது.
- வசூலிக்கப்படும் அனைத்துக் கட்டணங்களையும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும்.
- தனியார் பள்ளிக்கூடங்களின் பராமரிப்பு, நிலம், கட்டிடம், கற்றல் கருவிகள் என்பன வாங்குவ தற்கு அரசு உதவி அளித்தது.
- தனியார் பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களின் சேவை முறைகள், அரசு பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு இணையாக மாற்றப்பட்டன.
- சட்ட விரோதமாகச் செயல்பட்ட உரிமையாளர்களின் பள்ளிக்கூடங்களுக்கு நஷ்டஈடு கொடுத்து அரசு ஏற்றுக்கொள்ளவோ அல்லது அவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்யவோ அரசுக்கு உரிமை உண்டு.
- வட்டார நிலையில் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மாநில அளவில் ஓர் ஆலோச னைக் குழு ஏற்படுத்தப்பட்டது.

இந்த மசோதாவைக் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பினார். 1959 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து சட்டம் ஆக்கினார்.

## 1959 இன் கேரளக் கல்விச் சட்டம் (KER)

- சட்டம் நடைமுறைக்கு வந்த 10 ஆண்டுகளுக்குள் மாநிலத்தில் உள்ள அனைத்துக் குழந்தை களுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க அரசு வாய்ப்பு அளிக்கும்.
- குழந்தைகளின் வருகையை உறுதிப்படுத்தவும் இந்தச் சட்டத்தின்படி உள்ள பிற செயல்பாடுக ளைச் செயல்படுத்தவும் ஒரு வட்டாரக் கல்விக் குழுவை அரசு உருவாக்க வேண்டும்.
- அனைத்துப் பெற்றோர்களும் தங்களின் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவும் சீருடையும், புத்தகங்களும், கற்றல் கருவிகளும் அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உரியதாகும்.

கேரளாவில் கல்வி அனைவருக்கும் கிடைக்க இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த தன் மூலம் இயன்றது.

## மேல்நிலைக் கல்வி

தேசியக் கல்விக் கொள்கைக்கு ஏற்ப பகுமுக வகுப்பைக் (pre-degree) படிப்பு கல்லூரிகளிலிருந்து மாற்றி அதற்குப் பதில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி முறை நடைமுறைக்கு வந்தது.

1990 – 91 கால அளவில் இதற்கான ஆரம்ப முயற்சிகள் நடந்தன. அறிவியல், மானிடவியல், வணி கவியல் ஆகிய மூன்று பிரிவுகளில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி அமைக்கப்பட்டது. ஆங்கில மொழி எல்லாப் பிரிவுகளுக்கும் கட்டாயமாக்கப்பட்டது. மேல்நிலைக் கல்வி அனைவருக்கும் என மாறி யது கேரளக் கல்வியின் மேன்மையை உயர்த்துவதற்கு மிக உதவியது. 2016 இல் 7248 குழு என மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் கேரளாவில் இருந்தனர். மாணவர்களின் எண்ணிக்கை 383582 ஆகும். 1999– 2000 ஆண்டுடன் மேல்நிலைப் பள்ளிக் கல்வி அனைவருக்கும் கிடைத்தது.

## பொதுக் கல்வியை வலுவூட்டும் செயல்பாடுகள்

கேரளாவில் பொதுக்கல்வியை வலுவூட்டுவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள ன. DPEP, SSA ஆகிய திட்டங்களின் பகுதியாக பள்ளிக்கூடங்களில் பௌதீகம் மற்றும் கல்வி சார்ந்த முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு எடுத்த நடவடிக்கைகளினால் கல்வித் தரம் உயர்ந்த து. எனினும் அரசு உதவி பெறாத (unaided) பள்ளிக்கூடங்களில் படிப்பது என்பது தங்கள் மதிப் பின் கூறாகக் காணும் சிந்தனை சமூகத்தில் இருந்தது. பல பள்ளிக் கூடங்களிலும் குழந்தைகளின் எண்ணிக்கையின் குறைவினால் மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆசிரியர்களுக்குப் பணி இழப் புகள் ஏற்பட்டன. ஏழைகளின் கல்வியை இது மிகவும் பாதிக்கத் தொடங்கியது.

இந்தச் சூழலில் பொதுக் கல்வியைப் பாதுகாத்தல் அரசின் கடமையே என அரசு கண்டதுடன் நவ கேரள மிஷனுடன் இணைந்து பொதுக்கல்விப் பாதுகாப்பு வேள்வியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கி றது. இது கேரளக் கல்வி வரலாற்றில் மிகப் புரட்சிகரமான ஒரு நடவடிக்கையாகும்.

பொதுக் கல்வி நிறுவனங்களை வலுப்படுத்துதல், பள்ளிக்கூடங்களை உலகத் தரத்திற்கு உயர்த்துதல் எனும் இலக்குகளுடன் கேரள அரசு நடைமுறைப்படுத்துகின்ற திட்டமே பொதுக் கல்விப் பாதுகாப்பு வேள்வி. குழந்தைகளின் திறனை அடிப்படையாகக் கொண்டு கற்றல் முறையைச் சீர்படுத்துகின்ற முழுமைசார் கல்வி புனரமைப்புச் செயல்பாடே இது. 2017 ஜனவரி 27 இல் இந்தத் திட்டம் ஆரம்பமா னது. ஒன்று முதல் 12 வரை வகுப்புகளில் உள்ள எல்லாக் குழந்தைகளும் ஒவ்வொரு வகுப்பிலும் அடைய வேண்டிய திறன்களும், சிந்தனைகளும் பெற்று உலகளாவிய தரத்திற்குப் பள்ளிக்கூடக் கல் வியை நிறைவடையச் செய்யும் நிலையினை ஐந்து ஆண்டிற்குள்ளாகப் பொதுப் பள்ளிக்கூடங்க ளில் உறுதிப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முக்கிய இலக்கு. உள்ளாட்சி நிறுவனங்கள், முன்னாள் மாணவர் சங்கங்கள், பெற்றோர்– ஆசிரியக் குழுக்கள் வெளிநாடு வாழ் இந்தியர்கள், நிறுவனங்களின் சமூக சேவை நிதிகள் என்பனவற்றை ஒருங்கிணைத்து கல்வி புனரமைப்புச் செயல்பாடுகளுக்கு முத லீடு திரட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பொதுக் கல்விக்கூடங்களைத் தர மேன்மை மிக்க மையங்கள் ஆக்குதல் என்பதே மிஷனின் அறிக்கை ஆகும்.

பள்ளிக்கூடங்களை உலகளாவிய தரத்திற்கு உயர்த்துவதற்காக 8 முதல் 12 வரையிலான அரசு, அரசு உதவிபெறும் பள்ளிக்கூடங்களில் சுமார் 4500 வகுப்பறைகளை ஹைடெக் தரத்திற்கு உயர்த்துவ தன் திட்டமே ஹைடெக் ( உயர் தொழில் நுட்ப) பள்ளிக் கூடங்கள் ஆகும். இந்தத் திட்டத்தின் முதல்படியாக பைலட் திட்டமாக 2016 செப்டம்பர் முதல் ஆலப்புழை, புதுக்காடு, கோழிக்கோடு ( வடக்கு) தளிப்பறம்பு ஆகிய சட்டசபை மண்டலங்களில் ஆரம்பிக்கப்பட்டன. ஐ.டி@ பள்ளிக்கூடமே

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. டிஜிட்டல் இன்ட்ராக்டிவ் பாடப்புத்தகம், எல்லாப் பாடங் களையும் படிப்பதற்கு உதவுகிற டிஜிட்டல் உள்ளடக்கத்தொகுப்பு, அனைவருக்கும் முழுநேரக் கற் றல் சூழலை உறுதிப்படுத்துகிற சமக்ரா போர்ட்டல் மின் கற்றல் எம்-லேனிங் மேலாண்மை அமைப் பு, மதிப்பீட்டு முறைகள் என்பன இத்திட்டத்தின் பகுதியாகச் செயல்படுத்தப்படுவன ஆகும்.

- இராணி கௌரி பாயின் விளம்பரம் கேரளக் கல்வி வரலாற்றின் மைக்கல். நீங்கள் இக் கூற்றை ஆதரிக்கிறீர்களா?
- திரு நாராயணகுரு, அய்யங்காளி எனும் சமூகச் சீர்திருத்தவாதிகளின் செயல்களை நீங் கள் எவ்வாறு காண்கிறீர்கள்?
- 1957 இன் கல்வி மசோதா கேரளக் கல்வியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல உதவியதா. அதன் பிரதிபலிப்பு எத்தகையன? மதிப்பீடு செய்யவும்.
- பொதுக் கல்விப் பாதுகாப்பு வேள்வியுடன் தொடர்புடைய கல்விச் செயல்பாடுகள் நம் கல்வித்துறையில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன?

**உங்கள் கருத்தாடல்களை நாளேட்டில் குறிக்கவும்.**

மேற்கோள் நூல்கள்

- இந்தியன் கல்வி நூற்றாண்டுகளிலூடெ - தயாட்டு சங்கரன்
- கேரளத்தின்றெ சாம்ஸ்காரிக சரித்ரம். பி. கெ. கோபாலகிருஷ்ணன் ( பக்கம் 504 -887 )
- வித்யாப்யாசம் பாரதத்தில் - டாக்டர் டி கெ. முகம்மது
- கேரளத்திலெ வித்யாப்யாசம் பச்சாதலவும் பரிவர்த்தனவும். டாக்டர் பி எஸ் ஸ்ரீ கலா ( கேரள பாஷா இன்ஸ்டிட்யூட் 2012)

எனும் புத்தகங்களையும் பார்வையிடுவீர்கள் அல்லவா?

## கற்றல் அடைவுகள் 2

கேரளக் கல்வியின் பிரச்சினைகளைப் பகுத்தறிந்து தீர்வுகள் கூறுதல்.

- கேரளக் கல்வித்துறையின் தரம்சார்ந்த பிரச்சினைகள் எவையெனச் சுட்டிக்காட்டவும்.
- ஒடுக்கப்பட்டவர்களின் கல்விப் பிரச்சினைகள் எவையென மதிப்பீடு செய்யவும்.

கேரளக் கல்வியின் பொது வரலாற்றை நாம் புரிந்துகொண்டோம். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆட் சியாளர்கள் சமூகம் செலுத்தும் தாக்கத்தின் அடிப்படையில் கல்வித்துறையில் மாற்றங்கள் கொண்டு வந்துள்ளனர் எனவும். அதற்கு ஏற்ப சட்டத்தை இயற்றியுள்ளனர் எனவும் புரிந்து கொண்டோம் அல்லவா.

இந்தியாவில் முற்போக்குச் சிந்தனையோடு கல்விச் செயல்பாடுகள் நடந்த, நடந்துகொண்டிருக்கும் மாநிலமே கேரளம். பல விஷயங்களிலும் நாம் வெகுதூரம் முன்னேறி உள்ளோம். முழு எழுத்த றிவு பெற்ற மாநிலம் கேரளம். கல்வித்துறையில் ஏராளமான சாதனைகளைச் செய்தாலும் இனியும் தீர்வு காண வேண்டிய பல பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கிறோம்.

கேரளம் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகள் எவை? நீங்கள் தனியாகவும் குழுவாகவும் இதைப் பற்றிச் சிந்திப்பதுடன் கருத்தைப் பங்கிடவும் செய்வீர்கள் அல்லவா? இதோடு தொடர்புடைய புத்த கங்களை வாசிப்பதுடன் தகவல்களைச் சேகரிக்கவும் வேண்டும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள முக்கியக் கருத்தோடு தொடர்புடைய கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்த கங்களை வாசிப்பீர்கள் அல்லவா?

- கேரளம் : வித்யாப்யாசத்தின்றெ படவுகள்- கேரள சாஸ்த்ர சாகித்ய பரிஷத் 2009
- கேரளப் பாட்யபத்ததி 2007

சமகால கேரளம் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகளைப் பற்றி வகுப்பில் விவாதம்.

நடத்துவதுடன் அதன் மூலம் கூடுதல் கருத்துகளை உட்கொள்ளவும் நீங்கள் முயற்சிப்பீர்கள் அல் லவா? விவாதக் கருத்துக்களும் அவற்றோடு தொடர்புடைய குறிப்புகளும் கீழே கொடுக்கப்பட் டுள்ளன. அதிக விவாதக் கருத்துகளை நீங்கள் கண்டடைவீர்கள் அல்லவா? கிடைக்கின்ற கருத்து களை உங்கள் குறிப்பேட்டில் குறித்துக் கொள்ளுங்கள்.

- உலகமயமாக்கலின் தாக்கம் கேரளக் கல்வியை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு சென் றதா?
- DPEP, SSA எனும் கல்விச் செயல்திட்டங்கள் கேரளத்திற்கு இனி தேவைதானா?
- பொதுக் கல்வியின் கற்பித்தல் ஊடகம் (மலையாளம், ஆங்கிலம்) குழந்தையின் உள- சமூக வளர்ச்சியில் தாக்கம் செலுத்துகிறதா?
-

நாட்டில் மிகச் சிறந்த முறையில் பொதுக் கல்வியைக் காண்பது கேரளாவின் பொதுக்கல்வித் துறை யாகும். முழுமையான சேர்க்கை (Universal enrolment) முழுமையாக இடைநிறுத்தம் தடை செய்தல் (Universal retention), முழுமையான சாதனை (Universal achievment) என்பவற்றில் கேரளம் வெகு தூரம் முன்னால் நிற்கிறது. இத்தகைய பெருமைமிக்க ஏராளமான பயன்களை அடைந்தாலும் இனி யும் தீர்வுகாண வேண்டிய பிரச்சினைகளும் உள்ளன.

- தரமேன்மை சார் பிரச்சினைகள்
- கல்வி வாணிபமயமாதல்
- பௌதீக வசதிகளின் குறைபாடு
- அமைப்பு சார் பிரச்சினைகள்
- ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள்
-
-

**தரமேன்மை சார் பிரச்சினைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

- ஆங்கில மொழி கற்றல் பிரச்சினைகள்
- விழுமியங்கள் தொடர்புடைய பிரச்சினைகள்
- குழந்தைகளின் பன்முக வளர்ச்சியோடு தொடர்புடைய பிரச்சினைகள்
- தொழில் கற்றலோடு தொடர்புடையன.
- கலை, விளையாட்டு, செயல்வழிக் கல்விக்கு முக்கியத்துவமின்மை.
- தர மேன்மையுள்ள ஆசிரியர்களின் குறைவு

- சமூக ஈடுபாடின்மை
- ஐ டி யோடு தொடர்புடைய பிரச்சினைகள்
- சுற்றுச்சூழல் பற்றிய போதிய அறிவின்மை
- அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமின்மை.
- மழலையர் கல்விக்கு வலுவூட்டாத நிலை.
- பாடத்திட்டத்திற்கு ஏற்ப பௌதீக வசதிகளின் குறைபாடு
-

எனும் துறைகளில் இனியும் முன்னேற வேண்டியுள்ளது. மேலும் பல காரியங்களை விவாதித்து கண்டுபிடிப்பீர்கள் அல்லவா?

### கல்வி வாணிபமயமாதல்

- கல்வியை இலாபம் ஈட்டும் ஒரு கடைச் சரக்காக்கும் பிரச்சினை.
- கல்வித்துறையை தனியார் மயமாக்குதல்
- ஏழைக் குழந்தைகளுக்குத் தாங்கள் விரும்பியதைக் கற்க இயலவில்லை.
-
-

கேரளக் கல்வியின் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டியுள்ளது. அதற்கேற்ப சட்ட உருவாக்கமும் அதை நடைமுறைப்படுத்துவதும் தேவையாகும்.

## பௌதீக வசதிகளின் குறைபாடு

கல்வித்துறையின் தரமேன்மையைப் பாதிக்கும் முக்கியக் காரணி பௌதீக வசதிகளின் குறைவே. DPEP, SSA, RMSA எனும் செயல்திட்டங்கள் மூலம் நம் மாநிலப் பள்ளிக்கூடங்களில் பௌதீக வசதிகளை உருவாக்குவதற்கான முயற்சி நடைபெற்றுள்ளது. எனினும் இதில் தேவையான முன்னேற்றம் அடைய இயலவில்லை. பொதுக்கல்விப் பாதுகாப்பு வேள்வி மூலம் இதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அரசுப் பள்ளிகளை விட அரசு உதவிபெறும் பள்ளிகளில் பௌதீக வசதிகள் மிகக் குறைவு. பள்ளிக் கட்டிடங்கள், வகுப்பறைகள் பல்வேறு ஆய்வுக்கூடங்கள், ஹைடெக் வகுப்பறைகள், கூட்டம் கூடும் அறை (conference hall) கலை, விளையாட்டு, செயல்வழிக் கல்விக்குத் தேவையான கருவிகள், நூலகம், உணவு உண்ணும் அறை, சமையலறை என அனேக வசதிகள் இனியும் நம் பள்ளிக்கூடங்களில் கிடைக்க வேண்டியுள்ளன.

## அமைப்புசார் பிரச்சினைகள்

- தேசியக் கல்விக் கொள்கையோடு தொடர்புப்படுத்தி பல அமைப்புசார் மாற்றங்கள் கேரளக் கல்வியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தோடு தொடர்புடைய சில பிரச்சினைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
- 1 முதல் 5 வரை வகுப்புகள் எல்.பி 6 முதல் 8 வரை யூபி, 9, 10 வகுப்புகள் உயர்நிலை, 11, 12 வகுப்புகள் மேல்நிலை என்ற முறையில் மாற வேண்டும்.
- உயர்நிலை, மேல்நிலையில் நிர்வாக முறையிலும், கல்வித்தரத்திலும் மாற்றம் உண்டாக வேண்டும்.

- அதிகக் குழந்தைகள் உள்ள பள்ளிக்கூடத்தின் பிரச்சினைகள்.
- 1 முதல் 12 வரையுள்ள வகுப்புகள் ஒரே பள்ளிக்கூடத்தில் அமையும் நிலை.
- 
- 

**ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள்**

- ஆதிவாசிகள், கடலோர மக்கள் வாழும் பகுதிகளில் அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்கூடங்களில் சேர்வதில்லை. சேர்வதற்கு உரிய வாய்ப்பு இல்லை.
- மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் பிரச்சினைகள்
- பெண்கள், ஒடுக்கப்பட்டோர் மொழிச் சிறுபான்மையோரின் பிரச்சினைகள்
- குழந்தைத் தொழிலாளர்கள் போன்ற பிரச்சினைகள்.
- 
- 

**பிரச்சினைத் தீர்வு வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. வேறு பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்கவும்.**

- தரமேன்மை அடைய தடையாக இருக்கும் பிரச்சினைகளையும் அவற்றின் காரணங்களையும் கண்டறிந்து தீர்வு காணவும்.
- ஆசிரியக் கல்வியைச் சிறப்பாக்குதல்.
- பொதுக்கல்வியை வலுப்படுத்துதல்.
- பெற்றோர்களுக்கு அளிக்கும் கல்வியை முழுமையாக்குதல்.
- தொலைதூரக் கல்வியைப் பொருளார்ந்ததாக ஆக்குதல்.
- ஆங்கிலத்தில் பேசுவதற்கான அச்சத்தைப் போக்க திட்டங்கள் தீட்டவும்.
- ஆங்கிலம் பேசும் திறன் ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் உண்டாக வேண்டும்.
- கல்வியின் அனைத்து இலக்குகளுக்கும் முக்கியத்துவம் அளித்தல்.
- எல்லாப் பாடங்களுக்கும் தகுதிபெற்ற ஆசிரியர்களை நியமித்தல்.
- பல்வேறு சவால்களை அனுபவிக்கும் குழந்தைகளின் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
- MGLCs (Multi Grade Learning Centres), ஆசிரமப் பள்ளிகள் போன்ற பள்ளிக்கூடங்களை உருவாக்குதல்.

உங்கள் கருத்தாடல்களை குறிப்பேட்டில் குறிக்கவும்.

- உலகமயமாக்கல் கேரளக் கல்வியில் எத்தகைய தாக்கம் செலுத்துகிறது?
- கேரளாவின் கல்வித்துறை குற்றம் அற்றது. இக்கூற்றினோடு கருத்தாடல்கள் எத்தகையன?

## தொடர் செயல்பாடுகள்

1. கேரளக் கல்வி வரலாற்றோடு தொடர்புடைய பள்ளிநுழைவு, மகளிர் கல்வி, கல்வி ஊக்க நிகழ்ச்சிகள் என்பனவற்றை கூகிளிலும், புத்தக வாசிப்பின் மூலமும் சேகரிக்கவும். அவற்றைத் தொகுத்து வகுப்பில் வெளியிடவும்.

2. கேரளத்தில் காணப்பட்ட களரிகள், எழுத்துப் பள்ளிக்கூடங்கள், ஓத்துப் பள்ளிகள், ஓதும் மடங்கள் எனும் கல்வி அமைப்புகளைப் பற்றிய பார்வை நூல்கள், நாட்டறிவு சேகரித்து வகுப்பில் வெளியிட்டு விவாதிக்கவும். இது போன்ற கல்வி அமைப்புகளோடு தொடர்புடைய புகைப்பட ஆல்பம் தயாராக்கவும்.

3. என் எஸ். எஸ், எஸ் என் டி பி, எம் இ எஸ், கிறித்தவ மிஷனரிகள் என்பனவற்றின் செயல்கள் கேரளக் கல்விக்குச் சிறந்த நன்கொடைகள் அளித்துள்ளன. அவை சமூக - பண்பாட்டுக் கல்வித்துறையில் அளிக்கும் நன்கொடைகளைப் பற்றித் தகவல்களைச் சேகரித்ததன் பின்னர் வகுப்பில் விவாதம். கருத்தரங்கம் நடத்தவும்.

## பார்வை நூல்கள்


| | | | |
|---|---|---|---|
| 1 | கேரள சம்ஸ்காரம் | - | ஸ்ரீதர மேனோன், டி சி புக்ஸ் |
| 2. | கேரள சம்ஸ்காரம் | - | பேரா. எஸ். அச்சுதவார்யார் கேரள பாஷா இன்ஸ்டிடியூட் |
| 3. | Educational development in India | - | A. Abdul Salim, P.R. Gopinathan Nair Anmol publishers pvt. Ltd. (New Delhi) |
| 4. | கேரளம் மலையாளிகளுடெ மாதுர்பூமி | - | இ எம் எஸ், சிந்தா பப்ளிகேஷன்ஸ் |
| 5 | கேரளத்தின்றெ சம்ஸ்காரிக சரித்ரம் | - | பி. கே கோபாலகிருஷ்ணன் கேரளா பாஷா இன்ஸ்டிடியூட் |
| 6 | வித்யாப்யாசம் பாரதத்தில் | - | டாக் டி கெ முகமது கேரளா பாஷா இன்ஸ்டிட்யூட் |
| 7 | கேரளத்தின் இன்னலேகள் | - | கெ என் கணேஷ், சம்ஸ்காரிக ப்ரஸ்தீகரணம் வகுப்பு 199 |
| 8 | குடிப்பள்ளிக்கூடம் அட்சர வித்யயுடெ ஆத்யாங்கணம் | - | கங்காதரன் செங்கல்லூர், கேரள சாகித்ய அகாடமி 2017 |
| 9 | கேரளம் வித்யாப்யாசத்தின்றெ படவுகள் | - | கேரள சாஸ்த்ர சாகித்ய பரிஷத் 2009 |
| 10 | இந்த்யன் வித்யாப்யாசம் நூற்றாண்டிலூடெ | - | தாயாட்டு சங்கரன் கெ எஸ் டி ஏ |
| 11 | கேரளத்திலெ வித்யாப்யாசம் பச்சாத்தலவும் பரிவர்த்தனமும் | - | டாக் பி எஸ். ஸ்ரீ கலா |
| 12 | பரண கூடமும் வித்யாப்யாசவும் கேரளத்தின்றெ அனுபவங்கள் | - | பேரா. வி. கார்த்திகேயன் நாயர் கேரளா பாஷா இன்ஸ்டிடியூட் 2018 |
| 13. | புரோகமன வித்யாப்யாச சிந்தகர் | - | டாக் பி வி புருஷோத்தமன் கேரள சாஸ்த்ர சாகித்ய பரிஷத் |

## அலகு 3

# கல்வித் தத்துவங்கள்

எந்த ஒரு நாட்டினுடையவும் வட்டாரத்தினுடையவும் கல்வியின் உள்ளடக்கம். கற்றல் கற்பித்தல் முறை என்பனவற்றில் தாக்கம் செலுத்தும் முக்கியக் காரணிகளில் ஒன்று அந்த நாட்டின் வட்டாரத் தின் சமூகம் பொதுவாக ஏற்றுக்கொண்ட தத்துவங்கள் ஆகும். உதாரணமாக நம் நாட்டில் ஜனநா யாகச் சமூகம் அல்லவா. ஜனநாயகச் சமூகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஏற்ற தத்துவங் களை அல்லவா நாம் கல்வியிலும், வாழ்க்கையிலும் கடைபிடிக்க வேண்டும். இதற்காக நாம் பல் வேறு ( வெளிநாட்டு, உள்நாட்டு) தத்துவங்களை அறிந்து கொள்வதுடன் பகுப்பாய்வு செய்து பொருத் தமானவற்றை ஏற்றுக்கொண்டு தன்வயப்படுத்தியும் கல்விச் செயல்பாடுகளில் பொருளார்ந்த முறை யில் பயன்படுத்தவும் வேண்டும். இதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதே இந்த அலகின் முக்கிய நோக்கமாகும்.

## அலகின் கற்றல் அடைவுகள்- விளக்கங்கள்

- கல்வியின் இலக்கு, வரையறை பற்றித் தத்துவஞானிகளும் தத்துவங்களும் முன்னிலைப்ப டுத்தும் கண்ணோட்டங்கள், பொதுச்சமூகம், பெற்றோர், மாணவர்கள் என இவர்களின் பொதுக் கண்ணோட்டங்கள், போன்றவற்றை ஒப்பீடு செய்து நம் ஜனநாயகச் சமூகத்திற்கு ஏற்ற கருத் தாக்க முடிவுகளை மேம்படுத்துவதே இந்த அலகின் ஒரு முக்கிய நோக்கமாகும்.
- கல்வியின் உள்ளடக்கம், கற்பித்தல் முறை, சுதந்திரம் என்பனவற்றின் பல்வேறு (கருத்துவா தம், இயற்கைவாதம், பயன்பாட்டுவாதம், மானுடவாதம்) நிலைப்பாடு வாதங்களைச் சோதித் துப் பார்த்து சமூகக் கட்டமைப்பிற்குப் பொருத்தமான கருத்துப் போக்குகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். அவற்றைப் பள்ளிக்கூடம் வகுப்பறைச் செயல்பாடுகளில் நடைமுறையில் பிரதிபலிக்க செய்வதே மற்றொரு நோக்கம்.
- ரூசோ, ப்ரோபல், ஜோண்டுயி, கொமீனியிஸ், பௌலோ பிரயர் எனும் மேற்கத்திய தத்துவமே தைகளினுடையவும், காந்திஜி, விவேகானந்தர் ,தாகூர், அரவிந்தோ போன்ற நம்நாட்டு தத்துவ மேதைகளினுடையவும் கண்ணோட்டங்களை ஒப்பீடு செய்து ஜனநாயகக் கல்விக்குப் பொருத் தமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- நம் பாடஏற்பாடில் பல்வேறு கோட்பாடுகள் எவ்வாறெல்லாம் பிரதிபலிக்கின்றன எனச் சோதித் துப் பார்க்கவும்.

## தத்துவம் என்றால் என்ன?

கீழே தரப்பட்டுள்ள காரியங்களில் உங்கள் கருத்துகள் யாவை?

- பெண்களுக்கு அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போன்றே வாய்ப்பு அளிக்க வேண் டும் என நீங்கள் கருதுகிறீர்களா?
- சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பது பற்றிய உங்கள் கருத்து என்ன?
- தூக்குத் தண்டனையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?
- கொடிய நோய் பாதித்து துயரப்பட்டு மரணப் படுக்கையில் இருக்கும் ஒருவரைக் கருணைக் கொலை செய்ய அனுமதிக்கலாமா?

ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட கருத்துகள் உள்ளன அல்லவா? எளிமையாகக் கூறினால் இவை யாவும் உங்கள் பார்வையின் கூறுகளாகும். இவ்வாறு பொது அறிவின் அடிப்படையில் நாம் ஏற்றுக் கொள்ளும் கண்ணோட்டங்களைத் தத்துவம் எனக்கூறலாம். நம் சமூக அனுபவங்களின் வாழ்க்கை நோக்குகளின் அடிப்படையிலும் அல்லவா நாம் இந்தக் கருத்துகளை ஏற்றுக்கொள்கிறோம்.

அதே வேளையில் தத்துவம் ஓர் அறிவியல் துறை என எடுத்துக்கொண்டால் மேலும் விரிவான ஆழமான பொருளில் அணுக வேண்டும்.

தத்துவம் (Philosophy-) என்ற சொல் இரு கிரேக்கச் சொற்கள் இணைந்ததாகும். “Philos-Sophia. Philos என்றால் Love என்றும் -Sophia என்றால் Wisdom/Knowledge என்று பொருள்படும். அதாவது Philosophy என்ற சொல்லின் சொல்லுக்கு சொல் மொழிபெயர்ப்பு Love of Wisdom/Knoledge.. அறிவுக்கான அன்பு என்பதாகும். பல்வேறு அறிவுத்துறைகளில் மேலும் பல அறிவுகள் பெறுவதற்கான அறிவியல் சார் தேடலே தத்துவம். வேறொரு விதத்தில் கூறினால் பகுத்தறிவு ஆய்வு. சிந்தனை எனும் இவற்றின் பலனாக உருவாகும் ஆழமான கருத்து முடிவுகளும் உற்றுநோக்கல்களுமே தத்துவங்கள்.

பல்வேறு பாடங்களின் உயர் ஆய்வு பட்டம் அல்லவா பி.எச்.டி. எந்த அறிவுசார் துறையிலும் அறிவியல் ரீதியாகவும் ஆழமாகவும் செய்யப்படும் ஆய்வே தத்துவம் எனக் கூறுவர்.

## கல்வியும் தத்துவமும்

சமூகத்தின் போக்குகளைத் தீர்மானிக்கும் தாக்கம் செலுத்தும் முக்கிய மனித மேம்பாட்டுச் செயலே கல்வியாகும். எனவே கல்வியைக் குறித்து பல்வேறு தத்துவமேதைகளும் தத்துவச் சிந்தனையாளர்களும் அவர்கள் வாழ்கின்ற சமூகச் சூழல்களுக்கும் வாழ்க்கைப் பார்வைகளுக்கும் ஏற்ப பல்வேறு கண்ணோட்டங்களை எடுத்துக் கூறியுள்ளனர். இவை கல்வியின் உள்ளடக்கம், கற்பித்தல் முறை என்பனவற்றில் தாக்கம் செலுத்தியுள்ளன. அதைப் பற்றிய சிந்தனை நம் கல்வி ஈடுபாடுகளை மேம்படுத்துவதற்கும் முறைப்படுத்துவதற்கும் துணைபுரியும்.

### நினைவில் கொள்க

நம் நாடு ஒரு ஜனநாயகச் சமூகமாகும். மனித நேயமும், சமநீதியும் பல காரணங்களால் பின்தங்கியவர்களுக்கும் துன்பங்கள் அனுபவிப்பவர்களுக்கும் கிடைப்பதற்கு உரிய முன்னுரிமை வேண்டும். எல்லோருக்கும் அவர்களின் திறமைக்கும் நிலைமைக்கும் ஏற்ற முறையில் வளரவும் மேம்பாட்டை பெறுகின்ற வாய்ப்புகளும் உள்ள ஒரு சமூகக் கட்டமைப்பினை நாம் எதிர்பார்க்கிறோம். இதற்குப் பொருத்தமான தத்துவங்களையே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## எதற்குப் படிக்கிறோம் ( கல்வி இலக்கும் தத்துவங்களும்)

எதற்காகக் கல்வி? பலருக்கும் பல விடைகள் கிடைக்கும் அல்லவா? நாம் ஓர் ஆய்வு செய்வோமா?

கல்வியின் இலக்கு என்ன என்ற வினாவிற்கு ஒன்று அல்லது இரு வாக்கியங்களில் அமைந்த பதில்களை பல்வேறு வகுப்பில் படிக்கின்ற மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர், மாணவர் சமூகத்தின் பல்வேறு துறைகளில் செயல்படுவோரிடம் இருந்து சேகரிக்கலாம். நம் வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களின் பதில்களையும் இணைத்து அட்டவணைப்படுத்திப் பாருங்கள் பெரிய வேறுபாட்டைக் காண்கிறோம் அல்லவா?

- அறிவைப் பெற
- சமூக உணர்வுமிக்க மனிதனாக மாற
- சிறந்த தொழில் கிடைக்க
- எல்லாத் திறன்களின் வளர்ச்சியைப் பெற
- பண்பாடு மிக்கவனாக மாற
- அநீதிகளுக்கு எதிராக எதிர்வினையாட
- 

இவ்வாறு பல்வேறு பதில்கள் கிடைக்கலாம். இவை யாவும் சமூக அனுபவங்கள், வாழ்க்கை இலக்குகள் எனும் இவற்றின் அடிப்படையில் அமைந்தவையாகும். ஒரு நோக்கில் பார்த்தால் நம் அடிப்படைத் தத்துவங்களின் அடிப்படையில் உள்ளவை. இனி நாம் முக்கியமான தத்துவ மேதைகளின் தத்துவங்கள் என்ன கூறுகின்றன எனப் பார்ப்போம்.

## கருத்துவாதமும் கல்வியின் இலக்கும்

பிளேட்டோ, அரிஸ்டாட்டில், ப்ரோபல், தாகூர், அரவிந்தோ போன்றோரின் கல்விக் கோட்பாடுகளைச் சோதித்துப் பார்க்கவும். ஏதாவது பொதுத்தன்மை காண்கிறீர்களா?

மாறா நிலைவாதம் (Metaphysics) என்ற சொல்லே கருத்துக் கோட்பாட்டாளர்களுக்கு மிக முக்கியம். நாம் காணவும் அனுபவிக்கவும் செய்கின்ற இந்த உலகம் முக்கியம் அல்ல. அதற்கும் அப்பால் கருத்துகள், சிந்தனைகள் என்பனவே முக்கியம் என அவர்கள் நம்புகின்றனர். உண்மை, அழகு என்பன உட்படும் கருத்துலகம் மட்டுமே நிலையானது. இந்த அடிப்படை உலகமே சிறந்தது எனக் கருத்துக் கோட்பாட்டாளர்கள் பொதுவாகச் சிந்திக்கின்றனர். கண்டும், கேட்டும், தொட்டும், சுவைத்தும், முகர்ந்தும் நாம் அனுபவிக்கும் இந்த அடிப்படை உலகம் நிரந்தரமானது அல்ல.

இருண்ட குகை போன்றது உலகம். சிந்தனையாலும் உண்மையைத் தேடியும் இந்த இருட்டைத் தாண்டிச் சென்று உண்மையைக் கண்டடையவும் வேண்டும். எனப் பிளேட்டோ கூறுகிறார். ஒவ்வொருவரிலும் அடங்கி இருக்கும் நன்மைகளையும் திறன்களையும் பதங்கப்படுத்தி சுய இயல்பாக்கத்தை உருவாக்குவதே கல்வியின் நோக்கம் எனப் பிளேட்டோ உட்பட்ட தத்துவமேதைகள் எடுத்துரைக்கின்றனர். ஜெர்மன் கல்விச் சிந்தனையாளரான பிடரிக் அகஸ்ட் ப்ரோபல் கூறுவதைக் கீழே காண்போம்.

தன் உள்ளொளியின் பிரதிபலிப்பாகச் சிந்தனைத் திறனும் மனநிறைவும் உடைய ஒரு நபரை உருவாக்குவதே கல்வியின் இலக்கு. கல்வியின் இலக்குடன் தொடர்புற்று பிளேட்டோ, ப்ரோபல் ஆகியோரின் உற்றுநோக்கல்களுக்கு இடையே உள்ள பொதுவான ஒற்றுமைகள் எவை?

மனிதன் இரு உலகங்களில் உட்பட்டவன். ஒன்று வெளிப்படையானது. மற்றொன்று உளத்தொடர்புடையதும். உள்ளார்ந்த மனிதத் திறன்களைப் பதங்கப்படுத்துவதே கல்வியின் இலக்கு என இரவீந்திரநாத் தாகூர் கூறுகிறார். தாகூரைத் தத்துவமேதையாகக் கருதலாமா?

பார்வை நூல்கள் வழியாகக் கண்டடைந்த பிற தத்துவக் கருத்துகள் எவை? கல்வின் இலக்கு பற்றிக் காந்தியடிகள். கொமினியஸ் அரவிந்தோ ஆகியோரின் கருத்துகளைச் சோதித்துப் பார்த்தீர்களா?

கல்வியின் இறுதி இலக்கு என்பது சுயஇயல்பாக்கம் எனக் காந்தியடிகள் கூறுகிறார். பௌதீக நன்மைகள் அல்ல; உளப்பதங்கப்படுத்துதலே கல்வியின் இலக்காக இருக்க வேண்டும் என்பதே

காந்தியடிகளின் கருத்தாகும். ஆனால் கல்வியின் அடிப்படை நோக்கங்களாகக் காந்தியடிகள் வேறு சிலவற்றைக் கூறுகிறார்.

1. பள்ளிக்கூடக் கல்வியில் ஒரு தொழில் செய்து சுயச்சார்பு பெற வேண்டுமெனக் கூறிய காந்திஜி, வாழ்க்கை நடத்துவதற்காக ஒரு தொழில் பயிற்சிக்குக் கல்வி முக்கியத்துவம் அளிக்க வேண்டும் அறிவுறுத்துகிறார்.

2 சுய பதங்கப்படுதலைக் கல்வியின் பண்பாட்டு நோக்கமாகக் காந்திஜி கருதினார்.

3 மனிதனின் எல்லாத் திறன்களையும் சமச்சீர்மையுடன் மேம்படுத்துவதையே கல்வி இலக்காகக் காந்திஜி சுட்டிக்காட்டுகிறார். தலை, இதயம், கை என்பனவற்றின் பன்முக வளர்ச்சியுமே பொதுவான எழுத்தும், வாசிப்பும், கணக்கும் படிப்பதை விட முக்கியம் எனக் காந்திஜி கூறுகிறார்.

4. மாணவர்களிடம் சன்மார்க்கச் சிந்தனையையும் நற்குணங்களையும் வளரச் செய்வதும் கல்வி இலக்காகக் காந்திஜி கூறுகிறார்.

5. கல்வியின் சமூக இலக்கு பற்றிக் காந்திஜி அடிக்கோடிட்டு காட்டுகிறார். ஆத்ம பதங்கப்படலோடு சமூக உணர்வுமிக்கச் சிறந்த குடிமகனாக வளரவும் கல்வி உதவவேண்டும் என்பதே காந்திஜியின் முன் மொழிதல்.

மேலே குறிப்பிட்ட கல்வியின் இலக்குகள் முழுமையாகவும் கருத்துவாதத்துடனும் பொருத்தப்படுபவையா? பிற கல்வி சிந்தனைகளின் தாக்கம் அதில் உண்டல்லவா? அவை எவையெல்லாம்?

## ரூசோவும் இயற்கைவாதமும்

இயற்கை என்னை மகிழ்ச்சி உடையவனாகவும் நல்லவனாகவுமே படைத்தது. நான் அவ்வாறு இல்லையெனில் அதற்குக் காரணம் இச் சமூகம் ஆகும்.

ஆபத்தான சுதந்திரத்தையே நான் சாந்தமான அடிமைத்தனத்தை விட விலைமதிக்கிறேன்.

பிறக்கும் போதே எல்லாக் குழந்தைளும் நன்மைகளோடு பிறக்கின்றனர். சமூக ஈடுபாடே அவர்களைத் தீயவர்கள் ஆக்குகின்றது.

மேலே குறிப்பிட்டவை எல்லாம் தீவிர இயற்கைவாதியான ஜீன்ஜாக்விஸ் ரூசோவின் உற்றுநோக்கல்கள் ஆகும். ரூசோவின் இயற்கைவாதத்திற்குப் புவி இயற்கை என்ற கட்டமைப்புடன் அல்ல தோடர்பு, ஒவ்வொரு உயிரினத்தினுடையவும் இயல்பான இயற்கையுடன்தான் தொடர்பு உள்ளது. அதாவது ஒரு மனிதனுக்கும் விலங்கிற்கும் அவரவர்க்கே உரிய இயல்பான தனித்தன்மைகள் உள்ளன. இயல்பாகவே இயற்கையுடன் ஒன்றி வாழ்கிறார்கள் என்பதே பொருள். இயல்பான இயற்கையுடன் இணைந்த வளர்ச்சியே கல்வி என ரூசோ உட்பட்ட இயற்கைவாதிகள் நம்புகின்றனர். சுய ஒளியே கல்வியின் இலக்காக ரூசோவும் இயற்கைவாதிகளும் காண்கின்றனர். பிறவியிலேயே குழந்தைகள் நன்மை நிறைந்தவர்களும் திறனும் மேதைமையும் உடையவர்கள் எனக் கூறிய இயற்கைவாதிகள் இயல்பாகவும் சுயமாகவும் பெற்ற நன்மைகளின் வெளிப்பாடே கல்வியின் முக்கிய இலக்காகக் காண்கின்றனர்.

நாம் பலவீனமாகப் பிறக்கிறோம். அதனால் வளர்வதற்குத் தேவையான திறன் வேண்டும். ஆதரவற்றவர்கள் ஆனதால் உதவிவேண்டும். அவ்வாறு பிறந்த நேரத்தில் என்னென்ன இயலாமைகள் உண்டோ அவற்றிற்குத் தீர்வுகாண்பதே கல்வியின் இலக்கு

இயல்பான வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்குவதே கல்வி என்பதே இயற்கைவாதிகளின் கோட்பாடு. இயற்கையோடு இணைந்து ஆரோக்கியமாக வளரவேண்டும். சுயமேம்பாட்டிற்கு உள்ள வளர்ச்சிக்கா ன திறன்களை அளிப்பதே கல்வி என ரூசோவும் இயற்கைவாதிகளும் கூறுகின்றனர்.

| |
|---|
| இயற்கைவாதத்தைக் காந்திஜியும் கடைபிடித்தாரா? காந்திஜியின் கண்ணோட்டங்களில் இயற்கைவாதத்தின் பிரதிபலிப்பு எந்த அளவு உள்ளது? |

நடைமுறை வாழ்க்கையில் சிறந்தமுறையில் வாழ்வதற்குத் தேவையான திறன்கள் பெறுவதே கல்வி என ஜோண்டுயி உட்பட்ட பயன்பாட்டுவாதிகள் வாதிக்கின்றனர். குழந்தைகளின் தற்போதைய திறன்களும் நற்பண்புகளும் வேறுபட்டுக் காணப்படுவதால் பொதுவாகவே கற்றல் இலக்குகளைத் தீர்மானிப்பது சரிஅல்ல என்று ஜாண்டுயி கூறுகிறார். ஜனநாயகக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்த மேதையே ஜாண்டுயி. நீதி நிறைந்த ஒரு சமூகக் கட்டமைப்பினை உருவாக்குவதே கல்வி என ஜனநாயகவாதியான டுயி அறிவுறுத்துகிறார்.

| |
|---|
| வகுப்பறை ஒரு ஜனநாயகப் பயிற்சி அரங்கமாக வேண்டும் என்பதே டுயி கூறும் அறிவுரை. இது நம் பள்ளிக்கூடப் பார்லிமெண்ட் முறையில் பிரதிபலிக்கிறதா? |

## மானுடவாதம்

மனிதனின் எண்ணற்ற திறன்களில் நம்பிக்கை கொண்டு ஒவ்வொருவரின் திறன்களையும் நாட்டங்களையும் இயன்ற அளவில் மேம்படுத்துவதையும் அவ்வாறு சுயநிறைவு அனுபவிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ள செயல்பாடுகளையே மானுடவாதம் கல்விக்கு அளிக்கின்றது.

விமரிசன உணர்வை உருவாக்கவும் அதன்மூலம் விடுதலை அடைவதே கல்வி இலக்கு எனக்கூறிய பௌலோ பிரையர் நவீன வாழ்க்கைச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு உரிய திறன் பெறுவதே கல்வின் இலக்கு என்று கூறிய அரவிந்தோ போன்ற ஏராளமான தத்துவஞானிகள் கல்வி இலக்கு குறித்து உற்றுநோக்கல்களையும் கருத்து முடிவுகளையும் பதிவுசெய்துள்ளனர்.

## எதைக் கற்கவேண்டும்? (கல்வியின் உள்ளடக்கமும் பல்வேறு தத்துவங்களும்)

எதைக் கற்கவேண்டும்? அல்லது எந்தெந்த கற்றல் விஷயங்களைப் பாட ஏற்பாடில் உட்படுத்த வேண்டும் என்பது குறித்துள்ள பல்வேறு தத்துவங்களை, முன்மொழிந்த தத்துவஞானிகள் எடுத்துரைத்த கல்வி இலக்குகள் குறித்துள்ள உற்றுநோக்கல்கள் உள்ளன.

சுய இயல்பாக்கமும் ஆளுமைச் செயலாக்கமும் கல்வியின் இலக்குகளாகக் கண்ட கருத்தியலாளர்கள் மொழி, தத்துவஇயல், சமூக அறிவியல், கணிதம் ஆகியவற்றுடன் கலைகள், இசை, உடற்பயிற்சி, தடகளப் போட்டிகள் எனும் விளையாட்டு இனங்களையும் பாட ஏற்பாடில் உட்படுத்த வேண்டும் எனவும் வாதாடினர்.

இயற்கையை அறிந்துகொள்வதும் அதோடு ஒத்துப்போவதுமே கல்வியின் முக்கியமான இலக்கு என வரையறுத்த இயற்கைவாதிகள் அதற்கு உதவுகின்ற அறிவியல் பாடங்களுக்குப் பாட ஏற்பாடில் வேண்டிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டனர். மொழியிலும், கணிதத்திலும் மேற்படிப்பிற்கு உதவுகின்ற விஷயங்கள் மட்டும் உட்படுத்தினால் போதும் என்பதே அவர்கள் கருத்து. சிக்கலான கவிதைகளோ, இலக்கியமோ கற்பிக்க வேண்டாம் என்பது அவர்களின் கருத்து. ஆன்மீகக் காரியங்கள், இசை, ஓவியக்கலை ஆகியவை இயற்கைவாதிகளுக்கு முக்கியமானவை அல்ல. வயதிற்கு ஏற்ப பாட ஏற்பாடு தரும் பாடப்பொருளின் முக்கியத்துவத்திற்கு மாற்றம் வேண்டும் எனக் குழந்தையின் இயற்கையான இயல்பை மதிக்கின்ற கல்வி முறைக்காக நிலை கொண்ட ரூசோ உட்பட்ட இயற்கைவாதிகள் வாதாடினர். ஆனால் பயன்பாட்டு வாதிகள் பெயரில் குறிப்பிடுவதைப் போன்று பயன்படக்கூடிய விஷயங்களைப் பாட ஏற்பாட்டில் உட்படுத்தவேண்டும்

என்ற கருத்தை உடையவர்களாக இருந்தனர். தனிநபர் வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் சிறந்த முறையில் நடத்திச் செல்வதற்கு உதவுகின்ற அறிவுகளும், திறன்களும் திறமைகளுமே குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டியன. சுய இயல்பாக்கத்திற்கும் ஆளுமைச் செயலாக்கத்திற்கும் தேவையான விஷயங்கள் பாட ஏற்பாடில் அமைந்திருக்க வேண்டும் என்ற கருத்துவாதிகள் பயன்பாட்டுவாதிகளை எதிர்த்தனர். ஒரு குறிப்பிட்ட பாடஏற்பாடு எல்லாக் குழந்தைகளுக்கும் அறிவுறுத்துகின்ற முறையுடன் பயன்பாட்டு வாதிகளுக்குக் கருத்து வேறுபாடுகள் இருந்தன. குழந்தையின் திறன்கள், ஆர்வங்கள் எல்லாவற்றிற்கும் அப்பால் எதிர்கால வாழ்க்கையில் பயன்பாடு என்பன கருத்தில் கொண்டுள்ள பல்வேறுமயமாதலே பயன்பாட்டுவாதிகளின் பாட ஏற்பாடு குறித்துள்ள அடிப்படைக் கருத்து. மனிதனின் திறன்கள், நாட்டங்கள், விருப்பங்கள் என்பனவற்றைக் கருத்தில் கொள்வதுடன் மனிதனின் திறன்களின் முழு வளர்ச்சிக்கு உதவுகின்ற விஷயங்களைப் பாட ஏற்பாட்டில் உட்படுத்த வேண்டும் என மனிதநேயவாதிகள் அறிவுறுத்தினர். சமூக வளர்ச்சியைவிடவும் தனிநபர் வளர்ச்சிக்கே மனிதநேயவாதிகள் முக்கியத்துவம் அளித்தனர். சுயம் அறிந்துகொள்வதற்கும் சுயமாக வளர்வதற்கும் உரிய அனுபவங்களே ஒவ்வொரு மாணவனுக்கும் கிடைக்கவேண்டியன என அவர்கள் நம்பினர்.

### எவ்வாறு கற்க வேண்டும்? (கற்பித்தல் முறையும் தத்துவங்களும்)

கருத்துவாதம் நுட்பமான ஒரு கற்பித்தல் முறையைக் குறிப்பிடவில்லை. குழுவிடமிருந்து பயிற்சி பெறுதல் என்ற பொதுக் கொள்கையையே பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோர் பின்பற்றினர். வினாக்கள் எழுப்புதல், விவாதத்தில் ஈடுபடுதல், மனப்பாடம் செய்தல், போலச் செய்து கற்றல் எனப் பல்வேறு கற்பித்தல் உத்திகளை அவர்கள் குறிப்பிட்டனர். கருத்துவாதியான ஹெகல் அறிவு பூர்வமான சிந்தனையைத் தூண்டுகின்ற கற்பித்தல் முறைகள் வேண்டும் எனக் கூறியபோது விளையாட்டுகளே கற்பித்தல் ஊடகமாக வேண்டும் என வேறொரு கருத்துவாதியான ப்ரோபல் குறிப்பிட்டார். கற்பித்தல் முறைகள் குறித்து கருத்துவாதிகளின் இடையே இருந்த கருத்து வேறுபாட்டை இங்கே காண முடிந்தது.

கற்பித்தல் முறையில் புரட்சிகரமான அறிவுரைகளை இயற்கைவாதம் எடுத்துரைத்தது. வாய்மொழி வாயிலாகக் கற்பித்தலை முற்றிலும் எதிர்த்த ரூசோ உற்றுநோக்கல், அனுபவங்கள் ஆகியன வாயிலான சுயக் கற்றலை மட்டுமே அங்கீகரித்தார். முறைசார் பள்ளிக்கூடக் கல்வியைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக இயற்கையைப் பாடப்புத்தகம் ஆக்குவதற்கு ரூசோ அறிவுறுத்தினார். குழந்தையைக் கல்விச் செயல்பாடுகளின் மையப்புள்ளிகள் ஆக்குவதற்கு அறிவுறுத்துவதே ரூசோவின் முக்கியமான இன்னொரு அறிவுரை.

இயற்கைவாதிகளைப் போன்று குழந்தை மையக் கற்றல் முறைக்கே பயன்பாட்டுவாதிகளும் முக்கியத்துவம் அளித்தனர். நடைமுறைச் செயல்பாடுகளுக்கே பயன்பாட்டுவாதிகளின் கற்றல் அணுகுமுறையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. மெய்மையான அனுபவங்களிலிருந்து கற்றல் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அறிவுரை கூறிய பயன்பாட்டுவாதிகளே கற்றலுக்காகச் செயல் திட்ட முறையையும் அறிவுறுத்தினர். செயல்வழிக் கற்றல் என்பதே பயன்பாட்டுவாதக் கல்விக் கருத்துகளின் முக்கிய வழிகாட்டி.

The school is to be a reflection of the larger society outside its walls, in which life can be learnt by living. But it should be a purified well balance society' John Dewi

குழந்தை மையக் கற்றல் முறைகளையே மனிதநேயவாதிகளும் குறிப்பிட்டுள்ளனர். குழந்தையின் இயல்பு, தேவைகள், நாட்டங்கள், விருப்பங்கள் ஆகியன பிரதிபலிக்கின்ற விதத்தில் கற்றல் முறை

அமைய வேண்டும் என்பதையே மனிதநேயவாதிகளும் அறிவுறுத்தினர். கடுமைகூடிய தேர்வுக ளையும் மனத்துயர் அளிக்கின்ற ஒப்புமைப்படுத்துதல்களையும் மனிதநேயவாதிகள் எதிர்த்தனர்.

## சுதந்திரம்; ஒழுக்கம்

சுய இயல்பாக்கம் நடைபெறவேண்டுமெனில் கண்டிப்பான ஒழுக்கம் தேவை என்பதே கருத்துவா திகளின் கொள்கை. உள்ளார்ந்த ஒழுக்கத்துடன் வெளிப்படையான ஒழுக்க விதிமுறைகளிலும் அவர்கள் கண்டிப்பைக் காட்டினர்.

குழந்தைக்குத் தனிநபர் என்ற நிலையில் முழுச் சுதந்திரம் அளித்தால் மட்டுமே அவள்/ அவனு டைய இயல்பான திறன்களின் சரியான வளர்ச்சி நடைபெறும் என ரூசோவும் பிற இயற்கைவாதிக ளும் கருத்து தெரிவித்தனர். வெளிப்படையான அனைத்து ஒழுக்க விதிமுறைகளையும் எதிர்த்த இயற்கைவாதிகள் ஒழுக்கம் என்பது குழந்தையின் செயல்பாடுகளின் பின் விளைவுகளிலிருந்து சுயமாகப் பயிற்சி செய்து கைகொள்ள வேண்டியது எனக் கூறினார்.

ஜனநாயகக் கல்வியைக் குறித்துள்ள கருத்துகளை முன்மொழிந்தவர்களே பயன்பாட்டுவாதிகள். கல்வி ஒரு கூட்டணியாகும். குழந்தைகளின் இடையே உள்ள கூட்டுறவு வழியாகவும் கருத்துப் பரி மாற்றம் வழியாகவும் கற்றல் முன்னேற வேண்டும் எனப் பயன்பாட்டுவாதம் அறிவுறுத்தியது. ஆனால் சுயமாகக் கட்டுப்பாட்டுடன் கூடிய ஒழுக்கத்தின் பக்கமே பயன்பாட்டுவாதிகள் நின்றனர்.

குழந்தைகளிடம் சரியான உள்ளுணர்வையும் தன்னம்பிக்கையையும் உயர்த்துவதே கல்வியின் இலக்கு என்று வாதாடிய மனிதநேயவாதிகள் தனிநபர் சுதந்திரத்தின் பக்கத்தில் வேரூன்றி நிற்பவர் கள் ஆவர். கடுமைமிக்க ஒழுக்க விதிமுறைகள் குழந்தைகளின் தன்னம்பிக்கையைச் சிதைக்கும் என்பதே மனிதநேயவாதிகளின் கருத்து.

கல்வியின் இலக்குகள், உள்ளடக்கம், கற்பித்தல் முறை, சுதந்திரமும் ஒழுக்கமும் எனும் துறைகளில் பல்வேறு தத்துவங்களின் கண்ணோட்டங்கள் மிகச்சுருக்கமாக மேலே கொடுக்கப்பட்டுள்ளன. விரி வான வாசித்தல் வழியாகக் கூடுதல் தகவல்களைக் கண்டறியுங்கள். இந்தத் தத்துவங்கள் எந்தெந்த வகையில் நம் பாடஏற்பாடிலும் பிற்சேர்க்கை துணைக் கருவிகளிலும் பிரதிபலிக்கின்றன. ஒரு தேடலை நடத்திப் பாருங்கள்.

- பல்வேறு பாடங்களின் கற்றல் அடைவுகளைச் சோதித்துப் பாருங்கள். மேலே குறிப்பிட்ட எந் தெந்த தத்துவங்களில் உள்ள கல்வி இலக்குகளுடன் இதற்குப் பொருத்தம் உள்ளது?
- பாடப்புத்தகத்திலும் ஆசிரியர் கையேட்டிலும் குறிப்பிட்டுள்ள கற்றல் செயல்பாடுகளுக்கு எந் தெந்த தத்துவங்களில் உள்ள கற்பித்தல் முறைகளுடன் பொருத்தம் உள்ளது?
- நீங்கள் உற்றுநோக்கிய வகுப்பறை சார் ஆசிரிய மாணவர் உறவும் பல்வேறு தத்துவங்களின் சுதந்திர- ஒழுக்கம் சார் கருத்துகளும் எவ்வாறு பொருத்தப்படுகின்றன.
- நம்முடையது ஜனநாயக மனிதநேயச் சமூகம் அல்லவா? மேலே கொடுக்கப்பட்டுள்ள கல்வி அறிவுரைகளில் எவற்றை நம் கல்விச் செயல்பாடுகளில் உட்படுத்தலாம்?

எல்லா உற்றுநோக்கல்களையும் தொகுத்து ஒரு கருத்தரங்கு நடத்தலாம்.

## கல்வித் தத்துவங்கள் நம் கல்விச் செயல்பாடுகளில்

கல்வியின் பல்வேறு காரணிகளில் தாக்கம் செலுத்துகின்ற தத்துவங்களைக் குறித்து நாம் கலந்துரை யாடினோம் அல்லவா. கல்வியின் முக்கியத் துறைகளான பாடஏற்பாடின் உள்ளடக்கம், கற்பிக்கும் முறை, ஒழுக்கம், சுதந்திரம் என்பனவற்றில் உள்ள பல்வேறு தத்துவங்களின் கண்ணோட்டங்கள்-

எந்த முறையில் கல்விச் செயல்பாடுகளில் பிரதிபலிக்கின்றன எனக் கண்டுபிடிப்பதுடன் இணை கின்றனவற்றைத் தன்வயப்படுத்துதலுமே இந்தக் கற்றல் அடைவின் நோக்கம் ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள காரியங்களில் உங்கள் கருத்தாடல் என்ன?

- உடல்நல –கலை –விளையாட்டு– உருவாக்கச் செயல்பாடுகளைப் பள்ளிக்கூடக் கல்வியில் முக் கியத்துவத்துடன் உட்படுத்த வேண்டுமா? எதனால்?
- தோல்வி அடையச் செய்தல், ஒப்புமைப்படுத்துதல் என இயன்ற அளவில் ஊக்கமின்மையை அளிக்கும் ஜோண் டியூ கூறும் பயன்பாட்டு ஜனநாயகக் கல்விப் பார்வைகள் எந்த அளவில் பொருத்தம் உடையன?
- தண்டனை, கடிந்து கொள்ளுதல் என்பனவற்றைக் காந்தியடிகளின் தத்துவங்களுடன் தொடர் புப்படுத்தி விளக்கலாமா?
- குழந்தை வளர்ந்து வருதல் ஒரு தாவரம் வளர்ந்து வருதலைப் போன்றது. ஒரு தோட்டக்கார ரைப் போன்று அதனைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் செய்வதே ஆசிரியரின் பொறுப்பு என்ற கருத்தினைக் கூறிய சுவாமி விவேகானந்தர் கருத்துவாதியா? இயற்கைவாதியா? அல் லது பல்வேறு தத்துவங்களின் இணைப்பே விவேகானந்தரின் கல்விக் கண்ணோட்டங்களில் வெளிப்படுகின்றதா?
- ஒன்றிணைந்த கல்வியை எந்தெந்த கல்வித் தத்துவங்களின் அடிப்படையில் நாம் ஏற்றுக்கொண் டுள்ளோம்.
- மனித நேயவாதம், ஜனநாயகக் கல்வி எனும் கண்ணோட்டங்களின் அடிப்படையில் பாலினச் சமத்துவம் என்ற கருத்தை எவ்வாறு நாம் அணுகவேண்டும்?

- சுய வெளிப்பாடே (self expression) கல்வியின் இலக்கு. சுய அறிதலே கல்வியின் இலக்கு.
- மேற்குறிப்பிட்ட இரு கூற்றுகளும் ஒன்றுக்கொன்று எதிர்மறையானவையா? எந்தத் தத் துவங்கள் இந்த இலக்கை முன்மொழிந்திருக்கும்.

## பல்வேறு தத்துவங்களும் கல்விக் கண்ணோட்டங்களும்

கல்விச் செயல்பாடுகளின் பல்வேறு நிலைகளைக் குறித்துள்ள வேறுபட்ட கண்ணோட்டங்களே பல்வேறு தத்துவஞானிகளுக்கும் உள்ளன என நாம் பார்த்தோம். சில குறிப்புகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

➢ **கல்வி இலக்கு**

கருத்துவாதம் – சுய இயல்பாக்கமே கல்வியின் இலக்கு

இயற்கைவாதம்– குழந்தைகளின் இயல்பான திறன்களில் வளர்ச்சியே கல்வியின் இலக்கு.

பயன்பாட்டுவாதம் – நடைமுறை வாழ்க்கையைப் பயன்மிக்கதாகவும் பொருளார்ந்ததாக வும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தேவையான சிந்தனைகளையும் திறன்களை யும் பெற்றுக்கொள்ளுதல்.

மனிதநேயவாதம் – மனிதனின் பன்முக வளர்ச்சி

- **கற்பித்தல் முறை**

  கருத்துவாதம்

  பயன்பாட்டுவாதம் - மாணவன் மையப்புள்ளி- சமூகமையக் கல்வி- செயல்பாடு சார் கல்வி உரையாடல் முறையை அங்கீகரிப்பதில்லை

  இயற்கைவாதம் - பள்ளிக்கூடங்களும், பாடப்புத்தகங்களும் வளர்ச்சியை எதிராகத் தாக்கு கின்றன. இயற்கையே கற்றல் ஊடகமாக மாறவேண்டும்.

- **ஒழுக்கம், சுதந்திரம்**

  கருத்துவாதம் - சட்டங்களைப் பின்பற்றும் பழக்கம் வளரவேண்டும்.

  இயற்கைவாதம் - தனிநபர் சுதந்திரமே முக்கியம்

  பயன்பாட்டுவாதம்- ஒழுக்கம் சுயமாக வளரவேண்டும். சுதந்திரம் அளித்தால் மட்டுமே இதற்கு இயலும்.

இவற்றின் அடிப்படையில் மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய உங்கள் கருத்தாடல் களைப் பகுப்பாய்வு செய்து பாருங்கள். நம் கல்விச் செயல்பாடுகளில் எந்தெந்த தத்துவங்கள் எந் தெந்த முறைகளில் பிரதிபலிக்கின்றன?

வகுப்பறையிலும் பொதுக் கல்விச் செயல்பாடுகளிலும் தெரிந்தும் தெரியாமலும் பல தத்துவங்கள் இணைந்து பிரதிபலிக்கலாம். காலைக்கூட்டம், ஒழுக்க விதிமுறைகள், வகுப்பறைக் கற்றல் செயல் பாடுகள், பாடப்புத்தகங்கள், குழந்தைகள் செய்யும் தவறுகளோடுள்ள அணுகுமுறை, ஆசிரியர் ஈடு பாடு என்பனவற்றில் எத்தகைய தத்துவங்கள் பிரதிபலிக்கின்றன? பள்ளிக்கூடச் செயல்பாடுகள், கற்றல் கருவிகள் என்பனவற்றை உற்றுநோக்குவதே இதற்கான வழிமுறை. மேலே விவரித்தவற் றைப் பின்பற்றி ஒரு குறிப்புப் பத்திரிகை உருவாக்குவோம்.

குறிப்புகள் தயாராக்கும் போது அளிக்க வேண்டிய முக்கிய சில முன்னுரிமைகள்.

- குழந்தைகளின் வேறுபாடுகளை அங்கீகரிப்பதே இயற்கைவாதத்தின் பொருள். பள்ளிச்சீருடை இந்த இயல்புத்திறனை மறுக்கிறதா?
- முழுமையாக இயற்கைவாதத்தை அங்கீகரித்து கட்டமைக்கப்பட்ட கல்வியை நடைமுறைப்ப டுத்த இயலுமா? பள்ளிச்சீருடையைப் பயன்பாட்டுவாதத்தின் அடிப்படையில் நியாயப்படுத் தக் கூடாதா?
- சோதித்துப் பார்த்து பாடப்புத்தகங்கள், கற்றல் கருவிகள் என்பனவற்றில் மனிதநேயவாதம் எந்த அளவில் பிரதிபலிக்கிறது?
- வகுப்பறையில் நடைபெறும் செயல்பாடுகளில் மனிதநேய- ஜனநாயகத் தத்துவங்கள் பிரதிப லிக்கின்றனவா?
- ஒழுக்கம் பற்றிய ஆசிரியரின் கருத்தாடல்கள் எந்தத் தத்துவங்களுடன் பொருந்துகின்றன?

நம் நாடு ஜனநாயக முறையைப் பின்பற்றுகிறது. நீதியிலும், மனிதத்திலும், சுதந்திரத்திலும் ஊன்றிய ஒரு சமூகத்தையே நாம் வடிவமைக்கிறோம். நம் கல்விச் செயல்பாடுகளில் இக்க ருத்துகள் முழுமையாகப் பிரதிபலிக்கின்றனவா? உங்கள் சுயக் கருத்து என்ன? கல்வி ( காந் திஜி) கல்வியில் புரட்சி (ஓஷோ) சீர்திருத்தத்தில் ஊன்றிய கல்வி ( யதி) எனும் நூல்களைப் பரிசோதித்திருப்பீர்கள் அல்லவா?



## மேனாட்டு உள்நாட்டுத் தத்துவ மேதைகளின் கண்ணோட் டங்கள் ஓர் ஒப்பீடு

பல்வேறு மேதைகளின் கண்ணோட்டங்களை ஒப்பீடு செய்யும் ஒரு டிஜிட்டல் ஆல்பம் தயாரிப்போம்.

அனைத்து மேதைகளின் சுருக்கமான வாழ்க்கை வரலாறுகள், புகைப் படங்கள், அவர்களின் கல்விக் கண்ணோட்டங்கள், மேற்கோள்கள் ஆகியவற்றை எளிதாக இணையத்திலிருந்து பெறலாம், அவற்றின் நம் பகத்தன்மையை உறுதிசெய்து எளிய மொழியில் மொழியாக்கம் செய்து பொருத்தமாகவும் ஈர்க்கின்ற முறையிலும் வடிவமைத்து படவிளக்க ஆல்பம் தயாரிக்கலாம்.

*ஜீன் ஜாக்கிஸ் ரூசோ வறுமையான குடும்பத்தில் கடிகாரம் தயாரிக்கும் ஒரு தொழிலாளியின் மக னாக 1712 ஜூன் 28 இல் ஜனிவாவில் பிறந்தார். கஷ்டமான குழந்தைப் பருவத்தில் முறைசார் கல்வி கிடைப்பதற்காக வாய்ப்பு இல்லாமலிருந்த ரூசோ தந்தையிலிருந்தும், வீட்டிலிருந்தும் ஆரம்பகால அறிவுகளைப் பெற்றார். 13 ஆம் வயதில் நாட்டை விட்டுச் சென்றார். பல பணிகளும் செய்து வாழ்ந்த ரூசோ பிற்காலத்தில் பிரெஞ்சுப் புரட்சியின் முன்னணி போராளி ஆனார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் முத்திரை வாக்கியத்தை உலகிற்கு நன்கொடை அளித்தவர் ரூசோ. Emile, Social Contract, New Heloise எனும் தலைசிறந்த புத்தகங்கள் எழுதியுள்ளார். ரூசோ எழுதிய எமிலி கல்விக் கண்ணோட்டங்களை எடுத்துரைக்கும் நூல்.*

*மழலைப் பருவம், குழந்தைப் பருவம், குமரப் பருவம், வாலிபப் பருவம், சோபியா என்றிவ்வாறு ஐந்து பகுதிகளைக் கொண்ட இந்தப் புத்தகம் எமிலி என்ற குழந்தைக்கு இயற்கையுடன் இணையும் இயல்புச் சூழலில் கல்வி அளிக்கும் கதையையே எடுத்துரைக்கப்படுகிறது.*

ரூசோவின் கல்விக் கண்ணோட்டத்தை நமக்கு இவ்வாறு சுருக்கிக் கூறலாம்.

- குழந்தைப் பருவத்தை கற்றலியலாகக் ("Pedagogical Way") காணவேண்டும்.
- குழந்தையே கல்வியின் மையப்புள்ளியாகும்.
- குழந்தைகள் இயல்பாகவே நன்மை நிறைந்தவர்கள்.
- சமூகமே மனிதர்களைத் தீயவர்கள் ஆக்குகிறது.
- குழந்தையின் இயல்புக்கு ஏற்ப கல்வி அமைய வேண்டும்.
- இயல்பான ஆர்வத்துக்கு ஏற்ப செயல்படவேண்டும்; வெளிச் சட்டங்களுக்கு ஏற்ப அல்ல.
- உள்ளொளியே கல்வியின் இலக்கு.
- செயல்பாட்டின் வாயிலாகக் கோட்பாடு உருப்பெற வேண்டும்.
- இயற்கையே முதல் ஆசிரியர்.
- புலன்களின் பயிற்சியையே முதலில் வழங்கவேண்டும். பின்னர் போதும் சன்மார்க்க பௌதீ கக் கல்வி.

### பெடரிக் அகஸ்டஸ் ப்ரோபல்

*கின்டர் கார்டன் ( மழலைப் பள்ளி) முறையைத் தோற்றுவித்த ப்ரோபல் ஜெர்மனியில் 1792 ஏப்ரல் மாதம் 12 ஆம் தேதி பிறந்தார். தாய் இறந்த பின்னர் தந்தையால் கைவிடப்பட்ட ப்ரோபல் மாமா*

*வின் பாதுகாப்பில் கல்வியை நிறைவு செய்தார். சமய நம்பிக்கையுடனும் இயற்கையோடுள்ள ஈடு பாட்டுடனும் வாழ்ந்த ப்ரோபல் பெஸ்டலோசியின் நிறுவனத்தில் சேர்ந்து தன் கல்விச் சிந்தனைக ளுக்குத் தொடக்கம் குறித்தார். 1832 இல் முதல் மழலையர் பள்ளியைத் தொடங்கினாலும் சுயச்சிந்த னையைக் கண்டு அச்சப்பட்ட அரசு அதைத் தடை செய்தது. ப்ரோபலின் மறைவுக்குப் பின்னர் அவரது மழலைப் பள்ளி முறை உலகம் முழுவதும் வரவேற்பினைப் பெற்றது.*

### ப்ரோபலின் கல்விச் சிந்தனைகள்

- சுயச் செயல்பாடுகளின் வாயிலாக ஒளிர்கின்ற ஓர் ஆன்மீக ஒளி எல்லாக் குழந்தைகளிடமும் உள்ளது.
- விளையாட்டே இந்தச் செயல்பாடுகளின் மையப்புள்ளி.
- சுதந்திர வளர்ச்சி, உடல்நலம் சார் சமூகப் பழக்கங்கள், வளர்தல், அறிவும் உடலும் உணர்வும் சார்ந்த வளர்ச்சி, படைப்புத் திறன்கள் வளர்தல் என்பவையே கல்வியின் இலக்கு.
- கதை சொல்லுதல், உருவாக்கச் செயல்பாடுகள், கைவினைச் செயல்பாடுகள், விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தியும் பயன்பாடும், தாள லயம் மிக்கச் செயல்பாடுகள். புதிர்கள், கட்டி டக் கட்டைகள், முத்துகோர்த்தல், தோட்டத்தைப் பராமரித்தல், ஓவியம் வரைந்து சுவர்களை அழகுப்படுத்துதல் எனும் செயல்பாடுகளை அவர் அறிவுறுத்தினார்.
- கம்பிளி நூல் பந்து, செவ்வகக் கட்டைகள், கோளங்கள் எனும் கற்றல் கருவிகளைச் சிறப் பாகப் பயன்படுத்தினார்.

*ஜோன்டூயி ( 1859- 1952) வாழ்க்கையே கல்வி என்ற கண்ணோட்டத்தை முன்மொழிந்த புகழ்பெற்ற தத்துவமேதை ஆவார். 1859 இல் அமெரிக்காவில் பர்லிங்டனில் பிறந்தார். 1903 இல் சிக்காகோவில் நிறுவப்பட்ட பள்ளிக்கூடத்தில் தன் கல்வித் தத்துவங்களை அவர் ஆய்வு செய்தார். How we think? The School and the Society, Democray and Education, experience and Education, Schools of Tomorrow எனும் ஏராளமான படைப்புகளின் படைப்பாளியே டூயி.*

### டூயியின் முக்கியக் கல்விச் சிந்தனைகள்.

- குழந்தையின் அடிப்படை இயல்பு படைப்பாற்றல் சார்ந்ததும் வெளிப்படையானதும் ஆர்வம் நிறைந்ததும் ஆகும். அதைப் பயன்படுத்துவதே கல்வியாகும்.
- சமூக வாழ்க்கையை மேன்மைமிக்கதாக மாற்றுவதற்குத் தேவையான நற்பண்புகளையும் திறன் களையுமே கல்வி வாயிலாக நாம் பெற வேண்டும்.
- ஜனநாயகமே பயன்மிகுந்த சமூக வாழ்க்கையின் அடிக்கல். பள்ளிக்கூடங்கள் ஜனநாயகப் பயிற்சிக் களரிகளாக அமைதல் வேண்டும்.



- சமத்துவமும் கூட்டுறவுமே ஜனநாயகத்தின் முக்கியக் கருத்துகள். பள் ளிக்கூடச் செயல்பாடுகளில் இது வெளிப்பட வேண்டும்.
- பயன்பாட்டுத் தகுதிக்கே டூயி முக்கியப் பாட ஏற்பாடில் முன்னுரிமை அளிக்கிறார்.
- குழந்தையின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள தேவைக ளுடன் தொடர்புப்படுத்தி பாட ஏற்பாடை வரிசைப்படுத்த வேண்டும்.
- குழந்தைகளின் ஆர்வத்திற்கும் நாட்டத்திற்கும் ஏற்ப பாட ஏற்பாடு அமைய வேண்டும்.



- அனுபவங்களின் அடிப்படையில் கல்வி என்பதையே டூயி எடுத்துரைத்தார். (“Knowledge gained through experience is best understoon, more useful, and retained longer)
- பிரச்சினைத் தீர்வும் செயல்திட்டங்களுமே கற்றல் முறையாக டூயி எடுத்துரைத்தார். கற்பவரின் ஆர்வத்திற்கு ஏற்ப செயல்பாடுகளை வகுப்பில் நடத்த வேண்டும் எனவும் குழுச் செயல்பாடுகளை ஜனநாயகப் பயிற்சிக்காக உட்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

**பௌலோ பிரயர் (1921– 1993) பிரசீலின் ராசிபெ என்ற இடத்தில் 1921 இல் பிறந்தார். 13 ஆவது வயதில் தந்தையை இழந்தார். வறுமை நிறைந்த இளமைப் பருவம்.** “I didn’t undersand anything because of my hunger. I wasn’t dumb. It wasn’t lack of interest. My social condition didn’t allow me to have an education.” எனப் பிரயர் இவ்வாறு கூறினார். ஆனாலும் ஆய்வு செய்த பிரயர் 1946 இல் பண்பாட்டுத்துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அறிவொளி இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடுடைய பிரயரின் முறைசாராக் கல்விச் செயல்பாட்டுக் கட்டமைப்பினைக் குறித்து வினா எழுப்புவதற்கு மக்களைத் தூண்டுவதாக உள்ளது எனும் குற்றச்சாட்டு எழுந்தமையால் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையான பின்னர் சிலியில் கல்விச்செயல்பாடுகளைத் தொடர்ந்தார். Pedagogy of the oppressed, Cultural action for freedom ஆகியன பிரயரின் புகழ் பெற்ற நூல்களாகும்.

### பிரயரின் கல்வித்தத்துவங்கள்



ஆக்கிரமிப்பிற்கும் சுரண்டலுக்கும் எதிராக நடைபெற்ற உலகளாவிய போராட்டங்களின் வரலாறுடைய இலத்தீன் அமெரிக்க சமூகப் பின்புலத்தில் பிரயர் கல்வியைக் கண்டார். மனித விடுதலைக்குத் தேவையான ஒன்றே கல்வி எனப் பிரயர் கண்டறிந்தார். அவமானத்திற்கு உள்ளானவர்களை மனிதத்துவத்துடன் பார்க்கும் செயலே கல்வியாகும். அடிமையாக்கப்பட்டோரின் அடிமை உலகினை மூடச் செய்து அதிலிருந்து விடுதலை பெறுவதுடன் பின்னர் மனிதத்தை இழந்த சுரண்டல்வாதிக்கு மனிதத்தை மீட்டு அளிக்கின்ற இரு நிலைகளிலாக விடுதலைச் செயல்பாடுகளைப் பிரயர் வகைப்படுத்தினார்.

- விமரிசனத்தைக் கல்வியினுடையவும் கற்றலினுடையவும் மையமாகப் பிரயர் உற்றுநோக்கினார். சமூகப் பிரச்சினைகளில் வேரூன்றியுள்ள ஒரு பாடஏற்பாடின் உள்ளடக்கத்தையே பிரயர் நடைமுறைப்படுத்த முயன்றார்.
- கற்றல் ஒரு மீட்டுருவாக்கப் படைப்பாகும்; புதியனவற்றைக் கண்டுபிடிப்பதும் ஆகும்.
- தற்போதைய கற்றல் முறை அறிவை மட்டும் கருத்தில் கொண்ட வங்கி முறையாகும். அது விமரிசனச் சிந்தனை, படைப்பாக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதில்லை
- விமரிசனச் சிந்தனை வாயிலாக அறிவுகளை மாற்றி உருவாக்க வாய்ப்புகள் தேவை.
- அனுபவ வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புடைய கல்வியையே அளிக்க வேண்டும்.
- இன்றைய கல்வி முறை கட்டமைப்பினை நிலைநிறுத்துவதாகும். ( பாதுகாத்து வளர்த்தல் கல்வி)
- பௌலோ பிரயர் மிக ஆழமாக எடுத்துரைத்த ஒன்றே வங்கி முறை. வங்கிக் கணக்கில் பணம் சேமித்தல் போன்றே மாணவனை ஒரு கணக்கு எண்ணாகப் பார்ப்பதுடன் அவனிடம் அறி

வைச் சேமிக்கச் செய்யும் முறையே வங்கிக் கல்வி. இது கல்வி அறிவைச் சேமிப்பதிலும் அறிவைச் சோதித்துப் பார்ப்பதிலும் மட்டுமே அடங்குகிறது. வங்கிக் கல்வி விமரிசனச் சிந்தனைகளை அழிக்கின்றது.

- குழுத் தேடலும் விவாதமும் கருத்துப் பரிமாற்றமுமே கல்விச் செயல்பாடுகளில் நடைபெற வேண்டும்.

## சுவாமி விவேகானந்தர்

*1863 ஜனவரி 12 ஆம் தேதி விஸ்வநாத தத்தா என்ற வழக்கறிஞரின் மகனாகக் கொல்கத்தாவில் பிறந்தார். நரேந்திரன் என்பதே அவரது பெயர். கல்வியில் சிறந்து விளங்கினார். இவர் கொல்கத்தாவிலுள்ள ஸ்கோட்டிஷ் சர்ச் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்ற பின் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர் ஆனார். பாரதத்தின் தத்துவங்கள், வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றில் திறன்பெற்ற விவேகானந்தர் நவீன சமூக வாழ்க்கைப் பிரச்சினைகளை முழுமையாகப் பகுப்பாய்வு செய்து தன் கண்ணோட்டங்களை வடிவமைத்தார்.*




## விவேகானந்தரின் கல்வித் தத்துவங்கள்

மனிதனில் இரண்டறக் கலந்த தெய்வீக முழுமையின் வெளிப்பாடாகும் கல்வி என்பது விவேகானந்தரின் கூற்றாகும். ஒரு செடியானது வளர்ந்து வருவதைப் போன்றே குழந்தையும் வளரும் எனவும் ஆசிரியருக்கு ஒரு தோட்டக்காரர் செய்வதைப் போன்று தடைகளை நீக்கும் பொறுப்பு மட்டுமே உள்ளது என்றும் விவேகானந்தர் கருதினார். அறிவானது பிறவியிலேயே அடங்கியுள்ளது. அதனை வெளிக்கொணர்வதே கல்வியின் இலக்கு. உடல் திறன்களின் வளர்ச்சி, சன்மார்க்கக் கல்வி, தொழில்பயிற்சி, பிரம்மசர்யம் என்பன விவேகானந்தரின் கண்ணோட்டத்திற்கு ஏற்ப அமைந்துள்ள இலக்குகள்.

தேசிய உணர்வு, சுதந்திர உணர்வு, அறிவியல், வேதாந்த இணைப்பு ஆகியவை அவரது கருத்துகளாகும்.

ஆண் பெண் சமத்துவம், அனைத்து மக்களின் சகோதரத்துவமும் நலனும் எனும் கருத்துகளையும் அவர் முன்மொழிந்தார்.



## இரவீந்திரநாத தாகூர்

1861 மே 7 ஆம் தேதி கொல்கத்தாவில் பிறந்தார். தாய் இறந்ததுடன் தகப்பனார் தேபேந்திர தாகூர் தொடர்ந்து பயணத்தில் இருந்ததாலும் இளமைக்காலம் முழுவதும் வீட்டில் வேலைக்காரர்களின் பாதுகாப்பிலேயே வாழ்ந்தார். இசை, நடனம், இலக்கியம் ஆகியன நிறைந்து நின்ற ஒரு குடும்பமாகவும் இருந்தது. கவிதை, நாவல், நாடகம் என அனைத்து இலக்கியத் துறைகளிலும் தனிமுத்திரை பதிப்பித்த தாகூருக்கு 1913 இல் நோபல் பரிசு கிடைத்தது. 1901 இல் நிறுவிய சாந்தி நிகேதனத்தில் தாகூரின் புகழ்பெற்ற முதல் கல்வி முயற்சி அமைந்தது. பின்னர் 1921 இல் மேலை- கீழைப் பண்பாடுகளை ஒருங்கிணைத்துக் கொண்டு விஸ்வபாரதிப் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

## தாகூரின் கல்வித் தத்துவங்கள்

இந்திய தத்துவச் சிந்தனைகளிலும் பண்பாட்டிலும் திடமான நம்பிக்கை கொண்டிருந்த தாகூர் உல களாவிய தேசியத்தையே முழுமையாகக் கண்டார். பாரதப் பண்பாட்டை உலகப் பண்பாட்டின் ஒரு பகுதியாகவே தாகூர் கருதினார். சர்வதேசக் கூட்டுறவு, உலகக் குடிமகன் எனும் கருத்துகளை முன் மொழிந்த தாகூர் ஒரு போதும் குறுகிய சிந்தனை உள்ள தேசியவாதியாக இருக்கவில்லை.

- சுய இயல்பாக்கமே கல்வி இலக்கு
- கற்பனைத் திறன், படைப்புத் திறன், பகுத்தறிவு எனும் பௌதீகத் திறன்கள் விரிவடைய வேண்டும்.
- குழந்தைகளுக்குத் தன் கற்றல் முறைகளைத் தேர்வுசெய்வதற்கு உரிய சுதந்திரம் இருக்க வேண்டும்.
- உலகளாவிய மனிதநேயத்திற்கு அன்பையும், ஆதரவையும் விரிவுபடுத்த வேண்டும்.
- தாய்மொழி வழியே கற்றல் ஊடகம் .
- வட்டார அறிவுகளோடு நவீன அறிவியல் தொழில்நுட்பக் கல்வியிலும் திறன்கள் பெற வேண் டும்.
- உளப்பூர்வமானதும், நன்னடத்தைச் சார்ந்ததும் ஆன மேம்பாட்டைப் பெறவேண்டும்.
- இயற்கையோடிணைந்த கல்வியை அளிக்க வேண்டும்.
- குழந்தைகளின் ஆர்வத்திற்கு ஏற்ப வெவ்வேறான பாடங்கள் வேண்டும்.
- வகுப்பறைக்கு வெளியே பரந்து விரிந்த உலகத்தையே குழந்தைகளின் பாடப் பொருளாக அமைக்க வேண்டும்.

## காந்திஜி




காந்திஜி 1869 இல் குஜராத் மாநிலத்திலுள்ள போர் பந்தரில் பிறந்தார். 1893 முதல் 20 ஆண்டுகள் தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்து நிறவெறிக்கும் அடி மைத்தனத்திற்கும் எதிராகச் செயல்பட்டார். 1914 இல் இந்தியாவிற்குத் திரும்பி வந்து ஏகாதிபத்தியத் திற்கு எதிரான போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். அத்துடன் கல்விச் செயல்பாடுகளை யும் தொடங்கினார். 1937 இல் வார்த்தா திட்டத்திற்கு வடிவம் கொடுத்தார்.

## காந்திஜியின் கல்வித் தத்துவங்கள்

- கல்விக்குக் காந்திஜி தரும் பொருள் மனம், உடல், ஆன்மா ஆகியவற்றில் அடங்கியுள்ள முழுமையான வெளியீடு அல்லாமல் சாதாரண எழுத்தறிவு மட்டுமல்ல என்பதாகும்.
- சுய இயல்பாக்கமே கல்வியின் உயர் இலக்கு.
- நன்மை தீமைகளைப் பகுத்தறிவதற்குத் தகுதிபெறாத கல்வி பயனற்றது.
- கிராமப்புறங்களில் உள்ள வறுமையாளனின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே கல்வி.
- உடல்- மனம்- ஆன்மா இணைந்து அடைவதே கல்வியின் இலக்கு.

- கல்வி முழுமையாகவும் இலவசமாகவும் கிடைக்க வேண்டும்.
- கல்வியை இலவசமாக்குவதற்கு உரிய வழிமுறை அதனைத் தன்வயப்படுத்துதல் ஆகும். குழந்தைகளுக்கு ஊதியம் கிடைக்கிற சிறுதொழிலும் கல்வியின் பகுதியாக அமைய வேண்டும்.
- கல்வியின் பகுதியாகச் சிறுதொழிலைக் கட்டாயமாக்குவது கல்விக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிப்பது அல்ல. தொழில் செய்வது ஆளுமைப் பயிற்சியையும் அளிக்கிறது என்பதே காந்திஜி முன்வைத்த சிந்தனையாகும்.
- எதிர்கால வாழ்வுக்கு உதவுகிற தொழில்பயிற்சியும் கல்வித்திட்டத்தில் இருக்க வேண்டும்.
- சுய உதவிக் கிராமங்கள் என்ற கனவை நனவாக்கும் செயல்பாடுகளை நாம் ஆரம்பிப்பது கல்வி வாயிலாக அமைய வேண்டும்.
- சுற்றுப்புறச் சூழலோடு இணைந்தே கல்வி இருக்க வேண்டும்.
- மொழியையும், இலக்கியத்தையும் கற்கவேண்டும். ஆனால் தாய்மொழியை மறந்துவிடக்கூடாது.

## டிஜிட்டல் ஆல்பத்திற்கு

சில மேற்கத்திய - கிழக்கத்திய தத்துவஞானிகளின் கல்வி பற்றிய கண்ணோட்டங்கள் தொடர்பான சில குறிப்புகள் மட்டுமே மேலே தரப்பட்டுள்ளன. இணைய தளங்களிலிருந்து மேலும் பல தகவல்கள், சரியான எடுத்துக்காட்டுகள், படங்கள் என்பன கிடைக்கும். அனைத்தையும் சேர்த்து படவிளக்க ஆல்பத்தைத் தயார் செய்வீர்கள் அல்லவா.

மேற்கத்திய - கிழக்கத்திய தத்துவங்களை ஒப்பீடு செய்து அவற்றை சேர்ப்பீர்கள் அல்லவா.

ஒப்பீடு செய்யும் போது

- கல்வியின் இலக்குகளை எவ்வாறு மேற்கத்திய- கிழக்கத்திய தத்துவங்கள்  அணுகுகின்றன? ஒற்றுமை வேற்றுமைகள் எவை?
- கற்பித்தல் முறையில் ஒற்றுமை வேற்றுமைகள். குழந்தைகள் மைய முறைகள் எனும் இவற்றை எவர் குறிப்பிடுகின்றனர்? செயல்முறைக் கல்வியை குறிப்பிடுவோர் எவர்? சுற்றுச்சூழல் சார்ந்த கற்றல் முறைகளை எவர் குறிப்பிடுகின்றனர்?
- ஒழுக்கம், சுதந்திரம் என்பன பற்றி ஒவ்வொருவரும் எவ்வாறு அணுகுகின்றனர்? பிற ஒற்றுமை வேற்றுமைகள் எவை?
- பல்வேறு கல்விசார் தத்துவஞானிகளின் நன்கொடைகளை நீங்கள் அறிந்துகொண்டீர்கள் அல்லவா?  டூயினுடையவும் காந்திஜியினுடையவும் கல்வித் தத்துவங்களில் சில ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் உங்களுக்குக் கண்டறிய இயலும் இதைப்போன்று ரூசோ- விவேகானந்தர், பௌலே பிரேயர் - பிற தத்துவமேதைகள் என்போரையும் ஒப்பீடு செய்யலாம். இவ்வாறு ஒப்பீடு செய்து கிடைக்கின்ற கட்டுரைகளை வெளியிடுவதற்குக் கல்விசார் தத்துவமேதைகள் ஒப்பீட்டுக் கலந்துரையாடல் நடத்த வேண்டும். தொடர்புடைய ஒரு கற்றல் கருவியைத் தயாரிக்கவும்.

## நம் பள்ளிக்கூடப் பாட ஏற்பாடும் தத்துவங்களும்

நமது நடைமுறையில் உள்ள பள்ளிக்கூடப் பாட ஏற்பாடைச் சோதித்துப் பார்க்க மேலே கூறப்பட்டுள்ள தத்துவங்களுக்கும் நம் பாடஏற்பாடில் உள்ள பல்வேறு அணுகுமுறைகளுக்கும் தத்துவங்களுக்கும் இடையே  உள்ள தொடர்பைக் கலந்துரையாடவும்.

- வித்யாப்யாசத்தின்றெ தார்சனிக பூமிக – வேதமணி மானுவல், டி கெ டி நாயர்)பாரதீய வித் யாப்யாசம் ( டி கெ. முகம்மது) வித்யாப்யாசம் ( கெ . டோ. சிவதாசன் பிள்ளை பக்கம் 72 முதல் 104 வரை)
- Rudiments of Education : Sociology and Philosophy : Sankara Narayanan Paleen :
- Neelkamal Publications : Hyderabad.

Sankara Narayanan

## அலகு 4

# ஆசிரியக் கல்வி

### முன்னுரை

ஆசிரியப் பயிற்சி பெறும் எந்த ஒரு மாணவரிடமும் ஆசிரியர் கல்வியின் இலக்கு, உள்ளடக்கம், பரிமாற்ற முறை, மதிப்பீடு செய்தல் ஆகியவற்றைக் குறித்தும் அவற்றின் வாயிலாக எதிர்கால ஆசிரியரில் உருவாக வேண்டிய திறன்களைக் குறித்தும் சரியான சிந்தனையை உருவாக்க வேண்டியுள்ளது. பள்ளிக்கூடக் கல்வியின் கல்வித் திட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதே ஆசிரியர் கல்வி. அது பள்ளிக் கூடப் பாட ஏற்பாடு, பாட ஏற்பாடுக்கு அடிப்படையாக அமையும் கோட்பாட்டுச் சூழல், கல்வியோடு தொடர்புடைய சமூக அமைப்புகள், பின்னுதவி செய்யும் அமைப்புகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது. பிற தொழில்களிலிருந்தும் வேறுபட்ட மிக அதிகமான விழுமிய உணர்வும், மனப்பான்மையும், திறன்களும் உருவாகி வரவேண்டிய ஆசிரியப் பணிக்கு ஏற்ற கல்வித்திட்டமே ஆசிரியக் கல்விக்கு உரியது. பணி முன் பயிற்சி பணி இடை ஆசிரியப் பயிற்சியைக் குறித்தும் அவற்றோடு தொடர்புடைய அமைப்புகளைக் குறித்தும் ஆசிரிய மாணவர்களுக்குப் பொதுக் கருத்தை ஏற்படுத்துவதே இந்த அலகின் நோக்கமாகும்.

### கற்றல் அடைவு

பணிமுன் ஆசிரியப் பயிற்சியின் தேவையைப் பகுத்தறிதல்.

### முக்கியக் கருத்துகள்

- டி டி சி, டி எட் என்னும் பெயர்களில் அறியப்பட்டு வந்த கேரளத்தில் உள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சியே டி எல் எட் ஆக மாறியது.
- தொடக்கநிலை வகுப்புகளில் கற்பிப்பதற்குத் தேவையான அறிவுகள், திறன்கள், மனப்பான்மைகள், திறமைகள் ஆகியவற்றை உருவாக்குவதே டி எல் எட் பயிற்சியின் இலக்கு.
- டி எல் எட் (D.El.Ed) கல்வியில் இரண்டு ஆண்டுகள் நீண்டு நிற்கும் நான்கு பருவங்கள் உள்ள ஒரு பாட ஏற்பாடு உண்டு.

உங்களுக்கு உங்கள் ஆசிரியரைக் குறித்த நினைவுகள் இல்லையா? மிக விரும்பிய ஆசிரியர், சற்றும் விரும்பாத ஆசிரியர்களைக் குறித்த நினைவுகளை வெளிப்படுத்தவும்.

- நீங்கள் ஆசிரியரை மிக விரும்புவதன்/ விரும்பாததன் காரணம் என்ன?
- ஆசிரியர் பணிக்குத்தேவையான அடிப்படைத் திறன்கள் எவை?
- தற்போதுள்ள ஆசிரியர் சமூகத்தைக் குறித்த உங்கள் கருத்து என்ன?

### உள்ளடக்கம்

தொடக்கப் பள்ளிக் கல்விக்கும் உயர்நிலைக் கல்விக்கும் இடையே உள்ள முறைசார் கல்வி நிலை, தொடக்கநிலைக் கல்வி என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் இது 1 முதல் 8 வரை உள்ள வகுப்புகள் ஆகும். முறைசார் கல்வியின் இந்தத் தொடக்க நிலையில் எழுத்து, வாசித்தல், கணக்கு, சுற்றுச்சூழல், கலை, விளையாட்டுத் திறன் ஆகியவற்றோடு தொடர்புடைய அடிப்படைத் திறன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

ஒரு மாணவரின் முறைசார் கல்விக்கு அடித்தளம் அமையும் நிலை என்பதால் இது கல்விசார்ந்த மிக முக்கியமான நிலையாகும். ஒவ்வொரு பாடப்பிரிவின் அடிப்படைக் கருத்துகள், திறன்கள் ஆகியன தொடக்கநிலையிலேயே உறுதிப்பட வேண்டும். வளர்ச்சி முழுமை அடையவோ தேவையான கற்றல் அடைவுகளைப் பெற்றுக்கொள்ளவோ செய்யாத மாணவரே தொடக்க நிலையில் உள்ள மாணவர் என்பதால் இவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முதிர்ந்த மாணவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை விடக் கூடுதல் கற்பித்தல் திறன்கள் தேவையாகும். மாணவரின் வளர்ச்சி மேம்பாடு, கற்றல் ஆகியவற்றைக் குறித்து அறிவியல் சார் கண்ணோட்டங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். இத்துடன் பல்வகைமையுடைய பாடங்களைக் கையாள்வதற்கு உரிய கற்பித்தல் உத்திகளைக் குறித்தும் கற்பித்தல் கருவிகளைக் குறித்தும் ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும். இதற்கான வாய்ப்புக்கள் டி எல் எட் பாட ஏற்பாடில் உட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கருத்துசார் அறிவுகளைப் பயன்படுத்திப் பார்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உள்ள 100 நாட்கள் நீண்டு நிற்கும் நடைமுறை ஆசிரியர் பயிற்சியும் இந்தக் கல்வியின் பகுதியாகும். மொத்தமாக தொடக்கநிலை வகுப்புகளில் கற்பிப்பதற்குத் தேவையான கருத்துகள், திறன்கள், மனப்பான்மைகள், அறிவுகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதே டி எல் எட் கல்வியின் இலக்காகும்.

## கற்றல் அடைவு

பணிமுன் ஆசிரியர் பயிற்சியின் உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வு செய்தல்.

## கருத்து மண்டலங்கள்

- டி எல் எட் பாடம் சார்ந்த உள்ளடக்கம்
- பள்ளி அனுபவ நிகழ்வு
- முகாம்
- கல்விச் சுற்றுலா
- பட்டறைகள்

## டில் எல் எட் பாட ஏற்பாடைச் சோதித்துப் பார்த்துக் கண்டுபிடிக்கவும்

- கற்க வேண்டிய பாடங்கள் எவை?
- எழுத்துத் தேர்வுகள் எந்தெந்த பாடங்களுக்கு எந்தெந்த பருவங்களில் நடைபெறுகின்றன?
- தொடர்மதிப்பீடு என்றால் என்ன? டி எல் எட் கல்வியில் தொடர்மதிப்பீடு செய்தலின் முக்கியத்துவம் எத்தகையது?
- பள்ளி அனுபவ நிகழ்விற்குத் தயாராவது எவ்வாறு?
- முகாம், கல்விச் சுற்றுலா ஆகியவற்றின் நோக்கங்கள் யாவை?
- பட்டறைகளில் பங்கு கொள்வதால் உள்ள நன்மைகள் யாவை?
- இதுவரைக் கற்ற கல்வியிலிருந்து இந்தக் கல்விக்கு உள்ள வேறுபாடுகள் யாவை?

## உள்ளடக்கம்

- கல்வி உளவியல், கல்வியின் தத்துவ அடித்தளம், தாய்மொழி கற்பித்தலியல், ஆங்கிலம் கற்பித்தலியல், கணிதம் கற்பித்தல், சுற்றுச்சூழல் கல்வி, அறிவியல் கல்வி, சமூகவியல் கல்வி, கலை- விளையாட்டுச் செயல்வழி அனுபவம், தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பக் கல்வி ஆகி

யவையோடு தொடர்புகொண்டு 4 பருவங்களில் 35 தாள்களாக உள்ளடக்கம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- 100 நாட்கள் அடங்கிய பயன்பாட்டுப் பள்ளி அனுபவ நிகழ்வு இந்தக் கல்வியின் ஒரு பகுதியாகும். 1, 2 பருவங்களில் 5 நாட்கள் இந்தக் கல்வியின் ஒரு பகுதியாகும். 1,2 பருவங்களில் 5 நாட்கள் வீதமும் 3, 4 பருவங்களின் பள்ளி அனுபவப் பாடப்பகுதியோடு தொடர்புடைய மாதிரி வகுப்புகளுக்கு உரியனவாகும். மூன்றாம் பருவத்தில் தொடக்கநிலைப்பள்ளியை அடிப்படையாகக் கொண்டும் நான்காம் பருவத்தில் நடுநிலைப் பள்ளியை அடிப்படையாகக் கொண்டும் பள்ளி அனுபவ நிகழ்வுகள் நடைபெறுகின்றன. கூடுதல் விளக்கங்களை டி எல் எட் திட்டத்திலிருந்து புரிந்துகொள்ளவும்.

- 15 நாட்கள் நீண்டு நிற்கும் தங்கிக் கற்கும் தன்மை உடைய முகாம் உண்டு. ஆசிரிய மாணவரின் சமூகப் பண்புகள், கருத்துப் பரிமாற்றத் திறன், தலைமைப் பண்பு, கலை- விளையாட்டுப் படைப்புத் திறன்களின் மேம்பாடு, பிரச்சினைத் தீர்வுத் திறன் ஆகியனவற்றின் வளர்ச்சியே சமூகக் கூடிவாழ் முகாமின் நோக்கம். முகாமிற்குச் செயல்பாட்டு விளக்கங்கள் அடங்கிய கருத்தலகு உண்டு. முகாமிற்கான திட்டமிடல், நடத்துதல் போன்றவை ஆசிரிய மாணவர்களின் தலைமையில் நடைபெற வேண்டும்.

- ஒரு கற்றல் உத்தி என்னும் நிலையில் கல்விச் சுற்றுலாக்களைத் திட்டமிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் உரிய அனுபவங்களையும் திறன்களையும் பெற்றுக்கொள்வதே கல்விச் சுற்றுலாவின் நோக்கம் ஆகும். கல்விச் சுற்றுலாவின் மேலாண்மை, பொருளாதாரப் பரிமாற்றம், வரவு- செலவுக் கணக்குகள் ஆகியவற்றை ஆசிரிய மாணவர்கள் சுயமாக மேற்கொள்ள வேண்டும். கல்விச் சுற்றுலா குறித்த விளக்கங்கள் டி எல் எட் பாடஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

- ஒன்று இரண்டு பருவங்களில் நடத்தவேண்டிய பள்ளி அனுபவ நிகழ்வுகளுக்கு ஒவ்வொரு பாடத்தோடும் தொடர்புடைய மாதிரிப் பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடப் பகுதிகளோடு தொடர்புகொண்டு நடைபெற வேண்டிய செயல்பாடுகளைத் திட்டமிடுவதற்கு உரிய பட்டறைகளே பாட ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவு

ஆசிரியர் தகுதித் தேர்வுகள், பாடப்பிரிவுகள் ஆகியனவற்றின் அமைப்பு, ஒன்றோடொன்றிற்கு உள்ள தொடர்பு ஆகியவற்றைக் கண்டுபிடித்தல்.

## கருத்து மண்டலங்கள்

### ஆசிரியப் பயிற்சிப் பிரிவுகள்

பி பி டி டி சி

டி எல் எட்

பி எட்

எம் எட் என்பன

### ஆசிரியர் தகுதித் தேர்வுகள்

கெ டெட்

சி டெட்

செட்

நெட்

## உள்ளடக்கம்

**1. தொடக்கநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் (PPTTC)**

தொடக்க நிலையில் உள்ள ஆசிரியர்களைத் தயார் செய்வதற்கு உரிய சேவை சார்ந்த பயிற்சியே தொடக்கநிலை ஆசிரியர் பயிற்சி. மேல்நிலை தேர்ச்சியே இதற்கான அடிப்படை தகுதி. எஸ் சி இ ஆர் டி தயார் செய்த பாட ஏற்பாடின் அடிப்படையில் வகுப்புகள் நடைபெறுகின்றன. பயிற்சிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

**2. டிப்ளமோ இன் லாங்குவேஜ் எடியுகேஷன்,**

இந்தி, வடமொழி போன்ற பாடங்களுக்கான மொழி ஆசிரியர்களை நியமிப்பதற்கான வகுப்பே டிப்ளமோ இன் லாங்குவேஜ் எடியுகேஷன். (D.L.Ed), D.El.Ed. என்ற உங்களின் வகுப்புடன் இதற்கான வேறுபாட்டைப் பகுத்தறிய வேண்டும்.

**3. டி எல் எட் (D.El.Ed) நடுநிலை ஆசிரியப் பயிற்சி வகுப்பு**

**4. பி எட் (B.Ed) உயர்நிலை ஆசிரியப் பயிற்சி வகுப்பு**

**5. எம் எட் (M.Ed) கல்வியின் பட்ட மேற்படிப்பு**

ஆசிரியப் பயிற்சி வகுப்புகள் மட்டும் நிறைவு செய்தால் ஆசிரியர்களாகப் பணியாற்ற இயலாது. ஆசிரியர் தகுதிக்காகக் குறிப்பிட்ட சில தேர்வுகளிலும் வெற்றிபெற வேண்டும்.

- நடுநிலை ஆசிரியர் பயிற்சியின் தகுதித் தேர்வு
  கெ டெட் (K.TET) Kerala Teacher Eligibility Test (கேரள அரசால் நடத்தப்படும் தேர்வு)
  சி. டெட் (C.TET) Kerala Teacher Eligibility Test (மத்திய அரசால் நடத்தப்படும் தேர்வு)
- செட் (SET) State Eligibility Test (மேல்நிலை ஆசிரியர் ஆவதற்கு உரிய தகுதித் தேர்வு)
- நெட் (NET) National Eligibility Test (தேசியக் கல்லூரி ஆசிரியர் தகுதித் தேர்வு)

## கற்றல் அடைவு

சேவை சார்ந்த கால அளவிலான பயிற்சியின் தேவை, நோக்கம் என்பன பகுத்தறிதல்.

## முக்கியக் கருத்துகள்

- கற்பித்தல் என்பது வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டிய தொழில்.
- ஆசிரியர் என்பவர் தேடுபவரும் ஆராய்ச்சியாளரும் ஆவார்.
- ஆசிரியர்களுக்காகப் பணிக்காலப் பயிற்சிகள் உள்ளன.
- பாட ஏற்பாடில் வரும் மாற்றங்களை ஆசிரியர் உட்கொள்ளுதல் வேண்டும். உள்ளடக்கம், பரிமாற்ற உத்திகள், கற்றல் கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றைக் குறித்துள்ள சிந்தனைகள் ஆசிரியருக்கு இருக்க வேண்டும்.

## உள்ளடக்கம்

பிற தொழில்களிலிருந்து வேறுபட்டு கற்பித்தல் தொடர் கற்றலும் தேடலும் தேவையான தொழிலாகும். நாட்டம் மிக்கக் குழந்தைகளையே ஆசிரியர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களின்

ஐயங்களுக்குத் தீர்வுகள் காணவும் அவற்றின் வாயிலாக அவர்களின் உலகத்தை விரிவுபடுத்துவதற்கு உரிய பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு. கருத்துப் பொழிவினுடையவும் எண்ணுரு தகவல் தொடர்பினுடையவும் காலகட்டத்தில் தமது அறிவையும் கருவிகளையும் கூர்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதற்காக ஆசிரியர் எப்பொழுதும் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். தொலைத் தூரக் கல்வியைப் பயன்படுத்திக் கற்பதற்கு உரிய ஏராளமான வாய்ப்புகள் இன்று உள்ளன. இத்துடன் கல்வித்துறையினுடையவும் எஸ் எஸ் ஏ, ஆர் எம் எஸ் ஏ, கைட் (KITE - Kerala Infrastructure and Technology For Education) எனும் நிறுவனங்களின் தலைமையில் நடைபெறும் பணிக்காலப் பயிற்சிகளிலும் ஆசிரியர் பங்குபெற வேண்டும்.

ஆசிரியர் பணியின் போது மாற்றுத்திறனாளிகளான மாணவர்களையும் தனிக்கவனம் தேவையானவர்களையும் கையாளுதல் எப்பொழுதும் சவால் நிறைந்தது. ஒவ்வொரு செயல்பாட்டிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வாய்ப்புகள் குறித்தும் தனிக்கவனம் தேவைப்படுபவர்களுக்கு அவற்றை வடிவமைப்பது குறித்தும் ஆசிரியர் ஓர் ஆய்வாளர் போன்று தேடல் நடத்த வேண்டும். இது புதிய செயல்பாடுகளை உருவாக்குவதற்கும் கற்றல் கருவிகளை மேம்படுத்துவதற்கும் உரிய ஆய்வுச் செயல்பாடாக இருக்க வேண்டும் இத்தகைய செயல்பாட்டுக் கருதுகோள்களுக்கு அடித்தளமாக குழந்தை உளவியலைக் குறித்தும் கற்றல் கோட்பாடுகளைக் குறித்தும் கல்விசார் காட்சிகளைக் குறித்தும் ஆசிரியர் நன்கு புரிந்துகொள்ள முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்.

### கற்றல் அடைவு

பல்வேறு ஆசிரியர் பயிற்சி அமைப்புகள், நிறுவனங்கள், ஆகியவற்றின் அமைப்பு முறைகளையும் செயல்பாடுகளையும் பகுப்பாய்வு செய்தல்.

### கருத்து மண்டலங்கள்

நடுவண், மாநில ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களும் அமைப்பு முறைகளும்

- NCERT, RIE, NCTE
- SCERT, IASE, CTE, DIET, I.T.E
- BRC, CRC

## 1. NCERT (National Council for Educational Research and Training)

இது ஒரு தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம். தேசிய அளவில் டெல்லியைத் தலைநகராகக் கொண்டு செயல்படும் இந்தத் தன்னாட்சி நிறுவனம் நாட்டின் பள்ளிக்கூடக் கல்வியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. தேசிய அளவில் CBSE பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்களும் பாட ஏற்பாடும் தயார் செய்தல், மாநிலங்களுக்கு வழிகாட்டியாகக் கல்வியோடு தொடர்புடைய செயல்களைக் குறித்து ஆராய்ச்சிகள் நடத்துதல், தேசியப் பாட ஏற்பாடு சட்டகங்கள் தயார் செய்தல். புதிய கற்றல் உத்திகளையும் கருவிகளையும் மேம்படுத்துதல், பணிமுன் பயிற்சி – பணி இடைப் பயிற்சிகளை நடத்துதல், தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சி என்பன இந்த நிறுவனத்தின் கடமைகள் ஆகும்.

### 2. RIE (Regional Instiure of Education)

என் சி இ ஆர் டி இன் மண்டலம் வாரியான பிரிவுகளே ஆர் ஐ இ கள்

1. ஆர் ஐ இ அஜ்மீர்
2 ஆர் ஐ இ போபால்

3 ஆர் ஐ இ புவனேஸ்வர்

4 ஆர் ஐ இ ஷில்லாங்

5 ஆர் ஐ இ மைசூர்

என்ற ஐந்து ஆர் ஐ இகள் உள்ளன. இவை பணிமுன் ஆசிரியர் பயிற்சிகளும் பணி இடைப் பயிற்சிகளும் நடத்துவதுண்டு. அஜ்மீர், போபால், புவனேஸ்வர், மைசூர், ஆர் ஐ இ களோடு தொடர்பு கொண்டு Demonstration Multipurepose school (DMS) செயல்படுகிறது. இவை நவீன கற்றல் கற்பித்தல் மாதிரிகளை மேம்படுத்துவதற்கும் மாதிரி வகுப்புகள் நடத்துவதற்கும் உரிய மையங்கள் ஆகும். மழலையர் பள்ளி முதல் உயர்நிலை வரையிலுள்ள ஆசிரியர் பயிற்சிகளை ஆர் ஐ இகள் நடத்தி வருகின்றன.

## 3. NCTE (National Council for Teacher Education)

இது நாட்டின் ஆசிரியக் கல்வியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காகச் செயல்படும் நிறுவனம் ஆகும். ஆசிரியக் கல்விப் பிரிவுக்கும் நிறுவனத்திற்கும் என் சி டி இன் அங்கீகாரம் தேவையாகும்.

## 4. SCERT (State Council of Educational Research and Training)

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் என்பது மாநிலத்தின் பள்ளிக் கல்வி மற்றும் கற்றல் ஆராய்ச்சிகளுக்குத் தலைமை தாங்கும் நிறுவனம் ஆகும். தன்னாட்சிப் பண்போடு செயல்படும் இந்த நிறுவனத்தில் ஆறு துறைகள் செயல்படுகின்றன.

1. Curriculam, Text books & Evaluation
2. Teacher Education & Extension
3. Educational Technology
4. Art, Physical, Health and Vocational Education.
5. Research Documentation and Dissemination
6. Special Education

- மாநிலத்தில் உள்ள மழலையர் முதல் மேல்நிலைப் பள்ளி வரையில் உள்ள கல்வி, பாட ஏற்பாடு, கற்றல் கருவிகள், மதிப்பீட்டு உத்திகள், வழிக்காட்டிகள் ஆகியவற்றை மேம்படுத்துதல்
- பாட ஏற்பாடு, கற்றல் கருவிகள் ஆகியவற்றைக் குறித்துள்ள கற்றல்களும் ஆராய்ச்சிகளும் நடத்துதல்
- பணிக்காலப் பயிற்சிக்குத் தலைமை தாங்குதல்
- கலை, விளையாட்டு, செயல்வழிக் கல்விக்குத் தேவையான கருவிகளை மேம்படுத்துதல்.
- ஆசிரியர் பயிற்சி கருத்தலகு, கற்றல் கருவிகள் ஆகியவற்றைத் தயார் செய்து நடைமுறைப்படுத்துதல்.
- கல்வித்துறை நடத்தும் வெவ்வேறு தேர்வுகளுக்கு உரிய வினா மாதிரிகளை மேம்படுத்துதல்

## IASE (Institure of Advanced Studies in Education & CTE, (College of Teacher Education)

உயர்நிலை, மேல்நிலை ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் IASE உம் CTE உம் ஆகும். B.Ed, M.Ed எனும் பணிசார் ஆசிரியப் பயிற்சிகளும் இந்த நிறுவனங்களில்

நடைபெறுகின்றன. மேலும் B.Ed ஆசிரியப் பயிற்சி கல்லூரிகளும் பல்கலைக் கழகங்கள் நேரடி யாக நடத்தும் B.Ed மையங்களும் உள்ளன.

## DIET (District Institute of Education and Training)

மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் அல்லது டயட்டுகள் தேசியக் கல்விக் கொள்கை யின் பகுதியாக மாவட்டங்களில் தொடங்கப்பட்டன. தொடக்கநிலைக் கல்வித் தரத்தை உறுதிப்ப டுத்துவற்கு உரிய நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடத்துவதுடன் பணிமுன் ஆசிரியப் பயிற்சிகள் நடத் துவதே இந்த நிறுவனத்தின் முக்கியக் கடமையாகும். டயட்டில் ஏழு துறைகள் செயல்படுகின்றன.

1. P.S.T.E (Pre Service Teacher Education)
2. P & M (Planning and Management)
3. ET (Educational Technology)
4. IFIC (In service Field Interaction Innovation Co-ordination)
5. W.E. (Work Experience)
6. DRU (Dirtrict Resource Unit)
7. CMDE (Curriculam Material Development and Evaluation)

ஏழு துறைகளில் PSTE என்ற துறை பணிமுன் பயிற்சி பிரிவும் பிற அனைத்துத் துறைகளிலும் பணி இடை பயிற்சிப் பிரிவுகளும் ஆகும். பாட ஏற்பாட்டின் சிறந்த பரிமாற்றத்திற்குத் தேவை யான கருவிகளை மேம்படுத்துதல், பயன்படுத்திப் பார்த்தல் ஆகியவை டயட்டுகளின் முக்கியக் கடமைகளாகும். DRU துறை முறைசாராக் கல்விச் செயல்பாடுகளை நடத்தும் துறை ஆகும். மாவட் டத்தில் உள்ள கல்விசார் செயல்பாடுகளுக்குத் தலைமை தாங்கும் நிறுவனங்கள் என்ற நிலையில் டயட்டுகளுக்குக் கேரளத்தில் மிக முக்கிய இடம் உள்ளது. பாட ஏற்பாடு சீரமைப்புகளோடு தொடர் புடைய செயல்பாடுகளிலும் SSA, RMSA எனும் செயல்திட்டங்களின் கல்விசார் தலைமையிலும் டயட்டுகள் செயல்பட்டு வருகின்றன.

## ITE (Institute of Teacher Education)

D.El.Ed வகுப்புகளை நடத்தும் நிறுவனங்களே ITE ஆகும். அரசு உதவிபெறும், உதவிபெறாத துறைகளில் செயல்படும் ITE கேரளத்தில் உள்ளன.

### BRC (Block Resoure Centre)

வட்டார அளவிலான கல்விசார் தலைமையும் உதவியும் அளிக்கும் அமைப்புகளே வட்டார வள மையங்கள் ஆகும். பி ஆர் சிகளில் ஒரு வட்டார வளத்திட்ட அலுவலரும் பயிற்சியாளர்களும் (BRC - Block Resource Person) காணப்படுவர். பள்ளிக்கூடங்ககளைப் பார்வையிட்டு ஆசிரியர்க ளுக்குத் தேவையான அறிவுரைகள் வழங்குவதே பி ஆர் சி பயிற்சியாளர்களின் முக்கியப் பொறுப் பாகும். SSA செயல்திட்டத்தின் கீழ் வரும் ஆசிரியப் பயிற்சிகள் நடத்துதல், தனிக்கவனம் தேவைப் படும் குழந்தைகளுக்குத் தேவையான உதவிகள் வழங்குதல் MIS (Management Information centre) தரவுகளைச் சேகரித்தல், பொதுக்கல்வித்துறை நடத்தும் நிகழ்ச்சிகளுக்குத் தேவையான உதவிகள் வழங்குதல் என்பன பி ஆர் சி யின் முக்கியக் கடமைகள். DIET களின் கல்வி சார் செயல்பாடுக ளுக்கு வட்டார அளவில் உதவி அளிப்பதும் BRC களின் கடமையாகும். பி ஆர் சியின் கல்விசார் செயல்பாட்டாளராகச் செயல்படுவது டயட் துறை ஆகும்.

## CRC (Cluster Resource Centre)

கேரளாவில் பஞ்சாயத்து அளவில் கிளஸ்டர் ரிசோர்ஸ் மையங்கள் செயல்படுகின்றன. பி ஆர் சி யின் செயல்பாடுகளைப் பஞ்சாயத்து அளவில் ஒருங்கிணைத்து நடத்த வேண்டியது கிளஸ்டர்களின் கடமையாகும்.

CRC, கிளஸ்டர் செயல்பாட்டாளர்களின் தலைமையில் செயல்படுகிறது. பி ஆர் சி நடத்தும் கல்வி சார் செயல்பாடுகளைப் பஞ்சாயத்து அளவில் செயல்படுத்துதல், பஞ்சாயத்தின் கல்விக் குழுவைக் கூட்டுதல், பொதுக்கல்வித்துறை செயல்படுத்தும் நிகழ்ச்சிகளைப் பஞ்சாயத்து அளவில் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல். பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் என்பவை சி ஆர் சியின் கடமைகள்.

## தொடர் செயல்பாடுகள்

1 எந்தப் பிரிவுகளில் உள்ள ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் கேரளாவில் உள்ளன? அவற்றின் செயல்பாட்டு விவரங்களைச் சேகரித்து எடுத்துரைக்கவும்.

2. கேரளாவில் ஆசிரியர் கல்வியினால் ஆசிரியர்களுக்குத் தேவையான திறன்கள், பண்புகள், சிந்தனைகள், மனப்பான்மைகள் என்பன உருவாகின்றனவா? விமரிசனபூர்வமாக மதிப்பீடு செய்க.

3. தற்போதுள்ள பணிக்காலப் பயிற்சியின் இயல்பு எத்தகையது? ஆசிரியரை நவீனப்படுத்துவதற்கு எந்த அளவில் துணைபுரிகின்றது?

4 பல்வேறு துறைகளில் புகழ்பெற்ற அநேகம் ஆசிரியர்கள் நம் நாட்டிலும் மாநிலத்திலும் உள்ளனர். டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன். ஓ என் வி குறுப்பு எனும் புகழ்பெற்ற சில ஆசிரியர்களின் தனிநபர் விவரம், புகழ்பெற்ற துறை என்பனவற்றை உட்படுத்தி ஒரு புகைப்பட ஆல்பத்தைக் குழுவிலோ அல்லது தனியாகவோ தயார் செய்க.

## பார்வை நூல்கள்

1. NCERT புரோசர்

2. NCTE புரோசர்

3. DIET புரோசர்

4. CTE & IASE புரோசர்.